
www.padippakam.com

# புதிய கோடாங்கி



ஏப்ரல் 2002 மலர் 1 இதழ் 10 விலை ரூ.15

படிப்பகம்

www.padippakam.com

புதிய

# கோடாங்கி

(மாத இதழ்)

## சந்தா விவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | 15.00 |
| ஆண்டுக் கட்டணம் | 150.00 |
| வாழ்நாள் கட்டணம் | 1,000.00 |

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| அரைப் பக்கம் | 5,000.00 |
| முழுப் பக்கம் | 10,000.00 |
| பின் அட்டை | 20,000.00 |

தொடர்பு முகவரி :
புதிய கோடாங்கி
எம்.ஜி.ஜி. 518, என்.எச்.1,
7 (ப.எண்.15), இளந்திரையன் தெரு,
மறைமலை நகர் - 603 209. காஞ்சிபுரம் மாவட்டம்.
மின் அஞ்சல் : kodangi_ajj@yahoo.com

படிப்பகம்

www.padippakam.com



# புதிய
# கோடாங்கி

## ஏப்ரல் 2002

பார்ப்பன சந்தர்ப்பவாத அரசியல் சதியினால் நாடெங்கும் மதக்கலவரங்கள். கோத்ராவைத் தொடர்ந்த படுகொலைகள் இந்துத்துவ பாஸிஸ வெறியின் அடையாளங்கள். மதவுணர்வைத் தொடர்ந்து எரிநிலையில் வைத்திருப்பதன் மூலம். அரசியல் வெற்றியை நிலைநாட்டிக் கொள்ளும் பார்ப்பன அரசியல் பார்ப்பனரல்லாதோரின் பக்கத் துணையுடன்.

பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து மதக் கலவரங்கள் முன்னெப்போதையும்விட பயங்கர வடிவத்தை எடுத்திருப்பது குறித்து பத்திரிக்கைகள் ஆய்வு செய்து வெளியிட்ட கட்டுரைகள் அபூர்வம். நிகழ்ச்சிகளை மாற்றி மாற்றிப் பிரசுரித்து பல்லுக்குப் பல், பழிக்குப் பழி என்பதுபோல் சித்தரித்து வருகின்றன பொறுப்புள்ள பத்திரிக்கைகள். பாதிக்கப்பட்ட இந்து, முஸ்லிம் இருசாராரின் புகைப்படங்களை வெளியிட்டு. இருசாராரையும் கண்டித்து தமது இந்துத்துவ 'சாய்வை வெளிப்படுத்தி வருகின்றன வெகுசனப் பத்திரிக்கைகள்.

கோத்ரா சம்பவம் குறித்து ஐயத்துக்கிடமற்ற அறிக்கை கிடைக்கவில்லை. தங்களைத் தாங்களே துன்புறுத்த ஏதுவாயிருக்கும் கோத்ரா சம்பவத்தை முஸ்லிம்கள் தொடங்கிவைக்கும் முகாந்திரம் இன்னும் தெளிவாகவில்லை. தெளிவாகியுள்ளது இந்துத்துவ பாஸிஸம்தான்.

oooooooooooo

படிப்பகம்

www.padippakam.com

## 2002 சர்வதேச மகளிர் தினக் காட்சிகள்:

- வீட்டுப் பெண்களுக்கு விரைவில் நல்ல வரன் கிடைக்க கோவிலில் விசேஷ அர்ச்சனை.
- அலுவலகப்பெண்கள் தங்கள் திருமணப் பட்டுப்புடவைகளுடன் மேலதிகாரிகளுக்குஇனிப்பு வழங்க, ஆண்கள் பதிலுக்கு கர்சீப்பு வழங்கி மகிழ்தல்.
- ஜவுளிக்கடையில் விசேஷத்தள்ளுபடி. நகைக்கடையும் அஃதே.
- கணவனைத் தொடர தனியார் துப்பு நிறுவனங்களின் படை.
- அழகு நிலையத்தில் விசேஷ முக அலங்காரம்.
- ஆண் துணைக்கு ஏங்கும் சமையலறைத் தாண்டாத புதுக் கவிதைகள்.
- கிராமப்புறப் பெண்களின் கைகளில் என்.ஜி.ஓக்கள் ஏற்றி வைத்த ஊர்வலக் கொடிகள்.
- ஜீன்ஸ்பேன்ட்,கிராப் தலை,பாப் இசைக் குறியீடுகளுடன் சொந்தச்சாதியில் காதலிக்கும் நவீனங்கள்.

## 2002 காதலர் தினக் காட்சிகள் :

- காதல் => கல்யாணம் => குடும்பம் => வாரிசு எனக் குறிக்கோளுடன் காதல்.
- ஒருவருக்கொருவர் பரிசளித்து காதலை உறுதிசெய்ய விசேஷத் தயாரிப்புக்களுடன் வியாபார நிறுவனங்கள்.
- அதே சாதியில், நிறம், வசதி பார்த்து உண்மைக் காதலில் கடற்கரையை கட்டுக்கடங்காமல் செய்த காதல் ஜோடிகள்.

2002 மகளிர் தினம் – காதலர் தினம். ஆறு ஒற்றுமைகளைக் கண்டுபிடித்து மகிழுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே......

பக்க எண்


அழகியும் புது அழகனும் ............ சுப்ரபாரதிமணியன் 4

பெயரீடு ............ இரா. ஜானகி 6

தனிவழி ............ சிவகாமி 7

நினைவுகள் மரணிக்கும்போது - சிவானந்தனின்
நூற்றாண்டு காலம் குறித்த தியானம் ............ யமுனா ராஜேந்திரன் 14

குஜராத்தில் கொலைவெறி ............ சோதிப்பிரகாசம் 23

நடுநிலையாளர்களின் குரல்கள் ............ புதுவை ஞானம் 26

ரத்னாம்பாள் சரித்திரம் ............ ப்ரதிபா ஜெயச்சந்திரன் 27

கவனியுங்கள் - இந்துத்துவத்தின் மொழியை ............ அ. மார்க்ஸ் 28

பூர்வகாணி(ச்)சாமி ............ தவசி 33

தலித்தல்லாதார் - இடைவெளி
முகிழ்க்கும் வினாக்கள் ............ கௌதம சன்னா 38

'இந்தியா டுடே' : இலக்கிய மலர் - நூல் விமர்சனம் ............ அ. மார்க்ஸ் 45

பயணம் - கவிதைகள் - நூல் விமர்சனம் ............ நிகிலன் 48

கொண்டாறுப்பு ............ அயன்புரம் இராஜேந்திரன் 49

சினிமாவில் கலகம் ............ வேட்டைக்கார கண்ணன் 52

கதை கதையாம் காரணமாம் ............ ஸ்வர மஞ்சரி 57

அன்புள்ள நாகரீக மாந்தரே ............ புதுவை ஞானம் 60

முகத்தில் முகம் ............ 61

அயோத்திதாசர் சிந்தனைகள் ............ 63


படிப்பகம்

www.padippakam.com



# அழகியும், புது அழகனும்

- சுப்ரபாரதிமணியன்

திரைப்பட உலகம் குரூரமும், சூதாட்டமும் கொண்டது. பலியாடுகளின் ரத்தக் கசிவுகளுக்கு மத்தியில் சிலரை மட்டுமே மாலை போட்டு வரவேற்பது. இசை நாற்காலிப் போட்டிகூட.

'அழகி' படத்தில் நடைபெறும் தனலட்சுமி – வளர்மதிக்குமான இசை நாற்காலிப் போட்டியை தங்கர்பச்சானின் தமிழ்த் திரையுலக நெறியாள்கையின் தொடர்ச்சியானதாகக் கொள்ளலாம். ஒளிப்பதிவாளராக பலருடன் ஓடிக் கொண்டிருந்தவர் தனக்கென ஓர் நாற்காலியைப் பிடிப்பதற்காகச் சூதாடவேண்டி உள்ளது. சுயநினைவோடு மனிதன் நடந்து கொள்ள முடியாத நெருக்கடிகள் தண்ணீர் குடிக்கிற இடைவெளியில் வேறு உலகத்திற்குச்சென்று திரும்புவதான 'நிகழ்வு என்று அவரே குறிப்பிட வேண்டியதாகிறது.

முந்திரித் தோப்பில் அறுவடை முடிந்தபின் 'தோப் உட்டாச்சோ' என்ற அழைப்பில் தப்புக் கொட்டை தேடுகிறவர்களுக்கு மிச்சமாய் கொஞ்சம் முந்திரிக்கொட்டைகள் கிடைத்துவிடும். அதுபோல் எவ்வளவு படைப்பாளிகள் படைப்பு தளத்தில் இயங்கினாலும் ஒவ்வொருவருக்குமான வாழ்நிலைத் தளத்தில் படைப்பு அனுபவங்கள் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. அந்தவகையில் தங்கர்பச்சானுக்கும் முந்திரிக்காட்டு நினைவுகளுடன் பிற அனுபவங்களும் எழுத்தாளராகப் பரிமளிக்கச் செய்திருக்கின்றன. இதை மீறித் திரைப்படக் களத்திலும் தீவிரமாக இயங்கி வருகிறார்.

அழகிப் போட்டி இன்று நுகர்வு மையமாகிவிட்டது. உடல் அழகை மீறின பல கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. அழகி பட தனலட்சுமி நல்ல நண்பனாக அவனுடன் வளர்ந்தவள். அவனின் குடும்பம் சிதைந்து போய் விடக் கூடாது என்ற எண்ண முடிவில் "நீ நல்லா இருக்கணும் சண்முகம்" என்று விலகிப் போய் வரும்போது நல்ல நண்பனாக இருந்தவள் அழகியாகவும், பேரழகியாகவும் மாறிவிடுகிறாள். தங்கர்பச்சானும் எழுத்தாளராக இருந்து திரைப்பட நெறியாளுனனாக உயர்ந்திருக்கிறார் என்பது போல்.

குடிமுந்திரி கதையில் கல்லூரியில் படிக்கும் மகனுக்காக குடிமுந்திரி ஒன்று வெட்டப்பட்டு விலை போகிறது. ஷூ வாங்கின அனுபவ முதிர்வில் "நெய்வேலி மரம் இப்போது பொட்டலமாகி கையில் தொங்கிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தது'' என்று முடியும். அதேபோல் இருபத்தைந்து வருட இலக்கிய வாசிப்பு அனுபவமும், பதினைந்து வருட கால ஒளிப்பதிவு அனுபவமும் 'பொட்டலமாகி' அழகியாக இன்று தமிழ்த்திரை உலகில் தென்படுகிறது.

குடிமுந்திரித் தொகுப்பின் சில கதைகள் சிறுகதை இலக்கணத்தை மீறியவை என்று நண்பர்கள் குறிப்பிடுவதையும், இந்த மீறல் புதுவடிவம் என்பதையும் தெரிவிக்கிறார். 15 ஆண்டுகளுக்கு முன் வந்த எனது 'அப்பா' சிறுகதை முன்னுரையில் சுஜாதா அக்கதைகளில் பல சிறுகதைகள் இலக்கணத்திற்கு உட்படாத கட்டுரையாக நீங்கி கொண்டவை என்று எழுதி இருந்தார். அதற்கு தங்கர்பச்சானின் குரு கி.ரா. இலக்கணத்திலிருந்து மீறி வெளிவருவதே புது வடிவம். சுஜாதா சொல்வது போல் 'ஒவ்வொரு ராஜகுமாரிகளுக்குள்ளும்' கதையில் வரும் அசைவ சமையல் முறை வெறும் சமையல் பற்றினக் கட்டுரை விஷயமல்ல; அது கலாச்சாரம் சார்ந்த ஒரு விஷயம். இலக்கணத்தைப் படைப்புகள் மீறுவது புது வடிவத்திற்காக என்று எழுதியிருந்தார். அதை ஆமோதிப்பது போல் தன் சிறுகதைகளின் இலக்கண மீறல் புதுவடிவம் தருகிறது என்கிறார் தங்கர்பச்சான் 'குடிமுந்திரி'யில்.

இந்த வகை மீறலை தங்கர்பச்சான் 'அழகி' படத்தின் திரைக்கதையில் செய்து பார்க்கிறார். வழக்க திரைக்கதை அமைப்பின் மீறலை கூர்ந்து செய்திருக்கிறார்.

வழக்கமாய் நிகழ்வுகாலத்திலிருந்து முழுக்க இறந்த காலத்திற்குச் சென்று திரைப்பட முடிவில் திரும்பும் திரைக்கதையமைப்பு. இதில் நிகழ்காலத்தை அழுத்தமாகத் தெரிவிக்காமல் இறந்த காலத்துடன் தொக்கி நிற்கிறது. இது சற்றே குழப்புவதாக இருந்தாலும் ஒரு புதிய உத்தியாக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு காலகட்டங்களையும், பல்வேறு பாத்திரங்களையும் ஒரு குரல் இணைக்கிறது. குரலின் மூலம் பலர் அறிமுகமாகிறார்கள். சண்முகம் குரலால் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். தனலட்சுமி நீண்ட இடைவெளிக்குப் பின்னால் அழுகை ஒலக் குரலாலே அறிமுகமாகிறாள்.

இளமை எப்போதும் வேகமாய் கடந்து செல்லக் கூடியது. இது பத்திரக்கோட்டை வாழ்க்கையில் தெரிகிறது. இளமை அடுக்கடுக்காய் வேகமாய் நகர்கிறது. படக்கோர்வையில் இருக்கும் வேகம் புது உத்தியாகிறது. கண்ணில் படுவதையெல்லாம் பிரேமில் கொண்டு வருவது நிகழ்கிறது. ஒரு பாத்திரத்தை மையமாக்கி இன்னொரு பாத்திர பிம்பத்தை மங்கலாக்குவது இதிலில்லை. தனலட்சுமி கிடைத்தபின் காமிரா நிதானம் கொள்கிறது. பிரிவு வெகு நிதானத்தை கொண்டு வந்துவிடுகிறது.

தனலட்சுமி, சண்முகத்திற்கானப் பிரிவு அவளின் வாழ்க்கை நின்று போனதாக அவதானிக்கிறது. அவனின் சிந்தனையும் நின்று போககாமிரா நிதானப்படுகிறது. இதன்பின் வரும் பிரேம்களில் தனலட்சுமி வெற்றிடமாய் நிற்பதும், சண்முகம் வெற்றிடமாய் நிற்பதும் தெரிகிறது. இருவரும் நெருங்காமல் இருப்பது கூட வெற்றிடமாகிறது. இந்தக் காட்சிப் படிமம் உள் மனங்கள் தரும் உபாயமாகிறது. குளோசப் காட்சிகள் இருவருக்கும் அரிதாக, வழக்கமாக பேசும் சண்முகம் பேச்சில்லாமல் ஆகிறான். வசனங்களைத் தவிர்த்து சண்முகம் முகபாவம், உடல் மூலம் வெளிப்படுகிறான். அவள் ஏகதேசம் அவனின் வார்த்தைகளைப் பிடுங்கிப் போய்விட்டாள். இந்த வகையில் திரைக்கதையமைப்பு வசனத்தையும், படமாக்கும் இடத்தையும், ஒளித் தன்மையையும் தீர்மானிக்கிறது.

தகவல்களாகத் தரப்படவேண்டியவை காட்சிகளாவதும், காட்சிகளாக இருக்க வேண்டியவை பிறரின் சொல்லாடல் மூலம் தகவல்களாகவும் கட்டமைக்கப்படுகின்றன. இது திரைக்கதைக்கு புதுத் தன்மையை வழங்குகிறது. வாழ்க்கைத் தகவல்களாகப் பரவுவது இதன் அடிப்படையாகிறது.

பிரதானப் பாத்திரத்தின் முகம் மட்டுமே பிரதானமாக மற்ற உரையாடும் முகம் தெரியாமல், தகவல்கள் பரவுவது பார்வையாளனை கூர்மைப்படுத்துவதாக இருக்கிறது. ராகி அள்ளிப் போடுபவனுக்கு தனலட்சுமி பற்றினப் பலத் தகவல்களை பெண்ணொருத்திச் சொல்வது. தகவல்களாக நம்மை வந்தடைபவை அதிகம் தாக்கம் கொள்வதற்கான முன்னுதாரணங்களாக இவற்றைக் கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

Fade in/ Fade out இருட்டு பல பிரேம்களில் எடுத்துக்கொள்ளும் காலம் அதிகமாக இருக்கிறது. காட்சி விரிதலும், காட்சி மறைதலும் மெதுவாக நிகழ்கிறது. ரசிகனின் சிந்தனைத் தளத்திற்காக இந்த வகை இருட்டின் அடர்த்தியும், கால நீட்சியும் உதவுகிறது. இது மௌனமாயும், அதிர்ச்சியாகவும் அமைகிறது. படஇறுதியில் இருட்டில் கேட்கும் விசும்பல் அதிர்ச்சி தரும் பூரண இருட்டாகிறது. நேர் கோட்டுப் பாண் தவிர்த்திருப்பதில் பல தொழில்நுட்பச் சௌகரியங்கள் நிகழ்கின்றன. குரல் படத்தை நகர்த்துவதை பாலு தொலைந்தபின் முக்ய அம்சமாக்குகிறது.

திரைக் கதையின் பல மாற்றங்களைத் தீர்மானிப்பது மௌனம். பல வசனங்களுக்கு மாற்றாக இசை பயன்பாடாகியுள்ளது. படத்தில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தில் மட்டும் இசை பின்னணியில் இருக்கிறது. மற்ற நேரங்களில் பின்னணியிசையற்ற மௌனம் படத்தை நகர்த்துகிறது. இசைத் தேவையென வழக்கமாய் ரசிகன் நினைக்கும் இடங்களில் மௌனம் பீறிடுவது புது உத்தியாகிறது.

வழக்கமாய் ஒரே டியூன் மனதில் பதியுமளவிற்கு திரும்பத் திரும்ப வரும். இதில் அதற்கு எதிரான உணர்வுகளில் அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சியின் குறியீடான இசை, குறிப்பு சோகமாவது சுலபமாகிறது பல இடங்களில். ஒரு நொடியில் சிரிப்பும், அழுகையும் மாறி வரும் முகபாவம் போல இசையின் பீறிடல் மகிழ்ச்சிக்கும், இரக்கத்துக்குமாக மாறி மாறி அமைகிறது. பல வாழ்க்கைச் சம்பவங்களை ஒருங்கிணைக்கும் விஷயமாக இசை அமைந்து விடுகிறது. படக்கோர்வையும், இசைப்பின்னணியும் புது மீறல் உத்திகளாக இப்படத்தில் அமைந்திருக்கிறது. தமிழ்த் திரைஉலகின் தன் இருப்பினை நியாயப்படுத்தும் முயற்சிகளைத் தொடர்ந்து தங்கர்பச்சான் மேற்கொள்வார் என்பதன் அடையாளமாய் இப்படத்தை எடுத்துக் கொள்ளலாம்.

(கோவையில் விஜயா பதிப்பகம் நடத்திய 'அழகி' திரை விழாவின் உரைச் சுருக்கம்).

●

# பெயரீடு

— இரா. ஜானகி

எப்பவும் வம்பு பிடித்தது
மற்றவைகளின் சமரசத்தால்
என்னுள்ளும்
அனுமதிக்கப்பட்டதின் துணையுடன்
அடையாளக் குறியாய் நசநசப்பது.
காற்றுத் தினற
அறையை அடைப்பது
அதே வாசம்தான் —

எங்கேயோ கிடத்தப்பட்ட மையும்
உச்சி மசுரை வாங்கும்,
இரும்புத் துண்டும் ;
வேப்பிலையும்...
மைதானத்திற்கு சொன்ன மாதிரியே
தைரியத்திற்காய் கடத்தப்படுபவை..

சொரசொரப்புடனேயே இருப்பது
எப்படியாவது பிடித்துப் போகும்
சில சமயங்களில்
இதையே
அம்மாவினிடமும்,
வெறுந் தலையுடன்
தலைவிரிக் கோலமாய்
முன் சொன்ன ஏற்பாடுகளின்
வந்து போகும்
அவள் போன்றோரிடமும்
வழக்கமான நிறத்தில்
அதே வாசம்
நினைப்பையும் முந்தி நிற்கும்!

அடையாளத்திற்காய்
பெயர் தாங்கி நிற்பவர்கள்
கவனத்தில் நிறுத்தப்படுவதில்லை...



படிப்பகம்

www.padippakam.com

# தனிவழி

- சிவகாமி

நீ நடந்து கொண்டிருந்தாய். ஜப்பானிய உறைவாள் போல மனம் காலத்தில் உறைந்து கிடந்தது. மந்தகதியைப் போக்கிக் கொள்ள திசைகளறியாது நடக்கத் துவங்கியபோது.....

சக்குரா மலரும் பருவம். மரக்கணுக்களில் இலைகளின்றி கட்டியிருந்தன வெளிர் ரோஜா வண்ண சக்குரா பூங்கொத்துக்கள். எங்கும் பசுந்தளிர். பனிக்காலத்தைத் தொடர்ந்த ருது. பருவத்தின் நரம்பு இன்னும் உன்னில் படரவில்லை. தனிமையின் வடுக்கள் குழிந்திருந்தன இறுகிய தசைநார்களில்.

நுரைப்பந்து போன்ற சிறுசுகளை குழந்தைகள் காப்பகத்தில் உலாவச் செல்வதற்காக சறுக்கு வண்டிகளில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். எல்லாப்பருவத்திலும் குழந்தைகளின் கன்னங்களில் திற்றிய சிகப்பு. நீ சற்று இளகி புன்னகைத்தாய்.

"கோவாய்....கோவாய் ஹித்தோ" வீரிட்டனக் குழந்தைகள். காப்பகத்தில் வேலை செய்யும் இளம்பெண் வெட்கி,

"உருசாய்.....உருசாய்" இரையாதீர் என சமாதானப் படுத்தினாள். நீ சங்கோஜத்துடன் இடம்பெயர்ந்தாய். கறுப்பு நிற மனிதனைக் குழந்தைகள் அங்கே அரிதாகவேக் காணுகிறார்கள் எனச் சமாதானம் அடைந்தாய்.

ரயிலில் ஏறிப்போக போதிய பணம் உன்னிடம் இருந்தது. இரண்டு நிமிடத்திற்கொருமுறை வரும் அந்த ரயிலை நீ தவறவிடலாம்கூட. ஒன்றும் அவசரமில்லை. எனினும் பழக்கம் காரணமாக விரைந்து ஏறிக் கொண்டாய். அப்பழுக்கில்லாத, மரூன் வெல்வெட்டு இருக்கையில் சுகமாக அமர்ந்து சகப் பிரயாணிகளைக் கவனித்தபோது யாரும் உன்னை கவனிக்கவில்லை. இது உனக்குப் பழக்கமில்லாததால் வருத்தம் அளித்தது. அவர்களுக்குள்ளாகப்பேசிக்கொண்டும், புத்தகம் படித்துக் கொண்டும், கீற்றுப் போன்ற கண்களை வெறுமனே மூடிக்கொண்டும் வந்தார்கள். ஆயாசம் மேலிட்டது உனக்கு. சீர்வரிசையானப் பற்கள் அவர்களுக்கில்லையேயென தனியானதொரு மானுடவியல் ஆராய்ச்சிக்குள் புகுந்தாய்.

ஷின்ஜிக்கு பேரரசர் பூங்காவில் இறங்கிக்கொள்ள முடிவு செய்தாய். இறங்கியவர்களுக்கென காத்திருந்தவர்கள் வரவேற்று பூந்தோட்டத்துக்கு அணிவகுத்தனர். உனக்கு அங்குயாருமில்லை. எங்குமேயில்லைஎன அதற்குள் உன்னில் பிளவுபட்டாய்.

பேரரசரின் தோட்டக்காரன் இம்முறை சாமந்திப் பூக்களை வேறுவிதமாக வடிவமைத்திருந்தான். ஒரே செடியை கம்பிகளுக்கிடையில் வளைத்து வளைத்துத் தேர்போலாக்கி, எல்லா முனைகளிலும் பூ மலருகிறமாதிரி செய்திருந்தான். ஒரே அளவில் ஒரு செடியில் பூத்திருந்தன எட்டுநூற்றி எழுபத்தியாறு பூக்கள். வியப்பில் உன் தனிமை விலகிக் கரைந்தது. எல்லோரும் வியப்புற்று

"கீரேய் தெஸ்னெ....ஈ...னெ....சுபராஷ்ஷி"

அழகு, நல்லாருக்கு, வியக்கத்தக்கது என்று கூறி மகிழ்ந்தார்கள். தோட்டக்காரனின் கைவண்ணம் நெகிழ்த்தியதில் அவன் கைகளை அவனறியாதவாறு காற்றால் ஒற்றியெடுத்தாய். பனிப் பாறைகள் நொறுங்கி கன்னங்களில் நெறுநெறுவென வெம்மை ஏறவும், கண்களில் நீரொழுக்கு வடிந்துவிடாது ஈரப்படுத்தியது. கடந்த பத்துநாட்களாக ஒருவார்த்தையும் பேசாத உன் இதழ் விரிந்தபோது ரகசிய வாசனைக் குப்பி உடைந்து மணமுண்டாக்கியது உன்னுள். புது உமிழ்நீர் தாடைகளில் பாய்ந்து சுரந்தது. தாறுமாறாகப் பூசப்பட்ட வண்ணக்கலவையாக வானம் வசீகரம் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

மயிலிறகு போன்ற சாமந்திக் கீற்றுக்களின் நிழலைத் தேக்கி நடந்தபோது ஜப்பானியத் தேநீர் விடுதி சமீபித்தது. உன்னிடம் போதிய பணமில்லை. சலனமின்றி நடந்தாய். வளர்ப்பு நாயொன்று அதற்கானக்குழாயில்வாய்பொருத்தி நீரருந்த. நீ மனிதருக்கான குழாய் ஊற்றில் மேலெழும்பிய நீரைக் குடித்தாய். அது நிறுத்தி உன்னைப் பார்த்தது. நீயும் பார்த்தாய். உடனே அதன் வார்ப்பட்டைச் சுண்டியிழுக்கப்பட்டது. அது விரைந்தது. நீ அதைச் சற்று நேரம் பார்த்திருந்தாய்.

பூங்காவின் வேறொரு பகுதியில் உதிர்ந்த சக்குரா மலர்ப்படுக்கையில். மலருடல் பெண்கள் மல்லாந்திருந்தனர் கிடார் இசைக்கும் இளைஞர்கள். அங்கங்கே அமர்ந்திருக்கும் குடும்பங்கள். நண்பர்கள் குழாம். குடி. உணவு. சிரிப்பென நிலவெழும் நேரத்தில் பேரரசர் தோட்டம்ஒளிவீசியது.அவ்வப்போது ஆம்புலன்ஸ் அலறிக்கொண்டே விரைந்தது. அநேகமாக இது பத்து நிமிடத்திற்கொருமுறை நடந்தது.

ஒஹனாமியெனும் சக்குராப் பருவத்தில் மிதமிஞ்சிக் குடிப்பதும். ஆஸ்பத்திரிக்கு அள்ளிக் கொண்டு போவதும் சகஜம்தான். பயப்பட ஒன்றுமில்லை. அவர்களோடு சேர்ந்து அமர தற்காலிகமாக விருப்புங்கொண்டாய். ஆனால் உனக்கு சிறிது நேரம் அவர்கள் மொழியில் உரையாடியதுமே சலிப்பும் தலைவலியும் வந்துவிடுகிறது. வாடிக்கையாகக் குடிக்குமிடம் ஃபுஜிமிகவோகா ரயில்நிலையத்திற்கு அருகாமையில் இருக்கிறது. அங்கு மதுவழங்கும் பெண்ணைப் பார்த்துக் கொண்டேயும் குடிக்கப் பிடிக்கிறது. ஆனால் அவளைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை. இதைக் குறித்துக் கூட நீ குமைந்திருக்கிறாய்.

தெரியும். உன் கால்கள் அங்கே உன்னைக் கொண்டு சேர்க்கும். வெளிப்புறக் கண்ணாடிக் கதவருகில் நின்று அவள் இருக்கிறாளா என எட்டிப் பார்ப்பாய். அவள் இருந்தால் மட்டுமே அங்கு செல்வாய். ஜப்பானியப் பெண்களிடம் கருப்பர்களுக்கு மவுசு என்று ஒரு கருப்பன் உன்னிடம் சொன்னான் அதை நீயும் நம்பிவிட்டாய். யாக்கித்தோரியெனும் குச்சியில் கோர்க்கப்பட்டு அனலில் வாட்டப்பட்ட பறவைக் கறி விற்கும் கிழவி உனக்கு இங்கேயே தங்கிவிட விசா வேண்டுமா எனக் கேட்டாளே. ஞாபகமிருக்கிறது உனக்கு!

உன் மூக்கு நீளமாக இருக்கிறது என்று திருவிழாச் சந்தையில் ஒரு இளம்பெண் கூறினாளே. இம்மாதிரி விஷயங்களை மறப்பதில்லை நீ. விசாக் கருதி பல முறை விவாகரத்தானக் கிழவிகளைக் காதலிக்கும் உன் நாட்டவரை உனக்குத் தெரியும்.

பூங்கா சந்தடியிலிருந்து விலகி. ரயில் சந்தடியில் கலந்தாய். எங்கு பார்த்தாலும் ஒபாச்சான்கள். ஒஜிசான்கள். ஜப்பானில் பாதிப்பேர் தாத்தாக்கள் பாட்டிகள். இளம்பெண்கள் திருமணம் செய்வது குறைந்து வருகிறது. பிள்ளைகள் பெற்றுக் கொள்ள ஏகப்பட்ட சலுகையிருந்தும் பலனில்லை. அறுபதைத் தாண்டியவர்கள் தாங்கள் இளைஞர்கள் என்று மல்லுக்கு நிற்கிறார்கள். சேமிப்பு. ரயில் பயணச்சலுகை. மருத்துவக் காப்பீடு என முதியோர்கள் பாடு பரவாயில்லை.

ரயிலில் கூட்டம். ஜப்பான் ரெயில்வேயின் 'தள்ளு சிப்பந்தி' உன்னைப் பிடித்து உள்ளே தள்ளினான். இல்லாவிட்டால் கதவிடுக்கில் மாட்டிக் கொண்டிருப்பாய். அந்தத் 'தள்ளு' வெறும் தள்ளுவதாக மட்டும் இருந்தது உனக்கு ஆகவாசமாகஇருக்கிறது. திரும்பிய இடமெல்லாம் குப்பென மதுவாடை. பூங்காவிற்குப் போகும்போது கண்ணியமாகக் கண்ணை மூடிக்கொண்டு வந்தவர்கள். திரும்புகாலில் மறைகழன்றது போல் கொப்பளித்துச் சிரிக்கிறார்கள். நீயும் குஷியுடன் வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்துவிட்டாய்.

ஒற்றை அறையென்று பெயர் ஒரு அறையின் கால்பகுதிதான் அது. அதுவே உனக்கு சுமை. இன்றாவது வெந்நீர்க் குளியல் செய்தாலென்ன நீ?

அறைக்குச் சென்று கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டு. குறுகிய அறையில் பழக்கம் காரணமாக இடிபடாமல் வெளியில் வந்தாய். 'ஒன்சேன்' நோக்கி நடந்தாய்.



படிப்பகம்

www.padippakam.com

வளைவுக்குள் அடைபட்ட விசாலமான இடத்தில் மஞ்சளற்ற கரும்பச்சை நிறத்தில் பெரிய மூங்கில் குத்துக்கள். ஜப்பானிய கல்பகோடாக்கள். எங்கிருந்தோ மலைப்பகுதியின் இயற்கை வெந்நீருற்று மெலிதாக குளத்தில் இறங்கியது. இன்னொருபுறம் உள்ளூர் வெந்நீர் விழுந்து கலந்தது. இயற்கை வெந்நீரூற்றிலே குளிக்கவேண்டுமானால் நீ ஃப்புஜிசானுக்கு அருகிலுள்ள யமகாத்தோ பகுதிக்குப் போகவேண்டும். பனி தலையில் கொட்ட, உடல் நாற்பது டிகிரி கொதிநீரில் அமிழ, சுற்றி பனிபரவிய காடுகளைப் பார்த்துக்கொண்டேயும், சூடான சாக்கே அருந்தியவாறு.. கிடக்கலாம் மணிக்கணக்கில்.

நீ துணிகளை முழுதுமாகக் களைந்து பூச்சாரலில் நின்று உடம்பைக் கழுவிக் கொண்டாய். துண்டைப்பிழிந்து தலையில் கட்டிக் கொண்டாய் முடி உதிரா வண்ணம். குளத்தில் மெல்ல நீந்தி இயற்கையூற்று வருமிடத்தில் நின்றுகொண்டாய். நாற்பது டிகிரி வெப்பம் உன்னைத் தளர்த்தி நெகிழ்த்தியது. நிறைய பேர் அமைதியாக நீரில் உளைந்தவாறிருந்தனர். அவர்களைக் கண்ணுற்றதும் உன் ஆராய்ச்சி துவங்கியது.

"சிச்சாய்" ரொம்பச் சிறியது குழந்தைகளுடையதைப் போல் என வியப்பு. நீயும் கவனிக்கப்படுகிறாய். "ஒக்கி...னெ" ரொம்பப் பெரிது என அவர்கள் வியப்பது உனக்குத்தெரியும். முன்புபோல் நிர்வாணம் உனக்கு பிரமிப்பூட்டவில்லை.

வெப்பத்தில் கர்புஜாப் பழங்கள் போல் கன்றிப்போகின்றது அவர்கள் நிறம். இளைஞர்கள் வீங்கிப் பளபளப்புக் கொள்கிறார்கள்– கண்ணாடிபோல். பச்சை நரம்புகள் கொடிகளாய் அவர்கள் தேகங்களில் பரவியிருப்பதைப் பார்க்கிறாய். தண்ணீரிலிருந்து ஆவி மெல்ல அங்குமிங்குமாகப் பரவி, உறிஞ்சுகுழல் அருகே சென்றதும் விசுக்கென மறைகிறது. குளத்தையொட்டிய விறாந்தையில், குழாயடியில் முதுகு, பாதம், உறுப்புக்களின் அழுக்கை, சொர சொரப்பான ப்யூமிக் கற்கள் கொண்டு தேய்த்தவண்ணமிருக்கிறார்கள் – சில வயதானவர்கள். நீ அவர்களைக் கவனித்தவாறிருக்கிறாய்.

நா வரண்டு, உடல் தணல் துண்டு போலானதும், உறைநீரில் விழுந்தாய். நீயறியாது உன் குரல் மாற்றத்தை 'க்ரீச்' என்றது. பலர் திரும்பிப் பார்த்தனர். விரிந்த தேகம் குளிரில் இறுகுகிறது. குளிர்நீர் முகத்திலும் தவழ, புத்துணர்வுப் பொங்குகிறது.

மெலிதான குளிருக்கு கையில்லா ஜாக்கட்டு அணிந்து, எதிர்காற்றில் விரைந்தாய்.

வழியில்தான் பூக்கடை. அயாக்கோ இருப்பாள். மரம், செடி, கொடி, புல் இவை மட்டும் பூப்பதில்லை. அவள் கற்பனையில் ஆட்டுக்கல், பிரம்புக்கூடை, அரிவாள் கைப்பிடி, விளக்குத்தண்டும் பூக்கும். அயாக்கோ இக்கேபானா மட்டுமின்றி அய்ரோப்பிய பூ அலங்காரமும் படித்தவள். அவளிடம் ஒருநாள் மதுக்கடைக்காரிக்காக பூங்கொத்து வாங்கினாய். அவள் இணக்கமாகச் சிரித்தாள். வெளியே, குழிந்த கல்லில் கைப்பிடி மண்ணிட்டு அவள் வளர்த்த படர்தாவரம் மூச்சுவிட்டதுபோல் ஒரு மொக்கு வைத்ததை அதிசயத்துடன் பார்த்தாய். இன்று நீ அயாக்கோவுடன் மதுக்கடையில் குடித்து உல்லாசமாயிருந்தால் என்ன?

அதிகம் இழுக்காமல, ஆச்சரியப்படுத்தாமல், கொசுறு சப்தங்கள் இல்லாமல் கிசுகிசுப்பாய் இருக்கும் அவளது பேச்சு. அவ்வப்போது பளிச்சிடும் சிங்கப்பல். கேசம் பட்டு ஊசிகளைப் போல் பளபளத்துத்தொங்கும். ஒரு நாள் உன்னைக் கடைக்கு அழைத்து பருக தேநீர் தந்தாள். தேநீரின் கசப்புடன், நீ சிகரெட்டை உருவியபோது அவள் உனக்குப் பற்றவைத்து தானும் ஒன்றை உதட்டில் பற்றிக்கொண்டாள்.

உன் கண்ணின் கறுப்பு அவளுக்குப் பிடித்தது. நீ வெளிக் கிளம்பும்போது "கி ஓ சுக்கெத்தே குதசாய்" அவள் மிக்க அன்புடன் கூறினாள். அவை வெறும் "கவனம்" என்னும் சம்பிரதாய வார்த்தைகள் இல்லை. அவளுடன் மலைகளின் விநோதத்தாவரங்கள் தேடி புறப்பட வேண்டும் என நினைத்தாய் அக்கணத்தில்.


படிப்பகம்

www.padippakam.com

அவள் கடையை நீ நெருங்கும்போது அவள் கடையைப் பூட்டிக்கொண்டிருந்தாள். அவளருகில் சிலும்பிய நீளமுடியுடன் நடுத்தர வயதினன். நீ விரைந்து கடந்தாய் அவர்களை. ஜப்பானியப் பெண்ணைக் குடிக்க அழைக்க இயலாதாவாறு உன் ஜோபி கனமற்றதாய் இருக்கிறது.

ஒரு நாள் ஒக்கமோத்தோ 'பன்னி கேர்ல்ஸ்' என்னும் உயர் ரக மதுக்கடைக்கு அழைத்துச் சென்றான். மார்புகளில் புஸ்ஸென உப்பிய பன்களும், புட்டங்களில் வாலுள்ள அலங்கரிக்கப்பட்ட பன்களுமாக,பதினெட்டுவயது மங்கைகள் மதுவழங்கியவாறிருந்தனர். நீ வைத்த கண் வாங்காது அவர்களைப் பார்ப்பதைத்தடுக்க, ஒக்கமோத்தோ அவனுக்குப் பழக்கமான ஒரு பெண்ணின் மார்பை ஹார்ன் அடிப்பதுபோல் அழுத்த, அவள் சிரித்துக் கொண்டே அந்த பன்னைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள். புதிர் விடுபட்டவன்போல் நீ ஆசுவாசமாகக் குடிக்க ஆரம்பித்தாய். தலைமுடியிலிருந்து கால் நகம் வரை அலங்கரிக்கப்பட்டப் பெண் உங்கள் இருவருக்குமிடையில் அமர்ந்தாள். அவள் தனது கிளாஸில் ஒக்கமோத்தோ ஒயிலாகச் சரித்த விஸ்கியை ஏந்தி 'கம்பய்' சொன்னாள். அவள் புன்னகை உன்னைக் கவர்ந்தது - அவள் முகப்பூச்சும், அடர்ந்த உதட்டுச்சாயமும் உனக்குப் பிடிக்கவில்லையென்றாலும். உனது நண்பன் அடிக்கடி அவள் தொடையை வருடிக்கொடுத்தான். அவள் எதுவும் சொல்லவில்லை. உனக்கும் அப்படிச் செய்ய விருப்பம் எழுந்தது. கறுப்புப்பட்டு உடையில் இடைசிறுத்த அவள் இதோ வருகிறேன் என்றவாறு அடுத்த மேசைக்குச் சென்றாள்.

சிறிது நேரத்தில் சிரித்தால் கன்னங்குழியும் பெண்ணொருத்தி அவளுக்குப் பதிலாக அமர்ந்தாள். எனினும் முந்தியவளையே நீ பார்த்துக் கொண்டிருந்தாய். அவள் தொடையில் மற்றொரு வாடிக்கையாளன் விரல் தாளம் போடுவதும், அவள் சிரிப்பதும் நடந்தது. இதற்குப் பிறகே நீ கன்னங்குழிபவள் மேல் கண்பதித்தாய். ரொம்ப நாட்களாக ஏன் ஒக்கமோத்தோ வரவில்லை எனச் செல்லமாகக் கேட்டாள். அவள் நாளுக்கு நாள் இளமையாவதின் ரகசியம் கேட்டான் ஒக்கமோத்தோ. ஏன் மூன்றாவது முறையாக என்னைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறாயா. அவள் கேட்டதும் நீங்கள் மூவரும் சிரித்தீர்கள். திருமணம் நகைப்புக்குரிய விஷயமாயிருப்பது கண்டு நீ அதிர்ந்துவிடவில்லை. உரையாடல் சிப்ஸ் போல் கொறிக்கப்பட்டது. சிதறி விழுந்த வார்த்தைகள் மதுவுடன் கலந்து அர்த்தமற்றதுதான் அர்த்தமுள்ளது என்று உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தன.

கன்னங்குழிந்தவளை எழச்சொல்லி உத்தரவு பிறப்பித்து அவளிடத்தை ஆக்கிரமித்தவளைக் கண்டு நீ உறைந்துவிட்டாய். கூர்மையாக்கப்பட்ட வாளால் பிசிறின்றி அறுத்துச் செதுக்கப்பட்ட பனிச்சிலை போன்று வெளேரென்றிருந்தாள் புதியவள். கன்னங்களில் மட்டும் கண்ணாடிச் சிவப்பு. கண்கள் சாய் கோணமாகி,காதுவரை நீண்டிருந்தது. மூக்குநுனி சிற்றெறும்பும் சறுக்கிவிழும் கூர்மை. வெள்ளை கவுன் மார்பு வரைக் குழிந்து, கவனந்திருப்பியது பிரகாசித்த பொடி வைரம்.

"கனோஜோ வா ஆன் சான் தெசு"

வியப்பை முறித்து ஆன் என்னும் அவளை அறிமுகம் செய்தான் ஒக்கமோத்தோ.

"கொம்பாவா".

அவளின் மாலை வணக்கத்தில் அந்நியம் ஊடுருவியிருந்தது. அவள் கொரியாவைச் சேர்ந்தவள் என மேலும் விளக்கினான். இளவரசியைப்போல் மிடுக்காகச் சிரித்தாள். அது அவளுக்குப் பொருத்தமாகத்தான் இருந்தது. விரைவில் அவள் மகளென்று ஒருத்தி அறிமுகமானாள். இருபது வயது எப்படி இன்னொரு இருபது வயதுக்குத் தாயாக இருக்க முடியும் என வியந்தபோது, மகள் ஒக்கமோத்தோவின் தலைமயிரைக் கோதினாள். அம்மாவும் மகளும் தங்கள் தம்ளர்களில் 'மிகவாரி'யை நிரப்பிக் கொண்டனர். ஒக்கமோத்தோ மற்றொரு பாட்டில் விஸ்கிக்கு ஆர்டர் செய்தான்.

மதுவிடுதியிலிருந்து கிளம்பியபோது எதற்கு இதெல்லாம் என யோசித்தாய். ஏனெனில்



படிப்பகம்

www.padippakam.com

ஒக்கமோத்தோ கணிசமாக செலவு செய்திருந்தான்.

''என் தந்தை இறந்ததிலிருந்து மதுவருந்தாமல் இருந்தேன். உனக்காகத்தான் இங்கு வந்தேன்''

அவன் கூறியது உனக்கு வியப்பளிக்கவில்லை. அது உண்மைதான்.

அவன் தந்தை இறந்த செய்தியை நீ கேள்விப்பட்டாய் ஒனோ மூலம். ஒனோ உனக்காக ரயில்நிலையத்தில் காத்திருந்தான். அவன் கறுப்பு உடையில்–டையில் இருந்தான். நீயும் அவ்வாறே இருக்க வேண்டும் என எதிர்பார்த்தான். ஆனால் உன்னிடம் கறுப்பு டையில்லை. கலர் டையைக் கழற்றிப் பையில் திணித்துக் கொண்டாய். உள்ளாடைகள் நிறம்பற்றி நீ சிந்தித்தாய்.

ரயிலில் அருகருகே அமர்ந்தபோது அவன் உன்னிடம் காலிக் கவர் ஒன்று கொடுத்து அதற்குள் ஐந்தாயிரம் யென் போடச் சொன்னான். அந்த உறை கறுப்புமசியினாலான கோடுகளைக் கொண்டிருந்தது. திருமணம் – சுபக்காரியங்களுக்கு சிவப்பிலோ அல்லது பொன்னிறத்திலோ நெல்மணிச் சித்திரங்கள் இருக்கும். அவன் கேட்டவாறு ஐந்தாயிரம் யென் தாளை வைத்தாய். அவன் தான் பத்தாயிரம் யென் தருவதாகச் சொன்னான். ரயில் நிலையத்தில் கறுப்புத் துணியில் வெள்ளையெழுத்துக்கள் கொண்ட கொடியைப் பிடித்தவர்கள் வழிகாட்டினார்கள். தெருமுனைகளிலும் முக்கியமானத் திருப்பங்களிலும் கூட தென்பட்டார்கள் வழிகாட்டுபவர்கள்.

புத்த வழிபாட்டு அறைகள். பின எரிப்பான்கள். பிணவறைகள். பின்னால் நினைவு மண்டபங்கள் கொண்ட சுடுகாட்டுடன் கொண்டிருந்தது இழவு மண்டபம். நுழைவாயிலில் இறந்தவரின் நிழற்படம் பூங்கொத்துக்களுக்குள் புதைந்திருந்தது. உள்ளறையில் கறுப்புப் பெட்டியில் பிணம் கிடத்தப்பட்டிருந்தது. உள்ளே எலும்புகள் மாவாகி விட்டனவோ என எண்ணும்போல் வற்றியப் புழுபோல் பிணம்.

பிறப்பின் போது ஷிண்டோ சமய வழிபாடு. இறப்பு புத்த வழிபாட்டு முறையில். திருமணம் விரும்பும் வகையில். நீண்ட அங்கி. மொட்டைத் தலைகளுடன் பிக்குகள் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். நிப்பாணத்தை அவர்கள் முகங்களில் தேடிக்களைத்தாய். பிக்குகள் குடிப்பதுண்டு. மனைவி மக்களுடன் வாழும் பிக்குகளும் உண்டு. இழவு விழுந்தால் ஆன்மாக்களை சொர்க்கலோகம் அனுப்புவதற்கென பிக்குகள் காசு கறக்கிறார்கள். இழவு மொய் அதிகம்தான் என எண்ணிக்கொண்டாய்.

க்யூ சான் 'சோக்க கக்காய்' எனும் புத்தமதப் பிரிவைச் சேர்ந்தவள். அவள் அதிலே குழுத்தலைவி என்று கூடப்பேசிக்கொண்டார்கள். அவள் எப்போதுமே தனியாகவே இருந்தாள். படிக்கும்காலத்தில், லண்டன் டாக்டருடன் குடும்பம் நடத்திவிட்டு. அவன் திருமணம் செய்ய மறுத்துவிட்டதால் டோக்கியோ வந்துவிட்டதாகக் கேள்விப்பட்டாய்.

தாமரைச் சூத்திரத்தில்தான் வாழ்க்கையின் சூக்குமமே அடங்கியிருக்கிறது என்றாள். அதை விரிவாய்ச் சொல்லி விளக்கும்படி கேட்டதற்கு 'அது உனக்குப் புரியாது' என எரிந்து விழுந்தாள். உனது உள்ளார்ந்த கேலியை எப்படியோ கண்டுகொண்டாள். எனினும் ''சோக்க கக்காய்'' கூட்டத்திற்குச் செல்ல நீ விருப்பம் தெரிவித்தபோது பத்தாயிரம் யென் செலவாகும் என உன்னை வென்று விட்டாள்.

அன்று 'க்யூ'வின் பல் உடைந்து விடுப்பில் இருப்பதாகக் கேட்டதும் உனக்கு மகிழ்ச்சியானது. 'கணக்கில் நான் புலி'' என அடிக்கடி உறுமியதும். எல்லோரிடமும் கடுகடுப்பாகப் பேசுவதும் நினைவுக்கு வந்தது. விடுப்பு முடிந்து வந்தபோது ''எப்படி நடந்தது இது?'' நீ கேட்டாய். ''தவறி விழுந்துவிட்டேன்'' அவள் மீண்டும் உன்னிடம் அதட்டலாகப் பேசத் தலைப்பட்டாள். நீ அவள் சொன்ன காரணத்தை நம்பவில்லை என எப்படி கண்டுபிடித்தாள்? யுக்கி, க்யூவுக்கு பயந்து நடந்தாள்.


படிப்பகம்

www.padippakam.com

"க்யூ சான் வா எலாய் ஹித்தோ தெஸ்னெ.... நாந்தெமோஜோஸி" க்யூ அறிவாளி, திறமைக்காரி எனப் போற்றினாள். அவளுக்குத் தாமரை சூத்திரத்தைச் சொல்லிக் கொடுத்திருப்பாளோ – ஐயப்பட்டாய்.

யுக்கி சொன்னாள் அவள் வீட்டில் குளிப்பறை கிடையாதென்று. கட்டணக் குளியலறையைத்தான் பயன்படுத்துகிறாளாம். இது அவள்மேல் ஆர்வங்காட்டச் செய்தது. அவள் மதிய வேளைகளில், கடற்பாசித்தாளான நொரியில் பொதிந்த ஒரு கவளம் சோற்றுருண்டையை மட்டுமே உண்கிறாள். ஒரெயொரு 'ஒனகிரி' போதுமா எனக்கேட்டபோது 'ஒனகா கா இப்பை' என்று நிறைந்துவிட்ட வயிறைத் தட்டிக் காண்பித்தாள்.

க்யூவிடம் பரிவு காட்டியிருந்தால் அவள் உனக்குப் புறநகரில் காலியாக இருக்கும் தன் தந்தையின் வீட்டை குறைந்த வாடகையில் தந்திருப்பாள். தாமரை சூத்திரம் கற்றுக் கொடுத்திருப்பாள். தன் செலவில் 'சோக்க கக்காய்' கூட்டத்திற்குச் சென்று வந்திருக்கலாம். மதிய உணவில் ஒரேயொரு ஒனகிரி உண்ணும் குளிப்பறை இல்லாத வீட்டில் குடியிருக்கும் யுக்கியுடன் நட்பு பாராட்டுகிறாய். உன் தலைவிதியை யாரால் மாற்ற முடியும்?

யுக்கி விவாகரத்தானவள் தகுந்த மாப்பிள்ளைத் தேடும் படலம். சுழற்சி முறை கடையில் மிக மலிவாக வாங்கிய உயர் ரகத் துணிகளைப் போட்டுக் கொண்டு வருகிறாள். பார்க்கப் புதுசு மாதிரியே இருந்தது. யார் புதுசு, யார் பழசு ஆராய்ச்சியில் சிறிது நேரம் செலவிட்டாய்.

தினசரியில் படித்த செய்தி உனக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'ஓம்' எனும் சமயப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஓடும் ரயிலில் விஷவாயுவைத் திறந்து பலபேரைக் கொன்றார்கள். 'ஓம்' பிரிவை நீ வெறுத்தாய். இந்தியச்சாமியார்களின் நீள் ஜடாமுடிகளும், 'ஓம்' தந்திரங்களும் உனக்கு அந்நியமானவை அல்ல. 'ஓம்' கடைப்பிடித்து ஒழுகும் முக்கியப்புள்ளிகள் பிடிபட்டார்கள். வழக்கு நடந்துகொண்டு இருக்கிறது. கோர்ட்டை முந்திக் கொண்டு ஜப்பானிய ஜனங்கள் அந்தப் பிரிவு மக்களைத் தண்டித்து விட்டார்கள். 'ஓம்' பிரிவினருக்கு வீடு வாடகைக்குக் கொடுக்க முடியாது. அவர்களின் குழந்தைகள் பள்ளியில் பயில அனுமதியில்லை. அவர்கள் எளிதில் அடையாளங் காணப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள்.

பண்பும் பணிவும் மிக்கதானது ஜப்பானியச் சமூகம் எனும் உனது எண்ணத்திற்கு அடிப்படை எது? குழப்பமுற்றாய். 'ஓம்' உனது தெளிவை சாத்தியமற்றதாக்கியது. 'யுக்கி' கூட 'ஓம்' குறித்து அச்சமுற்று, முகம் சுழித்தாள்.

மதுக்கடையை ஒட்டி ரயில்பாதை. இணையாக நதி. இனோகஷிராப் பூங்காவரைக்குமே செல்கிறது. நதிக்கரையோரமாக சக்குரா மரங்களின் அணிவகுப்பு. கொள்ளைப் பூக்கள். மரப்பெஞ்சுகளில் பாட்டில் தேநீர் பருகியவாறு மலர்களை அனுபவிப்பவர்கள். சிறுவர்கள் குட்டி சைக்கிள் ஓட்டி மரப்பாலங்களை சத்தமிட்டவாறு கடக்கிறார்கள். உனக்கு இலக்கெதுவுமில்லை மதுக்கடையைத் தவிர. உறைந்துவிட்ட இயற்கைபோல் காட்சிகள் உன் மனதில் சித்திரமாகின்றன.

ஒரு நாள் மதுக்கடையில் வயதான பெண்மணி உன் சாதி குறித்து வினவினாள். நீ திகைப்புற்றதும், உன் நாட்டில் சாதி இன்னும் ஒழிந்துவிடவில்லையே – மோசமானது என்றாள். உங்கள் நாட்டிலும் 'புராக்குமின்கள்' உண்டே. நீ துருவினாய். சாதாரணமாக இந்தக் கேள்வியை எதிர்கொள்ள எவருக்கும் விருப்பமில்லை என்பது புரிந்தது.

"ம். இருக்கிறார்கள். ஆனால் இப்போதில்லை. அசுத்தம், அபாயத்தொழில் செய்பவர்கள் ஊரின் புறப்பகுதியில் வசித்தார்கள். இப்போது எல்லாம் மாறிவிட்டது".

"கொரிய மக்கள்கூட புராக்குமின்கள் தாமே ஜப்பானில்".

"எனக்குக் கொரியர்களைப்பிடிக்காது. நான் சிறுபிள்ளையாக இருந்தபோது ஒரு


படிப்பகம்

www.padippakam.com

அருத்தமண்டைக் கொரியன் என் தலையில் முட்டிவிட்டான்"

அவளின் வெறுப்பு அதனால்மட்டுமா? நீ ஊகித்தறிய முயன்றாய்.

"உங்கள் ஜப்பான் பிரதமர் ஒவ்வொரு முறையும் கொரியா செல்லும்போது சாஷ்டாங்க பொது மன்னிப்புக் கோருகிறாரே. உலகப்போர் குற்றங்களுக்காக"

"ம்... எல்லாம் வியாபாரத் தந்திரம். ஜப்பான் சாமானம் விலை போகணுமே"

"கொரியப் பெண்களை வருடக்கணக்கில் அடைத்து வைத்து ஜப்பானியப் போர்வீரர்கள் தொடர்ந்து வன்புணர்ச்சி செய்தது...."

"ம்..ம்..."

அவள் உன் கேள்விகளில் விருப்பமற்றுப் போனதால் நீயும் திசை மாறினாய்.

யுக்திதான் புராக்குமின்கள் பற்றி விபரமளித்தது. அவை யாவும் அரைகுறையானவை.

ஆனால் உன் நாட்டைச் சேர்ந்த இந்திபேசும் பண்டித்துதான் உனக்குப் பிட்டுப் பிட்டு வைத்தான்.

"நம் நாட்டைக் குறை கூறுகிறார்களே. இன்றும் கூட திருமணத்திற்கு முன் காதலன் புராக்குமின் இனத்தவரா எனத் தேடிக் கண்டறியப்படுகிறது. ஷிண்டோ ஆலயங்களில் பிறப்புப்பதிவு இருக்கும். அதைப்பார்த்தால் அவன் மூதாதையர் வசிப்பிடம் தெரியும். அது ஊரின் புறப்பகுதியாக இருந்தால் நிச்சயம் புராக்குமின்தான். இதனால் பல திருமணங்கள் தடைபட்டிருக்கின்றன. பெரிதாக நாம் சாதி பாராட்டுவது பற்றி இகழ்கிறார்கள் இந்த ஜப்பானியர்கள்".

நதிக்கரையோரம் மலர்களிடை நடந்துகொண்டே 'வேசிமகன்' என்ற வார்த்தைகளை உதிர்த்தாய் நீ. மலர்கள் வாடி விடக்கூடும். மதுக்கடை நெருங்கிவிட்டது.

"கிரின் இச்சிபான் – நமா"

ஜப்பானியப் பெண் மிக்கப் பணிவுடன் வரவேற்பு கூறி கிரின் நம்பர் ஒன் எனும் புகழ்பெற்ற புதிய பியரை நுரைத்துப் பொங்கும்படி ஊற்றினாள்.

வழக்கமாக வரும் வாடிக்கையாளர்கள் தான் இன்றும்.

சவரக் கடை யுமிகோ வந்திருந்தாள். காதலனுடன் ஊடியவாறிருந்தாள். நீ அவர்கள் கவனிக்காதவாறு கவனித்துக் கொண்டிருந்தாய். காதலன், "ஐ அம் எ ஜப்பானீஸ் மங்க்கி" என்று உன்னைப் பார்த்து ஆங்கிலத்தில் சொன்னதும், "ஹோந்த்தோ" என்றாய் அனிச்சையாக. எல்லோரும் சத்தமாகச் சிரித்தார்கள். அவன் முகம் வாடியது. "மெய்யாலுமே" என விளையாட்டாய்ச் சொன்னது வினையாகிப் போனது.

"நீயும் சிரிக்கிறாயா?"

அவன் கடைப் பெண்ணைக் கேட்டதும் பயந்தவளாக தன் மதுக்கிண்ணத்தை எடுத்துச் சென்று அவனிடம் கொஞ்சம் மது வாங்கிக் குடித்தாள் தன் தவறுக்கு வருந்தும் விதமாக.

தவறுக்கு வருந்துவதும் வியாபாரம்தான். ஏற்கனவே ஒரு பெண் சொன்னது உன் நினைவில்.

'ஓம்' சமயத்தலைவன் அசாஹரா ஒரு புராக்குமின் என்பது நீ எதிர்கொண்ட தகவல் இன்று. ஓம் இயக்கத்தின் இ-மெயில் விலாசம்கூட கிடைத்திருக்கிறது. உன் நாட்டிற்கும் அந்நாட்டிற்குமான பல்வேறு காட்சிகள் புரண்டன உன்னுள். சக்குரா மலர்கள் கண்ணாடித் திரைக்கு வெளியே அள்ளிப்போகின்றன. பணிவுள்ளப் பெண் ஊற்றிய பியர் நுரைத்து வழிந்தது.

நி எதற்கோ வாழ்த்துச் சொல்லி "கம்பய்" என பியர் தம்ளரை உயர்த்துகிறாய்.

●



படிப்பகம்

www.padippakam.com

# நினைவுகள் மரணிக்கும் போது
# When Memory dies
# சிவானந்தனின்
# நூற்றாண்டு காலம் குறித்த தியானம்

யமுனா ராஜேந்திரன்.

*மனிதகுலம் நிரந்தரத்தில் வாழ்கிறது. ஆகவேதான் நமக்கு நினைவுகள் மரபுகள் மதிப்பீடுகள் தரிசனம் எல்லாமும் இருக்கின்றது.*

*சிவானந்தனுடன் உரையாடல் : எங்கே போராட்டமோ அங்கே என் இதயம் கிழக்கும் மேற்கும் தொகுப்பு 1997*

*நினைவுகள் மரணிக்கும்போது மனிதர்கள் மரணிக்கிறார்கள். பிறழ்ந்த நினைவுகள் கட்டமைக்கபடுமானால்? அது கொலையாகும்*

*நினைவுகள் மரணிக்கும் போது : மூன்றாம் பாகத்தின் முகப்பு வரிகள்*

பா. செயப்பிரகாசத்தின் வல்லிக் கண்ணனின் சுயசரிதை வாழ்க்கைச் சுவடுகள் – விமர்சனம் சிறப்பாக உள்ளது. இதில் உள்ள கவிதைகள் அவ்வளவு நன்றாக இல்லை, மேலும் சோபாசக்தி நேர்காணலும். நூல் விமர்சனங்களும் சிறப்பாக உள்ளது. மொத்தத்தில் இந்த 9 வது இதழ் என்னை மிகவும் கவர்ந்தது. மேலும் வளர வாழ்த்துக்கள்.

நன்றி.

எஸ்.எஸ்.ஆர். லிங்கம், மதுரை

சிவானந்தனின் இந்நாவலை முற்றமுழுதான அரசியல் நோக்கில் வாசிப்பதென்பது ஒருவர் இந்நாவலில் வாழும் மனிதர்களுக்குச் செய்கிற துரோகமாகும். கோடிக்கணக்கான மனிதர்களின் இடையில் வாழ நாம் தலைப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் ஒரு கடந்த காலத்தையும் நினைவுப் பிரபஞ்சத்தைக் கொண்டு திரிகிறோம். இதில் எவரிடம் தான் சொல்ல ஒரு கதையில்லை? எவர்தாம் இங்கு முக்கியமற்ற மனிதர்? இவர்கள் அனைவரிடமும் காதலும் வாழ்வும் மரணமும் மோகித்தலும் வெறுப்பும் சார்ந்ததொரு வாழ்வு இருக்கிறது. இவ்வகையில் இந்நாவல் இலங்கைத் திவு முழுக்கவுமான மனிதர்கள் பற்றியது. இந்தத் திவு மனிதர்களின் கடந்த கால வரலாறு இவர்களிடமிருந்து பல்வேறு அன்னியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. வரலாற்றை மறுவாசிப்பு செய்யப் புறப்பட்ட இவர்கள். பல வரலாறுகள் பல கலாச்சார நினைவுகள் பரவிய ஒரு கலாச்சார வெளியை – மதம் மொழி இனம் சார்ந்த பொய்யான நினைவுகளாகக் கட்டமைக்க முற்பட்டார்கள். நேசமும் பாசமுமாய் இருந்த நினைவுகள் மரணித்தன. அகழ்வாய்விலும் மானுடவியலிலும் கல்விச் சாலைகளிலும் விஷம் விதைக்கப்பட்டது. அடர்ந்த வனங்களும் அருவிகளும் அழகும் நிறைந்த இந்த நாடு பிணக்காடாக ஆகியது. இந்நாவல் இந்த மனிதர்கள் குறித்த கதை. மூன்று தலைமுறை மனிதர்கள் குறித்த நூற்றாண்டு காலம் குறித்த தியானத்தின் விளைவு.

நாவல் அதனது அரசியல் அறவியல் செய்திக்காக மட்டுமல்ல அதனது அடிப்படை மனிதனது கலாச்சார நாகரிக உறவுகள் தொடர்பான சித்தரிப்புக்காகவும் முக்கியமான நாவலாகும். பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மனிதனுக்காக அவனது மொழியில் அவனது வாழ்வின் அர்த்தங்களும் அனர்த்தங்களும் அழகும் இந்நாவலில் சொல்லப்பட்டிருக்கிறது. தால்ஸ்த்தோயின் முழுவாழ்வுதழுவிய நாவல் கட்டமைப்பின் வழியும் தரிசன நோக்கிலும் இந்நாவல் விரிகிறது. போரும் வாழ்வும் வாழ்வும் சாவும் பிரிவும் உறவும் காமமும் அன்பும் என முழு மானுட வாழ்வு தழுவியதான இலங்கைத் திவு மனிதர்களின் மூன்று தலைமுறையினரின்



படிப்பகம்

www.padippakam.com

நூற்றாண்டு காலத் தியானமாக இந்நாவல் விரிகிறது. இந்நாவலில் வரலாற்றுத்தவிர்ப்புக்கள் இல்லை. பின்நவீனத்துவ மந்திர உச்சாடனங்கள் இல்லை. பிசாசுகளும் மொழித் திரிபுகளும் நடமாடுவதில்லை. வாழ்வின் செய்தி போலவே நாவல் நேரடியாகப் பேசுகிறது. இந்நாவல் மிகச் சாதாரணமான மனிதர்கள் பற்றிய மிக எளிமையான யதார்த்தமான ஆழமான அர்த்தங்களை உள்வாங்கிய நாவல். கதையின் போக்கில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் வந்து போகிறார்கள். நொடிப்பொழுதே வந்து போகிற எல்லா மனிதர்களுக்கும் இந்நாவலில் அடையாளமும் முகமும் தரப்பட்டிருக்கிறது. சிங்கள இடதுசாரியான டாக்டர் லாலைக்கொல்ல வருகிற மகளை இழந்த சிங்கள மனிதனுக்கு முகம் தரப்பட்டிருக்கிறது. பஸ் கட்டண உயர்வினால் தன்னால் கட்டணம் கொடுத்து அடுத்த இடத்தில் சென்று வெங்காயம் விற்கமுடியாது என்று சொல்கிற வயோதிகத் தாய்க்கும் முகம் தரப்பட்டிருக்கிறது. மனிதர்கள் மீது அடிப்படையான அன்பும் வரலாற்றின் மீதான தீராத தேடலும் கொண்ட மனிதருக்கே இந்தத் தரிசனம் சாத்தியம்.

நாவல் குறித்த அவதானங்கள் பல்வேறு பரிமாணம் கொண்டவை. சமகால உலகின் உள்நாட்டு யுத்தங்கள் இன மொழி மத அடிப்படையிலான யுத்தச் சாவுகளின் பின்னணியில் நாவல் பார்க்கப்படுகிறது. அவ்வகையில் வியட்நாமின்–பாசிச காலத்தின்–பாஸ்க் பிரதேசத்தின் – யுகோஸ்லாவியாவின் – இந்தோனேஷியாவின் நாவல்களுடன் இந்நாவல் ஒப்பு நோக்கப்படுகிறது. அதிகரித்துவரும் பின் காலனித்துவ ஆசிய இலக்கியம் எனும் விமர்சனப் பின்னணியிலும் இந்நாவல் பார்க்கப்படுகிறது. ருஸ்டியின் 'மிட் நைட் சில்ட்ரன் கோஹெட்ஸியின் 'டிஸ்கிரேஸ் போன்றவற்றுடன் ஒப்பு நோக்கி பேசப்படுகிறது. 1958க்குப் பின்னான தமிழர் சிங்களர் வாழ்வில் பரஸ்பர அன்பு கொண்ட மனிதர்கள் வாழ்ந்ததற்கான சாத்தியமின்மைபற்றிய வடக்கு சார்ந்த தமிழ்ப்பார்வையும் வைக்கப்படுகிறது. நாவலின் விவரணக் கட்டமைப்பு பற்றிய பிரச்சினைக்கும் பிரச்சினையில் ஆசிரியரின் நேரடி அனுபவ சார்ந்த அறிவுக்கும் இடையில் உறவுபடுத்தப்பட்டு நாவலின் பலவீனமான கண்ணிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. அமெரிக்க நாவலாசிரியரான டான் டில்லிலாவின் 'மாவோ இரண்டு'. ஒண்டாஜியின் 'அனில்ஸ் கோஸ்ட்' போன்றவைகளை முன்வைத்து நாவலின் பயங்கரவாதம், வன்முறை குறித்த ஆய்வும் புரிதலும் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுகிறது.

நாவலில் நான் அனுபவம் கொண்ட ஒரு மிகமுக்கியமான பிரச்சினை எமது கிழக்கத்திய மனிதர்களின் வாழ்வையும் அதில் பொதிந்திருக்கும் இயல்பான அன்பையும் உறவுகளில் உறைந்திருக்கும் அழகையும் நிலவும் ஐரோப்பியக் கலாச்சாரப் பரவலின் பின்னணியில் மிகவும் உள்ளார்ந்த பிரமிப்புடன் வாஞ்சையுடன் எமது மனிதர்களுக்குள் மீளப்பார்த்துச் செல்கிறது எனும் பிரச்சினைதான். மேற்கத்தியர்களிடம் வரலாறும் அதனது படிப்பினைகளும் இருக்கிறது. ஆயின் வாழ்வில் அழகு இல்லை. எமக்கு வரலாறும் அதன் படிப்பினைகளும் இல்லை. வரலாறு திருடப்பட்டது – திசை மாற்றப்பட்டது – இப்போது மறுவாசிப்புக்குட்படுத்தப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்படுகிறது. ஆனால் எமது வாழ்வில் அன்பும் அது தரும் அழகும் விரவிக் கிடந்தது. இன்று வரலாற்றைத் தேடும் போக்கில் எமது அன்பும் அழகும் நிறைந்த நினைவுகளைத் தொலைத்துவிட்டு நிற்கிறோம். இது எமது ஆதாரமான பண்பாட்டின் மரணம் என்பதை நாவல் வலியுறுத்திச் சொல்கிறது.

நாவல் மூன்று பகுதிகளால் ஆனது. 1. மறக்கப்பட்ட காலை 2. எனது வேர்கள் ஆயின் மழை இல்லை. 3. பிறழ்ந்த நினைவுகள். 'மறக்கப்பட்ட காலை' பகுதி சந்திலிப்பாயிலிருந்து கொழும்பு நோக்கி வரும் வடக்கிலங்கை விவசாயி பாண்டியனின் மகனான ஆங்கிலக் கல்விகற்ற சகாதேவனின் கதை. `எனது வேர்கள் ஆயின் மழை இல்லை' பகுதி மத்திய இலங்கையில் சிங்கள மக்களுடன் வாழநேர்ந்த ராஜன் என்கிற ராஜநாதனின் கதை. 'பிறழ்ந்த நினைவுகள்' பகுதி சிங்களத் தாய்க்கும் தமிழ் வளர்ப்புத் தந்தைக்கும் இடையில் வாழ்க்கையை. அன்பைக் கற்க நேர்ந்த விஜய்யின் கதை.

முதல் பகுதிக் கதையில் வட இலங்கையின் சந்திலிப்பாய் கிராமத்தைச் சேர்ந்த நன்றாகப் படிக்கக்கூடிய பையனான சகாதேவன் அவனது ஆசிரியரின் ஏற்பாட்டின் பேரில் கொழும்பில் சென்று ஆங்கிலக் கல்வி கற்கிறான். தனது பத்தொன்பதாவது வயதில் தபால் திணைக்களத்தில் வேலைக்குச் சேர்கிறான். பெண் கொடுத்து பெண் எடுக்கும் ஏற்பாட்டின்படி ஒரு



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் பெண்ணை மணந்து கொள்கிறான். அவனது நண்பன் திஸ்ஸாவுடனான நட்பில் தொழிற்சங்கவாதி எஸ்டபிள்யுவுடனும் அவனது வயோதிக மனைவியான பிரேமாவுடனும் அவர்கள் வீட்டில் தங்குகிறான். அதன் போக்கில் தேசியவாத சமரசவாத இடதுசாரிகளைக் கண்டு கொள்கிறான். கடப்பாடுடைய இலட்சியவாதிகளையும் காண்கிறான். திஸ்ஸாவின் காதலியான முஸ்லீம் பெண் ஸோனாவின் சகோதரன் சுல்தான் போலி தொழிற்சங்கவாதியானவனின் துரோகத்தினால் கொல்லப்படுகிறான்.

இரண்டாம் பகுதிக் கதை சகாதேவனின் மகன் ராஜனுடையது. தனது தந்தையைப் போலவே ஆங்கிலக்கல்வி பெறும் ராஜன் கல்லூரி வாழ்க்கையில் சிங்கள நண்பன் லாலையும் அவனது சகோதரி லலியையும் சந்திக்கிறான். லலியின் மீது காதல் கொள்கிறான். லலியின் முன்னை நாள் காதலன் சிங்கள நடவடிக்கையாளன் ஸேனா அர்த்தாலின் போது நடந்த கலவரத்தில் சுட்டுக் கொல்லப்பட, – ஸேனா மூலம் கற்பினியான லலியை அவள் மீது காதல் கொண்ட ராஜன் மணந்து கொள்கிறான். லலிக்குப் பிறக்கும் குழந்தை விஜய்க்குத் தகப்பனாகிறான். 1958 இனக் கலவரத்தில் தமிழ்ப் பெண்ணெனக் கருதி சிங்களக் காடையர்களால் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகி லலி மரணமடைந்த பின்னால் ராஜன் தனது மகனை ஸேனாவின் தாய் தந்தையர்களிடம் வளரவிட்டு, தனது நண்பனும் விஜய்யின் மாமாவுமான லாலின் பொறுப்பில் விட்டுவிட்டு இங்கிலாந்து சென்று விடுகிறான். இது நாவலின் இரண்டாம் பாகம்.

மூன்றாம் பாகம் விஜய்யின் கதை. கல்லூரியில் படிக்கும் காலத்தில் பத்மா எனும் சிங்களப் பெண்ணுடன் காதல் கொள்ளும் விஜய், தொடர்ந்து ஜே.வி.பி. இயக்க நடவடிக்கையில் ஈடுபடுகிறான். மலையகத் தமிழர்களையும் இலங்கைத் தமிழர்களையும் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் பகுதியாகக் காணும் அவ்வியக்கத்தின் ஐந்தாவது கருதுகோள் – பிப்த் திஸிஸில் – பொதிந்திருக்கும் இனவாதத்தை நினைவு கூர்கிறான். பத்மா இலங்கை அரசாங்கத்தின் நரவேட்டையில் மரணமடைகிறாள். ஜே.வி.பி. இயக்கம் அழித்தொழிக்கப்படுகிறது. இடையில் மலையகத் தமிழ்ப் பெண்ணான மீனாவைக் கண்டு காதல் வயப்படுகிறான். மலையகத் தமிழர்களின் மீதான தாக்குதலில் பெண்கள் பாலியல் பாலாத்காரப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மலையகத்திலிருந்து சென்றுவிடும் மீனாவை அவனால் காண முடியாது போக கல்வி கற்பிக்க அமர்கிறான். அங்கு சிங்களப் பெண் மொனலை யதேச்சையாகச் சந்தித்து மணந்து கொள்கிறான். இனவாதம் ஆசிரியையான மொனலை முழுக்கவும் பீடித்திருக்கிறது. எண்பத்து மூன்று கலவரத்தைத் தொடர்ந்து அவர்களுக்கிடையில் நடந்தே தீர வேண்டிய பிரிவு நடந்தேறுகிறது. கொலையிலிருந்து தப்பும் மீனாவுடன் யாழ்ப்பானம் செல்லும் விஜய் தனது உறவினனும் இயக்கத் தலைவனுமான ரவியின் மூலம் சுட்டுக்கொல்லப்படுகிறான். இது மூன்றாம் பகுதி.

ஒரு வகையில் அதி உயர் அரசியல் பிரக்ஞை நோக்கியதாகவும் இந்நாவல் அமைகிறது. வடக்கிலங்கையின் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த சகாதேவன் நகர வாழ்க்கைக்கும் அதனின்று பெருநகர் வாழ்க்கைக்கும் நகர்வதை முதல் பகுதி சொல்லும் போது காலனியப் பிரக்ஞையை உடைத்துக் கொள்ளும் சிங்கள சுதேசி உணர்வின் வளர்ச்சியையும் இணைந்தபடி சொல்லிச் செல்கிறது. அரசியல் ரீதியில் தாராளவாதக் கண்ணோட்டம் கொண்ட மரபாளரான சகாதேவனின் மகனின் ராஜநாதன் பெருநகர்க் கலாச்சார அரசியல் வாழ்வினூடேயும் காலனிய எதிர்ப்பு சர்வதேசிய மூலதனச் சார்பு வளர்ச்சியினூடேயும் இடதுசாரி அரசியல் சார்புநிலை பெறுவதனை இரண்டாம் பகுதி சித்தரிக்கிறது. கடந்த நூறாண்டு கால வளர்ச்சியாக எழுந்திருந்த காலனிய எதிர்ப்பு சிங்களதேசிய உணர்வு நிறத்தையும் மொழியையும் இனத்தையும் அடிப்படை கொண்ட அரசியலாகி மேல்மத்தியதரவர்க்க சிங்கள இடதுசாரிகளையும் அதிதீவிர இளைஞர்களையும் தனக்குள் இழுத்துக் கொள்வதை மூன்றாம் பகுதியில் விஜய்யினுடைய வாழ்க்கை சொல்கிறது.

விஜய் நம் காலத்தின் விமர்சனபூர்வமான அதி உயர் பிரக்ஞை பெற்ற சோசலிஸ்ட்டாக இருக்கிறான். நிஜத்தில் லங்கா சம சமாஜக் கட்சியில் வெறுப்புறும் லால், அவனது சகோதரியும் ராஜனின் மனைவியுமான லலி, ராஜன் – லலியின் மகனும் சிங்கள தமிழ் மனிதனுமான – சேனா எனும் நடவடிக்கையாளனுக்கும் லலிக்கும் யதேச்சையான காதலில் பிறந்தவன் – சேனர் 1920



படிப்பகம்

www.padippakam.com

ஹர்த்தால் வன்முறையில் கொல்லப்பட லலியின் மீதான தீராத காதலினால் அவனை மணக்கும் ராஜனின் மகனாக வளர்ந்தவன் – இவர்களது அரசியல் ஆன்மீக வாழ்வாகத்தான் நாவல் விரிகிறது. விஜய்யின் பாத்திரம்தான் நாவலின் உயிர்நாடியான கருத்தியில் பிரதிமையாக நமது இறுதி நினைவுகளில் உறைகிறது. விஜய் ஒரே சமயத்தில் சிங்களவனாகவும் இருக்கிறான் தமிழனாகவும் இருக்கிறான். அதே வேளை இரண்டு பேருமே இனவிஷம் ஏறிய நிலையில் மறுக்கப்படவும் சந்தேகிக்கப்படவும் ஆன உயர் அன்புநிறைந்த உயிர் ஜீவியாக இருக்கிறான். கடந்த கால நினைவுகளின் அற்புதமான இலட்சிய வடிவமாகத்தான் அவன் நாவலில் பரிமாணம் பெறுகிறான். அவனது வேர்கள் இலங்கைத் தீவு முழுக்கத் தழுவி அழுத்தமாக இருக்கிறது. ஆனால் இன்று அவனுக்கு வேர்கள் இல்லை. இந்தச் சோகம் தான் நாவலின் ஜீவனாக இருக்கிறது.

இரண்டு தரப்பிலும் வெறுப்பும் வேதனையும் கசப்பும் வெஞ்சினமும் வளர்ந்துவிட்ட இன்றைய சூழலில் விஜய்யின் பாத்திரம் நடைமுறை மனிதனாக ஒப்புக் கொள்ளப்படுவதில் இரண்டு பக்கமுமே சாத்தியமில்லைதான். ஆனால் மனிதன் கடந்த காலத்துடனும் நினைவுகளுடனும்தான் வாழ்கிறான். நிகழ்காலம் விஷமானது வரலாற்றின் சோகம். இந்தக் கோடையும் வெப்பமும் மரணமும் எதிர்காலத்தில் மறக்கப்பட்டுவிடலாம். ஆனால் அப்போதும் கடந்த கால நினைவுகளும் காதலும் அன்பும் வாழும். ஏனெனில் மனிதன் காதலில் திளைக்கவும், அன்பு செய்யவும், அடுத்தவரை நேசிக்கவும் பிறந்தவன். இந்தத் தரிசனம் சிலருக்கே வாய்க்கிறது. கலைஞன் இதை கலா தரிசனம் என்கிறான். தத்துவவாதி இதைக் காலதரிசனம் என்கிறான். மார்க்ஸ் போன்ற நடைமுறை மனிதர்கள் இதை இயங்கியல் என்கிறார்கள். சில மனிதர்கள் நிலவிய எக்காலத்தையும் மீறி இந்தத் தரிசனம் பெறுகிறார்கள். அதனால்தான் யாழ்ப்பாணத்தில் ஒரு அபத்தமான சூழலில் இயக்கத் தலைவரான கமாண்டர் ரவி தன் காதலனும் சிங்களனும் தமிழனும் முறைசாராமல் ஜனித்தவனும் ஆன விஜயை சுட்டுக் கொன்ற பின்னால் மலையகத் தமிழ்ப் பெண்ணான மீனாவுக்குக் கண்ணீர்விட முடிவதில்லை. அவள் பெருமிதத்துடன் தீர்க்க தரிசனமாகச் சொல்கிறாள். "இந்த மண்ணில் இருந்த ஒரே நாகரிகமான ஜீவியையும் கொன்றுவிட்டீர்கள். இனி ஒன்றும் நாம் ஒரே முழுமையாக இருப்பதென்பது சாத்தியமேயில்லை".

நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் கடைசியில் எண்பதுகளின் இறுதியில் முடிகிறது.

நானூற்றுப் பதினோரு பக்கங்கள்கொண்ட இந்த நாவல் இரண்டு தளங்களில் சமாந்தரமாக இயங்குகிறது.

1. இந்த நூற்றாண்டு கால சமூக வளர்ச்சி என்பது எவ்வாறாக இத்தீவில் வாழும் மக்களின் உறவுகளில் பாதிப்புச் செலுத்தியிருக்கிறது என்பதை நாவல் சொல்கிறது. சிங்கள தமிழ் முஸ்லீம் கிறித்தவ மலையக மக்களுக்கிடையிலான உறவுகள் எவ்வாறு வளர்ந்து தேய்ந்து விஷம் பாரித்துப்போனது என்பதைச் சொல்கிறது.

2. பல்வேறு காலனியங்கள் எவ்வாறாக வடக்குத் தமிழர்களை காலனிய அமைப்பின் எழுத்தர்களாகவும் தென்னிலங்கைச் சிங்களவர்களை பியூன்களாகவும் ஆக்கியது என்பதை நாவல் சொல்கிறது. பயிர் வளராத குழந்தைகள் மட்டுமே வளரும் வரண்ட வடக்கு பூமித் தமிழர்களுக்கு எவ்வாறாக கல்வி ஒரு மூலதனமாகவும் தமது சகோதரியருக்கான சீதனத்துக்கான வருவாயாகவும் வாழ்வுமறையாகவும் ஆனது என்பதை நாவல் சொல்கிறது. காலனிய எதிர்ப்புத் தேசிய வாதம் எவ்வாறாக தமிழர் எதிர்ப்புத் தேசியமாகவும் சிங்கள மொழிமதஇனத் தேசியமாகவும் வளர்ச்சியுற்றது என்பதை நாவல் சொல்கிறது. காலனிய எதிர்ப்புத் தேசியம் எவ்வாறாக இனவாத சோசலிசமாக இடதுசாரி மொழியைச் சுவீகரித்தது என நாவல் சொல்கிறது. அதி உயர் வர்க்கத்தவர்களின் வர்க்கநலன் சோசலிசம் எவ்வாறாக வர்க்க சமரசமாகி இனவாத அரசியலில் கரைந்தது என்பதை நாவல் சொல்கிறது.

சோசலிசம் இறுதி இலக்கு அல்ல. அதுவே பாதையும் இலக்குமாகும். அதிகாரத்திற்குப் பின் சோசலிசம் என்பது இல்லை. அதிகார நிலைநாட்டம் பயங்கரத்தின் தொடக்கம் என்று நாவல் சொல்கிறது. இதுவரைத்திய தீவின்



படிப்பகம்

www.padippakam.com

இடதுசாரிவாதமும் சோசலிச சிந்தனையும் சித்தாந்தத்திலிருந்து பிறந்ததாக இருக்க வடகிழக்குத் தமிழ் இளைஞர்களின் அரசியல் எவ்வாறாகச் சித்தாந்தம் தவிர்த்த நடைமுறையிலும் துப்பாக்கி அதிகாரத்திலும் நம்பிக்கை கொண்டு இறுகியது என்பதையும் நாவல் சொல்கிறது. சோசலிசம் என்கிற லட்சியவாதம் மரணித்துப் போனது. இயக்கத் தலைவரானயோகிக்குசமநிலைச்சமூகம்என்பது தற்போது இரண்டாம் பட்சம். அதிகார நிறுவனங்களே தற்போது தேவை. முதலில் மக்கள் இருந்தார்கள். அவர்களின் கௌரவம் காப்பாற்றப்பட்டபோது அவர்கள் போராளிகளோடு நின்றார்கள். மக்களின் நலனில் யார் அதிகாரம் செலுத்துவது என்பதில் இயக்கமோதல்கள் நிகழ்ந்தபோது மக்கள் இரண்டாம் பட்சமாகி நிறுவனமும் அமைப்புக்களுமே முக்கியமாகின; மக்கள் அந்நியமாகினர்; அவர்கள் பயம் கொள்ளவும் செய்தார்கள் என்கிறது நாவல்.

விஜய்ஈழம்தான் தீர்வு என்றும் கருதுகிறான். சோசலிசஈழத்தின அமைப்புக்கள் பற்றியும் அவன் சிந்திக்கிறான். ஆனால் அதிகாரத்தின் பின் சோசலிசம் என்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. விடுதலையின் பாதையும் இலக்கும் சோசலிசத்தை நோக்கியதாயின போராட்டத்தினது நிறுவன அமைப்பும் மக்களின் பாலான அணுகுமுறையும் கீழிருந்து பரிமாணம் பெறுவதாக மக்களின் பங்கெடுப்பிலிருந்து பரிமாணம் பெறுவதாகவே அமையும். இது பின் சோவியத் பின் புரட்சி சமூகங்கள் தந்த தரிசனம். இலங்கைத் தீவில் சே குவேராவை ஆதர்ஷமாகக் கொண்ட இளைஞர்களின் எழுச்சி இனவாதமாகப் பரிமாணம் பெற்றதிலிருந்து விஜய் பெற்ற அனுபவம். அதி உயர் வர்க்க லங்கா சம சமாஜ மார்க்சிஸ்ட்டுகள் சந்தர்ப்பவாதிகளானதினால் சோசலிச கோஷம் இனவாதத் தேசியமாகப் பரிமாணம் பெற்றதினால் கிடைத்த தரிசனம். நினைவுகள் தந்த வரலாற்றுப் பாடம் இதுதான். இந்த நினைவுகள் மரணிக்கும்போது மனிதர்கள் மரணிப்பர் மக்கள் மரணிப்பர் என்கிறது நாவல். இந்த நினைவுகள் வரலாற்றை மறுவாசிப்புச் செய்கையில் சின்னபின்னமாகின பிறழ்ந்த நினைவுகளாகுமாயின் அது ஒரு மக்கள் கூட்டத்தின் கொலையாக தற்கொலையாக முடியும் என்கிறது நாவல்.

நாவலில் மரபும் மாற்றமும் பல்வேறு தலைமுறை சார்ந்த மனிதர்களிடம் எவ்வாறாக இயல்பாக அணுகுமுறை மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பது அழகாகப் பரிமாணம் பெறுகிறது. சகாதேவனும் அவரது மனைவியும் லலி ராஜனின் கலப்பு மணத்தை ஒப்புக் கொள்ளும் நிகழ்வு-ராஜனின் பிற சகோதரிகளும் அவனது அன்னையின் உறவினர்களும் லாபமே குறிக்கோளாகி கொழும்புத்தமிழர்களாகும் சித்தரிப்பு-பெண்கள் பாத்திரசித்தரிப்பும் நெருக்கடியான காலங்களில் அவர்களது அழுத்தமான உளவியல் நிலைபாடுகளும் அதியற்புதமாகச் சித்தரிப்புப் பெறுகிறது.

தொழிற்சங்கவாதியான வயோதபரின் மனைவியான பிரேமா போராளியான ரவியின் தாயான லீலா – மரணமுற்ற ஜேவிபி போராளிப் பெண் பத்மா – சிங்கள மனித உரிமையாளர்கள் சரத் தமயந்தி – லாலின் தங்கையும் விஜய்யின் தாயும் ராஜனின் காதல் மனைவியுமான லலி – ராஜனின் தாயும் சகாதேவனின் மனைவியுமான பெண்மணி – விஜய்யின் காதலியும் மலையகக் கூலித் தொழிலாளி சஞ்சியின் மகளுமான மீனா – நாவலில் கொஞ்ச காலமே வந்து போயினும் அழுத்தமான நினைவுகளை விட்டுச் செல்லும் முஸ்லீம் பெண் சோனு – சமரச தொழிற்சங்கவாதி முனசிங்க – நம்மை கலவரப்படுத்தும் சிங்களப் பெண் விஜய்யின் மனைவி மொனல் – பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகி பிரசவத்தின் போது மரணமுறும் மலையகத் தமிழ்ப் பெண் – அகதிகளுக்கு உதவும் கத்தோலிக்க அன்னை – பாலுறவுச் சாகசம் புரியும் மிஸ் முனசிங்கே – ஞானியேயான பரர்-காளை மாட்டு வண்டியோட்டி – முழு இலங்கை மனிதர்களிடமும் அன்னியமாகி நடமாடும் மனசாட்சி மிக்க மனிதர் மாமா ஞானம் – தொழிற்சங்கவாதி எஸ்டபிள்யூ – சகாதேவனின் காதலி ராணி என நூற்றுக்கணக்கான பாத்திரங்கள் நாவலில் நடமாடுகிறார்கள். இவர்களது குணச்சித்திரங்களெல்லாம் அற்புதமாக உருவாகியிருக்கிறது.

நாவலில் ஆண்பெண் உறவு அவர்களது. உடல் இருப்பு சார்ந்த சித்தரிப்புக்களும் முக்கியமாக பேசப்படவேண்டும் என நினைக்கிறேன். லலியின் மார்பும் பிருஷ்டங்களும் தொடைகளும் உடனடியாக ராஜனுக்குக் கிளர்ச்சியூட்டுகிறது. ராணி உரல் இடிக்கும்போது மேலேறி இறங்கும் முலைகள் சகாதேவனுக்குக் கிளர்ச்சியூட்டுகிறது. கிடைத்த சந்தர்ப்பத்தில்



படிப்பகம்

www.padippakam.com

ஒழுங்கையில் அவளது உதடுகளைக் கவ்வும் சகாதேவன் போலவே ராஜனும் மிஸ் முனசிங்காவை சமையலறையில் முத்தமிட்டுக் கட்டிப்பிடிக்கும்போது அவனுக்குக் கால்சட்டை புடைப்புக் கொள்கிறது. விஜய்யின் கைகள் நேரடியாகவேமொனலின் மார்பைப்பிடிக்கிறது. மீனா விஜயுடன் பாலுறவு கொள்வது பற்றி அலட்டிக் கொள்வதுமில்லை. சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்பது தான் நடைமுறைப் பிரச்சினையாக இருக்கிறது. கிழக்கத்திய மற்றும் தமிழ் மனத்தின் பாலுறவு வேட்கையின் மைய இடங்களாக முலைகளும் பிருஷ்டமும் தொடைகளும் இருப்பதை மிக இயல்பாக நாவலின் பாலுறவுச் சித்தரிப்புகள் தெரிவிக்கிறது.

நிறைய சாவுகள் அடுத்த நாள் காலையில் சூரிய வெளிச்சத்தை எதிர் கொள்ளும் நிச்சயத்துடனும் இயல்புடனும் திடுக்கிடலுடனும் நிகழ்கிறது. தொழிற்சங்கவாதி எஸ்.டபிள்யூவும் மாமா ஞானமும் தூக்கத்திலேயே மரணமுறுகிறார்கள். சிங்களக் காடையர்களால் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்படும் மலையகத்தமிழ்ப்பெண்ணொருத்தி பிரசவத்தில் குழந்தையைப் பெற்றுவிட்டு இறக்கிறாள். தப்பிப் பிழைக்கும் குழந்தை வாளால் வெட்டுப் பட்டுச் சாகிறது. லலி பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகி மரணமுறுகிறாள். ராஜனின் தாயின் மரணம் நிகழும் அதே தினத்தில் சிங்களத் தனிச்சட்டம் கொண்டுவரப்படுகிறது. தமிழ் மொழியும் தனது தாயும் ஒன்றாகக் கொல்லப்பட்டதாக அரற்றுகிறான் ராஜன். விஜய்யின் கண்ணெதிரில் பத்மா மரணமடைகிறாள். சகாதேவனின் முன்னால் முஸ்லீம் சிறுவன் சுல்தான் சுட்டுக் கொல்லப்படுகிறான். சிங்கள சகாதேவனின் சகோதரன் போராட்டச்சூழலில் மறக்கப்பட்ட மரணமாகிப்போகிறான். நாவல் முழுக்க சாவின் வாடை நமக்கு துக்கத்தை நெஞ்சில் ஏற்றியபடி நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நாவலின் போக்கில் இரண்டு சம்பவங்களில் பாவிக்கப்படும் மொழிநடை சிவானந்தனின் உளவியல் சார்ந்த மொழிப்பிரயோகத்திற்குச் சான்றாகிறது.

பிரேமா எனும் வயோதிகத் தாயை இருளில் பார்க்கையில் – சில நாட்களில் அவள் மரணமடைந்துவிடுகிறாள். அந்த அன்பு முகம் ஏற்படுத்தும் விகாரமும் அழகும் பிரமிப்புடன் விவரிக்கப்படுகிறது :

"சகாதேவன் அவளது வார்த்தைகளைப் பிடிக்க அவளை நோக்கித் திரும்பினான். அப்போதுதான் மேகத்திலிருந்து எழுந்த நிலவு வெளிச்சம் அவள் மீது விழுந்தது. குட்டையான கொழுத்த அவளது முகம் எவ்வளவு விகாரமாகத் தோன்றியது என்பதை சகாதேவன் காணத் தவறவில்லை. வடிவமற்றுக் கொழுத்திருந்தது அவளது உடல். அப்போதுதான் அவன் உணர்ந்தான். அவள் புன்னகை – அதுதான் அவளது அத்தனை வித்தியாசங்களுக்கும் காரணம். அவள் புன்னகைதான் அவளது முகத்தை மாற்றுகிறது அந்தக் கணத்தில் அதனை அழகாக்குகிறது. அவளது உப்பிய முகத்தையும் ஆறுதல் தரக்கூடியதாக மாற்றுகிறது".

மலையகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தப்பிவரும் வழியில் ஒரு லொறி டிரைவரின் உதவியைப்பெற்ற வேளை அவனால் அவள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகிறாள். உயிர்வாழ்தலுக்கும் தவிர்க்க இயலாமைக்கும் இடையிலான ரணத்தை அவள் ஏற்று நிற்கிறாள். விஜய்யின் மனைவி மொனலின் இனவாதச் சொற்கள் இனி விஜய் அவளுடன் வாழமுடியாது எனும் நிலையை உருவாக்குகிறது. முன்னொரு பொழுது மீனா விஜய் இடையில் கனன்ற காதல் இப்போது மறுபடி கனிகிறது. இச்சூழலில் விஜய்யைப் பார்த்து மீனா சொல்கிறாள் – யாழ்ப்பாணத்தில் நடேசனின் வீட்டின் பின்புறம் செடிகொடிகளின் மறைவில் மீனா விஜய் இடையில் நடக்கும் மிக அந்தரங்கமான உக்கிரமான உரையாடல் அது :

"ஆகவேதான் நான் உன்னை மொனலிடம் அனுப்பினேன். எனக்கு விருப்பமில்லை. அந்தக் கடவுளுக்குத் தெரியும் நான் கொஞ்சமும் அதை விரும்பவில்லை. எனக்கு நீவேண்டும். எப்போதை விடவும் இப்போது நீ எனக்கு வேண்டும். எனக்கு எங்கே வலிக்கிறதோ அந்த இடத்தில் என்னைத் தொட எனக்கு நீ வேண்டும். எங்கே எனது வலிகளெல்லாம் குவிந்திருக்கிறதோ.... எனது கடந்த காலங்களின் வலிகள் அனைத்தும்... ஒரு மலையகக்கூலிக்காரப் பெண்ணாக.... அந்த இடத்தில் என்னைத் தொட நீ வேண்டும். அந்த இடத்தில் என்னை முத்தமிட நீ வேண்டும்... முன்னொருபோது நீ செய்தது போல... நீ மட்டுமே என்னைச் சுகப்படுத்தமுடியும்".

மனித உறவுகளில் கருத்தியலும் வரலாறும் நம்பிக்கைகளும் ஆண் பெண் உறவை எவ்வாறு


படிப்பகம்

www.padippakam.com

குலைக்கவல்லன என்பதை நாவலின் ஒருசம்பவம் திகிலுடன் விவரிக்கிறது.

சிங்களத் தனிச்சட்டம் நிறைவேறிவிட்டது. ராஜனின் தாய் இறந்துவிட்டார். இனக் கொலைத் தாக்குதலில் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். தனது மனைவி லலியுடன் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் ராஜன் சம்பவங்களின் இறுக்கத்தினால் லலியின் மீது தீராத வெறுப்புக் கொள்கிறான். அவளது இயல்பான அன்புகனிந்த நடவடிக்கைகள் அனைத்தையும் பாசாங்காகவும் வேஷமாகவும் கருதுகிறான். அவள் நெற்றியில் வைத்துக் கொள்ளும் குங்குமமும் உயிர் தப்பி வரும் அகதித் தமிழர்களுக்கு அவள் செய்யும் பணிகளும் அதீதமான நடவடிக்கையாக அவனுக்குத்தோன்றுகிறது. தமிழர்கள் மீது அன்பு கொண்டவளாய் காண்பிக்க அவள் போடும் வேஷமாகப் படுகிறது அவனுக்கு. ரயிலில் வீடு திரும்பும்போது லலியின் நெற்றிக் குங்குமத்தைக் கோபத்துடன் குழப்பத்துடன் அழிக்கிறான் ராஜன். குங்குமம் அடையாளமாக அவள் கொல்லப்படகூடும் என்கிறதால் அழித்தவனா வெறுப்பின் உச்சத்தில் அழித்தவனா என்கிற சந்தேகத்தில் உழல்கிறான். தொடர்ந்து வரும் நாட்களில் லலியுடன் பேசுவதை அவள் அருகாமையை அவன் வெறுக்கிறான். தான் யாழ்ப்பாணம் போகத் திட்டமிட்டிருப்பதாகச் சொல்கிறான். வெளியில் சென்றுவிட்டுவரும் அவள் தனது கணவன் யாழ்ப்பாணம் போய்விட்டதாகவும் இடையில் தகர்க்கப்பட்ட ரயிலில் அவனும் தாக்கப்பட்டிருக்கலாம் எனக்கருதி அவள் சிநேகிதியிடம் அழுது அரற்றுகிறாள். ஜுரத்திலிருந்தபடி அறையிலிருந்து வெளியேறும் தனது கணவனைக் கண்டதும் குரலெடுத்துக் கதறுகிறாள் அன்பே உருவான லலி. ராஜனின் குற்றமனம் தொடர்ந்துவரும் நாட்களில் கரையுடைந்த அன்பாகப் பிரவகிக்கிறது. அடுத்து வரும் சில நாட்களில் தமிழ்ப் பெண்ணெனக் கருதி லலி சிங்களக் காடையர்களால் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகிக் கொல்லப்படுகிறாள்.

நாவலின் விவரண வடிவம் குறித்தும் இதனது பல்லடுக்கு அர்த்தம் குறித்தும் மனித உறவுகள் சித்தரிக்கப்பட்ட விதம் குறித்தும் நிறைய விமர்சகர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த நாவல் அன்பு குறித்ததாகும் என்கிறார் ஜான் பெர்ஜர். இந்த நாவல் இரண்டு பகுதிகள் கொண்டதாக ஆரம்பத்தில் ஸ்வீகரிக்கப்பட்டு மூன்றாம் பாகமாக நீட்டிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கிறார் றெஜி சிறிவர்த்தன. இந்த நாவலின் மூன்றாம் பகுதி 1958க்குப் பின்னான சமகாலப்பகுதி நாவலின் பலவீனமான பகுதி என்கிறார் ஏ.ஜே. கனகரத்னா (றெஜி சிறிவர்த்தன மற்றும் கனகரத்னா அபிப்ராயங்கள் : தேர்ட் ஐ : யாழ்ப்பான பல்கலைக்கழகம் : 1999). காரணமாக 1958க்குப் பின்னான காலகட்டம் பற்றிய வாழ்த்து பெற்ற அனுபவம் சிவானந்தனுக்கு இல்லாமல் போனதாக இருக்கலாம் என்கிறார் அவர். இக்காரணங்களால் முதல் இரண்டு பாகங்களில் பாத்திரப்படைப்புக்கள் வரலாற்றுச் சம்பவங்கள் பெறும் ஆதாரமான உயிர்ப்பான நிலையை மூன்றாம் பாகம் பெறவில்லை என்கிறார். ரவி விஜய்யைச் சுட்டுக் கொல்வது போன்ற நாவலின் இறுதிச் சம்பவம் போன்றன இதனால் நாடகத் தன்மையைப் பெறுகின்றன என்கிறார் கனகரத்னா.

இந்த மூன்று பகுதிகளில் இரண்டாம் பகுதியின் அவதானப்பிலும் விவரனத்திலும் சிவானந்தனின் வாழ்ந்து பெற்ற அனுபவங்களை நாம் நிறையப் பார்க்க முடியும். சிவானந்தன் 1958 கலவரத்தைத் தொடர்ந்து ராஜன் போலவே இங்கிலாந்தில் குடியேறிவிடுகிறார். ராஜனின் இருப்பு என்பது மூன்றாம் பாகத்தைப் பொறுத்து அவர் தனது மகன் விஜய்க்கு எழுதும் சில கடிதங்கள் மூலமே நிகழ்கிறது. முதல் பாகத்திலும் தனது தந்தை சகாதேவன் பற்றிய ராஜனின் நினைவுகளும் பல்வேறு உறவினர்கள் நண்பர்கள் மூலம் திரட்டிக் கொண்ட மீள் நினைவுகளாகவே அமைகிறது. இக்காரணத்தினாலேயே நாவலின் இரண்டாம் பாகமான ராஜனின் கதை என்பது வரலாறும் வாழ்ந்து பெற்ற அனுபவமும் புனைவும் கொண்டதாக மிகுந்த ஆதாரத் தன்மை கொண்டதாக அமைகிறது. இக்காரணத்தினாலேயே இந்நாவலின் இரண்டாம் பாகம் மிகுந்த ஆழம் வாய்ந்ததாக அமைகிறது எனக் கொள்ளலாம் என்று இலக்கிய விமர்சகர் திமோதி பிரன்னன் அவதானிக்கிறார் (போஸ்ட் இகனோகிளாஸம் : திமோதி பிரன்னன் : டைம்ஸ் லிடரரி ஸப்ளிமென்ட் : 14.02.1997). மீள் நினைவுகளான முதல் பாகத்திற்கும் சமகால தேசிய யுத்தம் தொடர்பான மூன்றாம் பாகத்திற்கும் அவர் வரலாற்றையும் வரலாற்றுச் சான்றுகளையும் சம்பவங்களையும் நண்பர்களையுமே சார்ந்திருக்கிறார். சிவானந்தன் ஆசிரியராக இருந்து வெளியிடும் இனம் மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கம் காலாண்டிதழ் இலங்கைப் பிரச்சினை பற்றிய மிகுந்த முக்கியத்துவம் கொண்ட ஒரு ஆய்வுச் சிறப்பிதழை வெளியிட்டதை இங்கு ஞாபகம் கொள்வது சிறந்தது. சண்முகதாசன் குமாரி ஜெயவர்த்தன போன்றவர்களின் மிக முக்கியமான இலங்கைப் பிரச்சினை பற்றிய ஆக்கங்கள் அதில் வெளியாகின. ஆக முதல் மூன்றாம் பாகங்களுக்கு வரலாற்றுச் சான்றுகளும் உறவினர்களதும் சக இலங்கை நண்பர்களுடையதும் வாழ்ந்துபட்ட அனுபவங்களே ஆதாரமாக அமைகின்றன. இன்னும் நாவல் மூன்றாம் பாகத்தில் கவனம் கொள்ளும் எண்பதுகள் தொடக்கம் தொன்னூறுகளின் ஆரம்பம் வரையிலுமான காலத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களில் இயங்க நேர்ந்தகலைஞர்களும் மனிதஉரிமையாளர்களும் அரசின் ஆயுதப்படைகளாலும் கொலைக்குழுக்களாலும் இயக்கங்களாலும் பெற்ற உயிர்வாழ்தல் தொடர்பான அச்சுறுத்தல் அனுபவங்களையும் இங்கு ஞாபகம் கொள்வது நல்லது. இதன் முதல் மூன்றாம் பாகங்களில் கூட பாத்திரங்களின் உளவியல் சித்தரிப்பிலும் தீவின் இயற்கைசார் சித்தரிப்பிலும் ஒருவர் பூரணத் தன்மையைக் காணத் தவறலாமேயொழிய நாவலின் வரலாற்றுத் தொடர்ச்சியிலும் நாவல் எடுத்துக் கொள்ளும் பிரச்சினையிலும் வரலாறு சார்ந்த தர்க்கத் தொடர்ச்சியிலும் ஆழமின்மையைக் காணமுடியாது.

நாவலின் கட்டமைப்பும் மொழி நடையும் விவரண முறையும் குறித்துச் சில அவதானங்கள்: நாவலின் மொழி நடை மிக மிக நிதானமானது. சிவானந்தன் சம்பவங்களுக்காக அவசரப்படுவதில்லை. உச்சபட்சமான உணர்ச்சிகரமான நடை இல்லை. நிறைய விவரணங்கள் இடம் அபறுகிறது. இயற்கை சார்ந்த தாவரங்கள் மரங்கள் தெருக்கள் ஒழுங்கைகள் புவிப்பரப்பு சார்ந்த விவரணங்கள் இடம் பெறுகிறது. கதை முழு இலங்கையின் புவிப்பரப்பையும் இனக்குழு மக்களையும் தனக்குள் எடுத்துக் கொள்கிறது. இயற்கையின் அழகும் அதன் அழிவும் மனிதனது அழகுடனும் அதனது அழிவுடனும் இணைந்து சித்தரிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம். சந்திலிப்பாய். நுவரெலியா. கொழும்பு. அனுராதபுரம். ஹட்டன் என கலவரங்களின் தோற்றமிடமாகவும் அழிவுகளின் மையமாகவும் இருந்த நகரங்கள். கிராமங்கள். வயன்கள். குடியிருப்புகள் நாவல் முழுக்க விரவிக்கிடக்கிறது. வாழ்ந்து பெற்ற அனுபவம் என்கிற பிரச்சினை நாவலின் ஆதாரத் தன்மையையோ நாவலின் முழுமையையோ கட்டமைப்பையோ பாதிக்கவில்லை என்பதுமே நிஜம்.

## நாவலின் முழுமை என்பது இரண்டு வகையில் அமைகிறது.

1. காலனியக்காலகட்டம் – சோசலிசக் கனவுகள் – இனவாதத் தேசியத்தின் வளர்ச்சி – தமிழ் இலட்சியவாதம் எவ்வாறாக சிங்கள தேசியவாதத்தின் திசைவழியிலேயே பிறழ்ந்த பிரக்ஞையாக பரிமாணம் பெறுகிறது எனும் தொடர்ந்த சிந்தனை – ஜான் பெர்ஜர் இந்நாவலை வியட்நாம் குறித்த பாவோ நின்னின் நாவல். ஜெர்மன் பாசிசம் குறித்த ஆன் மச்சேலின் நூல். ஸ்பானிய பாஸ்க் தேசியவாத அனுபவங்களைச் சொல்லும் பெர்னார்டோ அக்சாகாவின் நாவல் போன்றவற்றுடன் வைத்துப் பேசுவதை இங்கு நாம் கவனம் கொள்ள வேண்டும். (பேக் டு த பியுச்சர்: ஜான் பெர்ஜர் : தி கார்டியன் : 13.02.1997)

நாவலின் சித்தாந்த முழுமை என்பது காலனியத்தின் தாக்கம் சோசலிசத்தின் வீழ்ச்சி தேசியத்தின் சமக நெருக்கடி போன்ற அனைத்தும் தழுவியதாக அமைகிறது. அரசியல். – மொழியில்– ஜெர்மன் பாசிசம் – ரஷ்ய சோசலிசம் – கியூபப் புரட்சி – யுகாஸ்லாவியப் பிரிவினை – ரூவாண்டா உள் இனக் கொலைகள் போன்ற முழு வரலாற்று அனுபவங்கள் சார்ந்ததாக அமைகிறது.

2. பாத்திரப்படைப்புக்களின் முழுமை என்பது சிங்களவரும் தமிழரும் அடையாளம் தனித்துக் கொண்டிருந்த போதும் சரி. பரஸ்பரம் சிங்களர் தமிழர் அடையாளம் மறுத்த வெறுத்த நிலையிலும் சரி. அன்பு செய்தல் என்பதுவே மனிதரின் விதியாக இருக்கிறது. நிகழ்காலம் சாஸ்வதமில்லை. வரலாற்றின் அனர்த்தம் விளைவித்தது நிகழ்காலம். கடந்த காலத்தில் அதன் நினைவுகளில் அன்பும் தோழமையும் காதலும் நிலவியது. நாடுகள் பிரியலாம். எல்லைகள் வரையறுக்கப்படலாம். ஒரு நிலப்பரப்பில் மறுபடியும் எதிர்காலத்திலும் இறுகிய கட்டமைக்கப்பட்ட அடையாளங்களை விட்டு மீறிய விலகிய உறவும் அன்பும் தோன்றும். வளரும். இதுவே மனிதனுக்கு விதிக்கப்பட்டது. விஜய்யின் பாத்திரம் அடையும் பதில்கள் நாவலின் ஆரம்பத்தில் எழுப்பப்பட்ட கேள்விகள் –



படிப்பகம்

www.padippakam.com

சகாதேவனும் திஸ்ஸாவும் – ராஜனும் லாலும் – ராஜனும் லலியும் – திஸ்ஸாவும் முஸ்லீம் பெண் ஸோனுவும் – விஜய்யும் மொனலும் – கேட்டுக் கொண்ட கேள்விகள் அடைந்த பதில்கள் – இந்த கேள்விகளையும் பதில்களையும் தான் இறுதிவரை விஜய்யும் மீனாவும் நினைவுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அனர்த்தமான கொலைகளுக்கும் அதனது அபத்த நாடகத் தன்மைக்கும் வரலாறுசான்றாதாரமாக நிற்கிறது.

ஸல்மான் ருஸ்டியின் மிட்நைட் சில்ரனுக்குப் பின்னான நாவல்கள் அனைத்தும் குறித்து – வாழ்ந்து பெற்ற அனுபவம் எனும் அடிப்படையில் – இந்திய ஆதாரத் தன்மை குறித்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆயினும் அவரது இந்திய வாழ்வு குறித்த மூர்ஸ் லாஸ்ட் சைல்ட் நாவல் உள்பட – நாவல்கள் அனைத்தினதும் ஆதாரமாக – இந்து பாஸிஸம், பம்பாய் முஸ்லீம் மக்கள் கொலைகள், பால்தாக்கிரே என வரலாற்றுச் சம்பவங்கள் இருக்கிறது. இன்னும் தகவல் தொழில்நுட்பம் மனிதர்களின் இடப் பெயர்வு போன்றவை மிக வேகமாக விரைந்து கொண்டிருக்கும் சூழலில் கால இடைவெளியும் தூரமும் குறிப்பிட்ட புவிப் பரப்பின் அரசியல் மற்றும் வாழ்வு குறித்த நாவல்களின் குணச்சித்திரங்களின் சித்தரிப்பில் தீர்மானகரமாக பாத்திரம் வகிக்கும் என்றும் தோன்றவில்லை. இன்னும் நாவலின் வடிவம் விவரணம் மற்றும் அழகியல் சார்ந்த பிரச்சினைகள் கூட அரசியல் பரிமாணம் கொண்டவைதான் என்பதிலும் சந்தேகமில்லை.

கற்பிதம் செய்யப்பட்ட தேசியங்கள், நினைவுகள் மறந்த பிறழ்ந்த கட்டமைக்கப்பட்ட வரலாறுகளாகிறது. கற்பிதம் செய்யப்பட்ட தேசியம் கருத்தியலாகிறபோது பதற்றத்துடன் தன்னைக் காத்துக் கொள்ள அது பயங்கரமாக வடிவம் கொள்கிறது. காலனியாதிக்க எதிர்ப்பும் தேசியப் பிரக்ஞையும் கலாச்சார எழுச்சியும் கருதிய சிங்கள தேசியம் இன்று இனவாத தேசியமாகி சிறுபான்மை தமிழ் இனத்துக்கெதிரான இனக் கொலையாகப் பரிமாணம் பெற்றிருக்கிறது. (ஸர்மினி பாட்ரிஸியா கேப்ரியல் : தி சேட் ஸ்டோரி ஆப் சிறிலங்கா நியூ செயின்ட்ஸ் டைம்ஸ் : 22.04.1998) சிங்கள தேசியம் சென்று இன்று உறைநிலை அடைந்திருக்கிற பாதையில்தான் தமிழ்தேசியமும் தன்னைக் கருத்தியலாகக் கட்டமைத்துக் கொண்டிருக்கிறது. பெனடிக் ஆன்டர்ஸன் அவதானத்தின் படியும் சமகால சர்வதேசிய அனுபவங்களின் படியும் அனர்த்தங்கள் தொடர்கிறது.

நாவலை ஆப்ரோ அமெரிக்க எழுத்தாளர் ஜேம்ஸ் பர்ல்டுவினது நாவலுடன் சேர்த்துப் பேசுகிறார் இங்கிலாந்து இலக்கிய விமர்சகரான மெலிஸா பென் (தி இன்டிபென்டன்ட் : ஐலான்ட் இன் த ஸ்ட்ரீம் ஆப் ஹிஸ்டரி : 11.01.1997). இதே போல ஆப்பிரிக்க எழுத்தாளரான செம்பேன் உஸ்மானுடன் இணைத்துப் பேசுகிறார் இலக்கிய விமர்சகர் திமோதி பிரன்னன் (போஸ்ட் இகனோகிளாஸம் : திமோதி பிரன்னன் : டைம்ஸ் லிடரரி ஸப்ளிமென்ட் : 14.02.1997). ஜேம்ஸ் பால்ட்வின் சிவானந்தன் போலவே தீவிரமான அரசியல் நிலைபாடுகள் கொண்டவர். இலக்கியவாதியாகவும் வென்றவர். தீவிரமான அரசியல் நிலைபாடுகள் கொண்ட படைப்பாளர்கள் ஒரு விபத்தில் சிக்கிக் கொள்ள நேர்வதுண்டு : செஸ் பலகையின் காய்களைப் போல தமது பாத்திரங்களை தமது அரசில் நிலைபாடுகளுக்காக நகர்த்துவார்கள் என்பது தான் அந்த ஆபத்து. ஆனால் அரசியல் நிலைபாடுகளும் நம்பிக்கைகளும் மானுட உணர்ச்சி நிலைகளிலிருந்தும் அறிதலிலிருந்தும் பிரிக்கமுடியாதவை. ஒரே சமயத்தில் அரசியலின் உள்ளே இருப்பதும் மானுடர்களைச் சித்தரிக்கும் போது அதிலிருந்து வெளியேறுவதுமான சிருஷ்டி வித்தையில் சிவானந்தனும் பால்வினும் வெற்றி பெறுகிறார்கள். செம்பேன் உஸ்மானின் திரைப்படங்களும் சரி, அவரது திரைப்படங்களுக்கு ஆதாரமான அவரது நாவல்களும் சரி பின்காலனிய நாவல்கள் என்கிற நினைவுகூரல்களுக்குள் அமையாது. அவரது கதை மாந்தரும் பிரச்சினைகளும் முழுக்க ஆப்பிரிக்கத் தன்மையும் இடையாறாத ஆப்பிரிக்க வரலாற்றுத் தொடர்ச்சியும் கொண்டவர்கள் (செம்பேன் உஸ்மான் : ஆப்பிரிக்க சினிமா யமுனா ராஜேந்திரன் : தாமரைச் செல்வி பதிப்பகம் இந்தியா). இதைப் போலவே சிவானந்தனின் நாவல்களை பிரிட்டீஸ் ராஜ் நாவல்கள் அல்லது பின் காலனித்தவ நாவல்கள் என்ற வகையினத்துள் அடைக்க முடியாது. ஏனெனில் சிவானந்தனின் கதை மாந்தர்களும் சரி அவரது கதையின் வரலாற்றுப் பின்புலமும்சரி முழுக்கவும் இலங்கை மக்களின் வரலாற்றுத் தொடர்ச்சியும் மானுடத் தொடர்ச்சியும் பண்பாட்டுத்தொடர்ச்சியும்கொண்டவையாகும். இவ்வகையில் சிவானந்தனின் நாவல் அரசியலும்



படிப்பகம்

www.padippakam.com

அழகியலும் சிருஷ்டித் தன்மையும் மூன்றாம் உலகப் படைப்பாளியின் பிரக்ஞையும் ஒருங்கே அமையப் பெற்ற படைப்பாகிறது.

நாவலைப் படித்து முடிக்கிறபோது மனதெங்கும் விரவியிருக்கிறபடி நான்கு பாத்திரங்கள் உலவுகின்றன். இவர்கள் சமரசம் செய்து கொள்ளாத இலட்சியவாதிகள். நேசிக்க மட்டுமே தெரிந்தவர்கள். சிந்திக்கத் தெரிந்தவர்கள். அதிகாரவர்க்க சோசலிஸ்ட்டுகள் பற்றி விமர்சனத்தடனும் சேவை மனப்பான்மையுடனும் நடமாடும் சிங்கள மருத்துவரான லால். அன்பும் காதலும் அடுத்தவர் நலன் நாடும் மாண்பும் கொண்ட பெண்ணாகிய ராஜனின் மனைவியும் லாலின் சகோதரியும் விஜய்யின் தாயுமாகிய மரணமுற்ற லலி. லலியை தனது வாழ்வின் மையமாகவும் ஆதாரமாகவும் காதலாகவும் கொண்டு வாழ்ந்து அவளது மரணத்தின் பின் இங்கிலாந்து சென்றுவிடும் ராஜன். இன அடையாளம் அற்றவனாகி மானுட அடையாளம் மட்டுமே நிறைந்தவனாகி அதே மானுட அன்புக்காக தனது சமீபத்திய நண்பனான யோகாவைக் காப்பாற்றப் போய் கொலையுறும் விஜய். நான்கு பேருமே சமரசமற்ற நேசிக்கத் தெரிந்த சிந்திக்கத் தெரிந்த இலட்சியவாதிகள். இலட்சியவாதமும் அன்பும் சேரும் போதுதான் புதிய மானுடம் பிறக்கிறது. இந்த நாவலிலும் ஒன்டாஜியின் நாவலைப் போலவே ஆவிகள் வருகிறது. விஜய் அவைகளை ஒரு சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகிறான். ஒன்று அன்று உலகை ஆட்டிப் படைத்த கம்யூனிஸ பூதமாகிய ஆவி. இன்று அவனது அன்னை லலியின் ஆவி. இந்த ஆவிகள் நாவலின் ஆன்மாவாக எங்கெங்கும் அலைந்து திரிகிறது.

நாவலின் இறுதியில் ரவி விஜய்யைச் சுட்டுக் கொன்ற பின்னால் மீனா எதிர்ப்புக்குரல் எழுப்பும்போது அவளையும் சுட எத்தனிக்கும் ரவியின் துப்பாக்கியைத் தட்டிவிடும் யோகி 'நான் பொறுப்பெடுத்துக் கொண்டுவிட்டேன்' என்கிறான். நாவல் முடிகிறது. நாவல் போதனைகள் செய்யவில்லை. எதிர்காலம் குறித்த தீர்ப்புக்கள் எதையும் முன்வைக்கவில்லை. யோகி பொறுப்பெடுத்துக் கொண்டது அவநம்பிக்கையின் குரலா அல்லது நம்பிக்கையின் அறைகூவலா என்பது பதில் காணமுடியாத கேள்வியாக நிற்கிறது.

●

# குஜராத்தில் கொலை வெறி!

– சோதிப் பிரகாசம்

உண்பதில் ஒரு சிலருக்குப் பெருமை!

உடுப்பதில் வேறு சிலருக்குப் பெருமை!

உப்பரிகையில் உறைவதிலோ இன்னும் சிலருக்குப் பெருமை!

ஆனால், உழைப்பதில் பெருமைப் படுவதில்தான் உண்மையான மனித மாண்பு அடங்கி இருக்கிறது என்பது இவர்களுக்குப் புரிவது இல்லை!

மற்றவர்களை மதிக்கின்ற பண்பாட்டில் ஒருவன் பெருமைப் பட்டுக் கொள்ளலாம்;

மற்றவர்களுக்கு உதவிடத் துடிக்கின்ற சமுதாய அக்கறையில் ஒருவன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்;

சிந்தனையின் எழுச்சியில்கூட ஒருவன் பெருமைப் பட்டுக் கொள்வதில் தவறு இல்லைதான்;

ஆனால், பெருமைப் படுவதற்கு என்று இப்படி எதுவும் இல்லாதவர்களும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள் – பிறப்பிலே தாங்கள் உயர் பிறப்புகள் என்று!

இத்தகு வீண் பெருமைகளில் ஒன்றுதான் மதப் பெருமை!

ஒரு கொலை வெறியாக மாறி குஜராத்திலே இன்று இது கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கிறது.

'தன்னைப் போல் பிறனையும் நேசி' என்பதுதான் கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை!

'அன்பே சிவம்' என்பதுதான் இந்து மதத்தின் அடிப்படை!



படிப்பகம்

www.padippakam.com

'நிகரற்ற அன்புடையோன்' என்றுதான் அல்லாவைத் திருக் குர்ஆனும் அறிமுகம் செய்து வைக்கிறது!

எனவே, அன்பினில் நம்பிக்கை கொண்டவர்கள் மட்டும்தாம் கிறிஸ்தவர்களாகவும் இந்துக்களாகவும், இஸ்லாமியர்களாகவும் இருந்திட முடியும் என்பது வெளிப்படை!

ஆனால், அடிப்படை வாதிகளாகத் தாங்கள் மாறிவிட்ட உடன், கடவுளின் அன்பில் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள் இவர்கள்!

ஒரு காலத்தில் –

எதிர் நிலை (protestant)க் கிறிஸ்தவர்களை உயிருடன் எரித்துக்கொன்றார்கள் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள்; கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களை உயிருடன் எரித்துக் கொன்றார்கள் எதிர் நிலைக் கிறிஸ்தவர்கள்.

சமணர்களைக் கழுவில் ஏற்றிக் கொன்று குவித்தார்கள் சில நெறியாளர்கள்; இந்துக்களைக் கழுவில் ஏற்றிக் கொன்று குவித்தார்கள் சில நெறியாளர்கள்; இந்துக்களைக் கொன்று குவித்து வந்தார்கள் இஸ்லாம் நெறியாளர்கள்!

ஆனால், மதம் என்னும் கோட்பாட்டை (ideology)த் தூக்கிப் பிடித்துக் கொண்டு – தங்கள் உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுகின்ற நோக்கத்தில் – அடிமைச் சாதியினருக்கும் வருக்கங்களுக்கும் எதிராக – ஆதிக்க வருக்கங்கள் நிகழ்த்திக் காட்டி வந்த வருக்கப் போராட்டங்கள் இவை என்பதுதான் உண்மை!

ஏனென்றால், ஆண்டான்களும் பண்ணைக் கிழார்களும் (feudal lords) வழி காட்ட – மன்னர்களின் ஆதரவில் – சிற்றுடைமைக் காரர்கள் (petty bourgeoisie) நிகழ்த்திக் கொண்டு வந்த கொடும் செயல்கள்தாம் இவை!

இப்படித்தான் சிற்றுடைமைக்காரர்களின் கோட்பாடாக மத அடிப்படை வாதம் (religious fundamentalism) இங்கே தலை விரித்து ஆடிக் கொண்டு இருக்கிறது.

ஆண்டான்களையும் கிழார்களையும் வீழ்த்திய வண்ணம்தான் முதலாண்மையால் வளர்ந்திட முடியும் என்பது பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை விதி!

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் உள்நாட்டுப் போர்களாகவும், ஃப்ரான்ஸ் நாட்டிலே ஒரு புரட்சியாகவும் வெடித்துக் கிளம்பி இருந்த வருக்கப் போராட்டங்கள் எல்லாம் இந்தப் பொருளாதார விதியின் வெளிப்பாடுகள்தாம் என்றால் அது பிழை ஆகாது.

ஆனால், இந்திய ஒன்றியத்திலோ, தள்ளாட்டம் போட்டவாறுதான் முதலாண்மை வளர்ந்து கொண்டு வந்து இருக்கிறது.

முதலாண்மையின் இந்த மெதுவான வளர்ச்சியில், பெரும்பான்மையாகச் சீரழிந்து கொண்டு வந்து இருப்பவர்கள் சிற்றுடைமைக்காரர்கள்தாம்!

முதலாளிகளாக வளர்ந்து விட இவர்களால் முடிவது இல்லை; உழைப்பாளர்களாக மாறி விடவோ இவர்கள் விரும்புவது இல்லை!

தங்கள் சிற்றுடைமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, பழைமையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு இருப்பவர்கள் இவர்கள்! எனவே, வளர்ச்சிக்கு எதிரிகள் இவர்கள்! புதுமைக்கு – புரட்சிக்கு – மாற்றத்திற்கு – இவர்கள் எதிரிகள்!

பழைமையைப் பாதுகாத்திட வேண்டும் என்கின்ற இவர்களது வெறிதான் – அழிவின் விளிம்பில் நின்று கொண்டு அனைத்தையும் அழித்துவிடத் துடிக்கின்ற இவர்களது வெறிதான் – அடிப்படை வாத நெறி ஆகும்.

முதலாண்மையின் வேகமான வ்ளர்ச்சியில் இவர்கள் அழிந்து போவது உறுதிதான் என்ற போதிலும், அழிவதற்கு முன்னர் முரட்டு



படிப்பகம்

www.padippakam.com

வாதிகளாக (fascists) முன்னணிக்கு வந்திட இவர்கள் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள்!

இந்த முரட்டு வாதம்தான் குஜராத்தில் இன்று வெறியாட்டம் போட்டுக் கொண்டு இருக்கிறது.

உச்ச நீதி மன்றத்திலே நிலுவையில் ஒரு வழக்கு இருக்கின்ற பொழுது, வழக்குச் சொத்திற்குள் அத்து மீறி நுழைந்திட முற்படுகிறார்கள் இந்து அடிப்படை வாதிகள்!

வன்முறையின் மீது இவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையினைப் பொருத்தவரை, தாலிபான்களுக்கும் இவர்களுக்கும் இடையே எந்த ஒரு வேறுபாடும் இல்லை!

இந்த இந்து அடிப்படை வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக, தொடர் வண்டிக்குத் தீ மூட்டிக் கொலை வெறியாட்டம் போடுகிறார்கள் இஸ்லாம் அடிப்படை வாதிகள்!

கொலை வெறியைப் பொருத்தவரை, இந்து அடிப்படை வாதிகளுக்கும் இஸ்லாம் அடிப்படை வாதிகளுக்கும் இடையே எந்த ஒரு வேறுபாடும் இல்லை!

அடிப்படை வாதிகளின் இந்தக் கொலை வெறியாட்டத்தில் மடிந்து படுவனவோ மனித உயிர்கள்!

அன்புதான் ஏசு என்றால் –

அன்புதான் சிவம் என்றால் –

அன்புதான் அல்லா என்றால் –

பல பெயர்களில் ஒரே கடவுளை வழி பட்டுக் கொண்டு வருகின்ற மதங்களுக்கும் அடிப்படை வாதிகளுக்கும் இடையே எந்த ஒரு தொடர்பும் இருந்திட முடியாது.

இது போல, ஹிட்லருக்கு ஆதரவு அளித்து வந்த முரட்டு வாதிகளுக்கும் இந்த அடிப்படை வாதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்றுதான்!

அவர்கள் பந்தவ (racial) அடிப்படை வாதிகள்!

இவர்களோ மத அடிப்படை வாதிகள்!

ஆனால், இவர்கள் இருவரும் சிற்றுடைமைக் காரர்கள் என்பதுதான் இவர்களை அடையாளம் காட்டுகின்ற பொதுவான பொருளாதார மெய்மை ஆகும்!

எனவே, இந்த முரட்டு வாதிகளுக்கு எதிராகப் பொங்கி எழுந்து பொது நாயக உரிமைகளை (democratic rights)ப் பாதுகாத்திட வேண்டியது பொது மக்களின் கடமை ஆகிறது.

இந்திய ஆதிக்க வருக்கங்களின் மறுநிகரிகளாக (representatives) இன்று ஆட்சி செலுத்தி வருபவர்களோ இந்து அடிப்படை வாதத்தின் ஆதரவில் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பவர்கள்!

எனவேதான் முரட்டு வாதத்திற்கு எதிரான இவர்களது நடவடிக்கைகளில் ஒரு தொய்வு காணப் படுகிறது.

இந்தத் தொய்வு நிலையினைக் கை விட்டு, குற்றங்களுக்கு எதிராகச் சட்டப்படி இவர்கள் நடவடிக்கை எடுத்திடுகின்ற வகையில் இவர்களைக் கட்டாயப் படுத்துகின்ற திறல்கள் (forces), உழைப்பாளர்களும் முதலாளர்களும் மற்றும் பிற பொது நாயக மக்களும்தாம் ஆவர்.

மதக் குருக்களும் மதத் தலைவர்களும் புறக்கணிக்கப் பட்டால் ஒழிய, அயோத்திப் பிறழ்ச்சனையில் இணக்கமான உடன்பாடு எதுவும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

ஆன்மிகக் காரியங்களை மட்டும் மதக் குருக்கள் கவனித்துக் கொள்ளட்டும். பிற உலகக் காரியங்கள் அனைத்தையும் மக்கள்தாமே கவனித்துக் கொள்வர் என்று அமைகின்ற உலகாயத வாதம் (secularism) மட்டும்தான் இச்சூழ்நிலைகளில் நமக்கு உதவிட முடியும். ●



படிப்பகம்

www.padippakam.com

# வரப்பெற்றோம்

1. பறத்தல் அதன் சுதந்திரம் (இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பெண் கவிதைகள்)- காவ்யா வெளியீடு - விலை ரூ.100/-

தமிழில் இத்தனை பெண் கவிஞர்கள் இருக்கிறார்களா என்று வியக்கத் தோன்றுகிறது. 52 பெண் கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு சொல்லிக் கொள்ளும்படியான ஜெயராணியின் கவிதை ஒன்று:

நான் காண்பிக்க மறுக்கும்
நீர்த்துப் போன
என் விழிகளில்
கல்லுடைத்து
மண் சுமந்து
பீடி சுற்றி
பட்டாசு தயாரித்து
இன்னும் இன்னும்
சவக்களையின்
மிச்சங்கள் மட்டுமே
பதிந்திருக்கின்றன. ஆனாலும்
விரைப்பான
என் கைகளில்
சர்வமாகப் பிடித்திருக்கிறேன்
எனக்கான உரிமைகளை
கொஞ்சம்
கூடுதலான நம்பிக்கையோடு.

2. 'மனிதனாய் இரு' கவிதைகள்
ஆசிரியர் : கு. தென்னவன்.
வெளியீடு : ஏகவள்ளி பதிப்பகம், 46, வடிவேலு தெரு, பெரம்பூர், சென்னை - 11.
விலை ரூ.30/-

3. தகழியின் நாவல்கள் (தமிழில்) ஓர் ஆய்வு
டாக்டர் பத்மாவதி விவேகானந்தன் - விலை ரூ.28/-

4. காலந்தோறும் மானுடம் - கட்டுரைகள்
வெளியீடு :
மாணவர் மறுதோன்றி அச்சகம்
ஆசிரியர் :
டாக்டர் பத்மாவதி விவேகானந்தன்.
விலை : ரூ.50/-

5. உன்னை அறிந்தால் - கவிதைகள்
ஆசிரியர் :
டாக்டர் பத்மாவதி விவேகானந்தன்
வெளியீடு :
மாணவர் மறுதோன்றி அச்சகம்
விலை ரூ.30/-

6. சமூகப் பயன்பாட்டில் இலக்கியக் கல்வி கட்டுரைகள்
டாக்டர் பத்மாவதி விவேகானந்தன்
கோதை பதிப்பகம். விலை ரூ.35/-

7. சிறுகதை - 1999 (திறனாய்வு)
டாக்டர் பத்மாவதி விவேகானந்தன்
கோதை பதிப்பகம். விலை ரூ.60/-

8. இரவுகள் அழகு - கவிதைகள்
த. பழமலய் - பெருமிதம் வெளியீடு
விலை ரூ.30/-

9. முக்கோணத்தின் நாலாவது பக்கம் கட்டுரைகள் - அமிர்தம் சூர்யா
அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் -
விலை ரூ.30/-

## நடுநிலையாளர்களின் குரல்கள்

### இடுகாட்டு அமைதி

இன்று நாம் பேசத்தவறினால்
இடுகாட்டு அமைதி கவிந்துவிடும்.

ஒவ்வொரு குடும்பமும் கருகிப்போம்
ஒவ்வொரு வீடும் சாம்பல் குவியலாகும்.

அமைதிக்கு அப்பால் இருந்து
அவலக்குரல் மீண்டும் வரும்.

இங்கு யாருமில்லை.
யாருமே இல்லை
யாரும் இல்லை

- Sahir Ludhiyanwi
தமிழில் : புதுவை ஞானம்



படிப்பகம்

www.padippakam.com

# "ரத்னாம்பாள் சரித்திரம்"

- ப்ரதிபா ஜெயச்சந்திரன்



உறவை அறுத்து வாழ்வு பிடித்ததில்
புதிய உலகம் உண்டாயிற்று
அது தனக்கு நல்லதென்று கண்டாள்
சாயுங்காலமும் விடியற்காலமுமாகி
முதலாம் ஆண்டு ஆயிற்று.

புளதியுதறி யெழுந்து பின் திரும்பி
உப்புச்சிலையாக மனமின்றிச் சென்றாள்
சென்றவள் சென்ற இடம்
..........ஐயர் மடி
மடி என்று மாமியானது
பின்னாள் நடந்தது.

இந்துவாய் இருந்ததால் இருக்கப் பிடித்தது.
ஐயன் நல்லவன் _ அலுக்காத கட்டில்
இறுக்கிப்பிடித்தகரம்மூன்றைக்கொடுத்தது
குவா-
-குவாட்டர்ஸ் வாசம் எங்கிலும்
அம்மையப்பன் துணையின்றி
நடந்த வாழ்வின் ஆறுதல்
ஸ்ரீரஞ்சனி லதாங்கி
புல்லாங்குழலின் புதிய பூபாளம்:
பெயர் சொல்லவோர் குஞ்சுக் குழவி.

ஐயன் வேர் ஆழமாய் இறங்க
நாவில் சூடிய அந்நிய பாஷை
ரத்னா என்கிற ரத்னாம்பாள்
என்கிற மடிசார் _ மாமி
ஸ்பஷ்டமாய் இவளுக்கு
அமைந்து போயிற்று அவா பாஷை!
பெண்களின் வாழ்வுக்கு
ஐயன் விட்ட மூச்சில் படித்த பாடம்:
-அப்போது
ஸ்ரீரஞ்சனிக்கும் சேரிப்பையனுக்கும்
வந்து சேர்ந்ததோ ரேழு பொருத்தம்-
மாலை மாற்றி வர
ஏற்கவியலா மனசு

'நன்னா இருப்பேளா
பெத்த வயிறு பத்தி எரியறது
சேரிப்பயல கட்டீட்டு வந்து நிக்கிறியேடி
போயிடுங்கோ
உங்களுக்குஇந்தாத்திலே இடமில்லே'
என்றாள் அன்னை
தன்சேறு மறந்து.

★★★



படிப்பகம்

www.padippakam.com



# கவனியுங்கள் : இந்துத்துவத்தின் மொழியை

அ. மார்க்ஸ்

இந்துத்துவச் சொல்லாடல்களின் நுணுக்கங்களையும் பயங்கரங்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது சில ஆண்டுகட்கு முன்பு தான் பார்த்த ஆங்கிலத் திரைப்படம் ஒன்றைப் பற்றி நண்பர் குறிப்பிட்டார். திரைப்பட வில்லன் ஒரு 'சேட்டலைட்'டின் துணையோடு இந்த உலகம் முழுமையையும் தனது ஆளுகைக்குள், கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடுகின்றான். இதற்கான அவனது நடவடிக்கைகளில் ஒன்று: 'சேட்டலைட்' மூலம் உற்பத்தி செய்யப்பட்ட, அனுமதிக்கப்பட்ட சில சொற்களையும் சொல்லாடல்களையும் தவிர வேறு எதையும் மனிதர்கள் உச்சரிக்கக் கூடாது.

இன்றைய இந்துத்துவச் செயல்பாடுகளை நோக்கும் போது இது ஒன்றும் விபரீதக் கற்பனையல்ல என்பது புலப்பட்டு விடுகிறது. இராமர்கோவில் பிரச்சினை, குஜராத் கொடுமை ஆகியவற்றில் இந்துத்துவம் இவ்வாறு உருவாக்கி நடைமுறைப்படுத்தும் சொல்லாடல்களையும் புழக்கத்திற்கு அனுமதிக்கும் சொற் களஞ்சியத்தையும் பார்ப்போம்.

முதலில் இந்த பிரச்சினைக்குரிய இடம் X பிரச்சினைக்கு அப்பாற்பட்ட இடம் என்கிற முரனை எடுத்துக் கொள்வோம். கடந்த சில மாதங்களில் என்ன நடக்குமோ எத்தனை உயிர்கள் பலிகொள்ளப்படுமோ என நாட்டையே உறைய வைத்த அச்சத்தைப் பின்னணியாகக் கொண்ட விவாதங்கள் அனைத்தும் இந்த இரு சொற்களை மையங் கொண்டே சுற்றி வந்தன என்பதை நாம் அறிவோம். இதனை ஒட்டிப் பல நியாயங்களையும் முன்பு அரசு அளித்திருந்த பல வாக்குறுதிகளையும் முஸ்லிம்களேகூடப் பேச இயலாமற் முடக்கப்பட்டனர். எடுத்துக்காட்டாக 1992ல் மசூதி இடிக்கப்பட்டு அந்த இடத்தில் 'தற்காலிக' (make shift - இந்தத் தற்காலிக என்கிற சொல்லே மிகவும் அபத்தமான ஒன்று. ஒரு நிரந்தரமான நோக்கத்துடன் கூடிய வன்முறையான இடைக்கால நடவடிக்கைக்குத் 'தற்காலிகம்' என்கிற பெயரைச் சூட்டி ஏமாற்றுகிறது இந்துத்துவம்)க் கோயில் ஒன்றைச் சட்ட விரோதமாகவும், நீதி மன்றத்திற்கும் அரசுக்கும் அளித்த வாக்குறுதிகளை மீறியும் நிர்மாணித்தபோது அன்றைய பிரதமர் நரசிம்மராவ் இரண்டு வாக்குறுதிகளை அளித்தார்.

1. தற்காலிக இராமர் கோவில் சில தினங்களில் நீக்கப்படும்.

2. மசூதி இருந்த இடத்தில் மீண்டும் மசூதியே கட்டித்தரப்படும்.

இன்று இந்த வாக்குறுதிகளை நரசிம்மராவோ, காங்கிரஸ் கட்சியோ, மதச் சார்பின்மையை வலியுறுத்தும் இடதுசாரிக் கட்சிகளோ, தலித் கட்சிகளோ, ஏன் முஸ்லிம் அமைப்புகளோ கூட உச்சரிப்பதில்லை. இவர்கள் முன் வைக்கும் ஆக உச்ச பட்சமான கோரிக்கை 'பிரச்சினைக்குரிய' இடத்திலும் 'பிரச்சினைக்கு அப்பாற்பட்ட' இடத்திலும் இருக்கிற நிலையை (Status quo) - அதாவது மசூதி இடிக்கப்பட்டு தற்காலிக இராமர் கோயில் அமைக்கப்பட்டுள்ள நிலையைத் தக்க வைக்க வேண்டும் என்பதே.

பிரச்சினைக்குரிய X பிரச்சினைக்கு அப்பாற்பட்ட என்கிற உச்சரிப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன? சுமார் 400 ஆண்டுகாலமாக - ஒருபெரிய கும்பலைத் திரட்டி, சட்ட விரோதமாக மசூதி வளாகத்திற்குள் பாலராமர் சிலையை இந்துத்துவம் வைத்தது வரை - முஸ்லிம்களால் தொழப்பட்டு வந்த பாபர் மசூதியை 'மசூதி' எனக் குறிப்பிடாமல் பிரச்சினைக்குரிய கட்டிடம் என இந்துத்துவம் சொல்லாடி வந்ததை நாம் அறிவோம். ஊடகங்களும் அந்தச் சொல்லையே உச்சரிக்கத் தொடங்கின. இந்நிலையில் மசூதி இடிக்கப்பட்டகையுடன் 1993ல் நரசிம்மராவ் மசூதி இருந்த இடத்தையும் (80' X 40') அதை ஒட்டிய 67.07 ஏக்கர் நிலத்தையும் கைப்பற்றி இவற்றின் மீதான எல்லா வழக்குகளையும் ரத்து செய்து சட்டம்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றை இயற்றினார். அத்தோடு நிற்காமல் மசூதி இருந்த இடத்தில் 1528க்கு முன்பாக ஏதும் இந்துக் கோயில் இருந்ததா என்று கண்டறிந்து சொல்லுமாறு உச்ச நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு கேட்டுக் கொண்டது என்பது முழுக்க முழுக்க இந்துத்துவத்திற்கு ஆதரவாக ராவ் அரசு மேற்கொண்ட ஒரு நிலைபாடு. இதன் மூலம் வன்முறையாக மசூதி இடிக்கப்பட்ட கொடுமையும் முஸ்லிம்களுக்கு மசூதி இருந்த இடத்தின்மீது 400 ஆண்டுக்கும் மேற்பட்ட பாத்தியதை அடிப்படையிலான சட்ட உரிமையும் ஒரே வீச்சில் பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஆக நரசிம்மராவ் சொன்னது ஒன்று செய்தது ஒன்று. மசூதி இருந்த இடத்தில் ராமர் பிறந்ததற்கும், அங்கே கோயில் இருந்ததற்கும் வரலாற்றில் எந்த விதமானத் தடயங்களும் இல்லை என்கிற பிரச்சினைக்குள் இப்போது நாம் போக வேண்டாம். ஒரு குறிப்பிட்ட காலம் எந்த விதமான சொந்தமும் இல்லாமல் ஓரிடத்தில் வாழ்ந்தாலே அதன் மீதான ஒரு பாத்தியதையைச் சட்டம் ஏற்கிறது. 400 ஆண்டு காலம் ஒரு சாரார் தொழுத உரிமையையும் பாத்தியதையையும் எப்படி மறுக்க முடியும்?

ஆனாலும் உச்சநீதி மன்றம் ராவ் அரசின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் பிரச்சினைக்குரிய இடம் x பிரச்சினைக்கு அப்பாற்பட்ட இடம் என்கிற அய்யத்திற்கிடமான இந்த முரனைச் சட்ட பூர்வமும் ஆக்கியது. திர்ப்பின்போது அவ்வர் கொண்ட உச்ச நீதி மன்ற அமர்வில் பின்னாளில் உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதிகள் ஆகப் பதவி உயர்வு பெற்ற இருவர் (அகமதி, பரூச்சா) இந்தத் திர்ப்பு ஒரு சமுகத்திற்கு (அதாவது இந்துக்களுக்கு) ஆதரவானது என மாற்றுக் கருத்தைப் பதிவு செய்தது இங்கே குறிப்பிடத் தக்கது)

பிரச்சினைக்குரிய இடம் குறித்த இறுதித் திர்ப்பிற்குப் பின்னர் அரசால் கையகப்படுத்தப் பட்ட நிலத்தை அல்லது அதன் பகுதியை இந்துச் சமுகத்திற்கு வழங்க வேண்டுமானால் 1993க்குப் பிறகு உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒரு அமைப்பிடம்தான் கொடுக்க வேண்டும் (அதாவது பரிசத் அல்லது ராமஜன்ம பூமி நியாசுக்குக் கொடுக்கக் கூடாது) என்பது ராவ் இயற்றிய சட்டத்தின் ஒரு கூறு. இதை உச்ச நீதிமன்றத் திர்ப்பு (1994) கண்டு கொள்ளாமல் ஒதுக்கியது என்பதும் சிந்திக்கத் தக்கது.

டெல்லி உயர் நீதி மன்ற முன்னால் தலைமை நீதிபதி ரஜிந்தர் சச்சார் ஒரு வழக்கு பற்றி குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. லாகூரில் உள்ள கஞ்ச் என்றுமிடத்தில் 1722ல் ஒரு மசூதி கட்டப்பட்டது. 1762ல் சீக்கியர்கள் அதைக் கைப்பற்றி குருத்வாராவாக மாற்றிக் கொண்டனர். இது குறித்த விரிவான ஆதாரங்களுடன் மசூதியைத் தமக்கு மீட்டுத் தர வேண்டுமென முஸ்லிம்கள் வழக்குத் தொடர்ந்தனர் (1930). பிரிவி கவுன்சில் வரை வழக்கும் சென்றது. இறுதியில் (1940), சீக்கியர்களின் 150 ஆண்டு கால பாத்தியதை உரிமையைச் சுட்டிக் காட்டிய கவுன்சில் முஸ்லிம்களின் உரிமையை மறுத்தது. இந்தச் சட்ட பூர்வமான முன்னுதாரணங்களை எல்லாம் கருத்தில் கொள்ளாத உச்ச நீதி மன்றம் 'சர்ச்சைக்குரிய இடம்' என்கிற இந்துத்துவச் சொல்லாடலுக்குச் சட்ட பூர்வ ஏற்பு (Legitimise) வழங்கியது.

அரசியலைப்புச் சட்டம், நீதி மன்ற ஆணைகள், சட்ட ஒழுங்கு எல்லாவற்றையும் குழி தோண்டிப் புதைத்து கும்பலைக் கூட்டி இருக்கிற நிலையைத் தமக்கு ஆதரவாக அதிரடியாக மாற்றுவது என்பது இந்துத்துவ நடைமுறை. இந்த ஆதரவுக் கும்பல் நடவடிக்கைகளுக்கு இரத யாத்திரை, சிலா பூஜை, கர சேவை என்றெல்லாம் மதம் , சார்ந்த பெயர்களிட்டு கும்பல் வன்முறையைச் சடங்கு நடைமுறைகளாக முன் வைப்பதும் பின்னர் அதன் மூலம் உருவாக்கப்பட்ட புதிய நிலையை 'இருக்கிற நிலை'யாக (Status quo) நியாயப்படுத்துவதும் அதன் செயல்பாடு. வன்முறைக் கும்பலுக்குக் 'கரசேவகர்' எனப் பெயரிடுவதும் வன்முறைக் 'கரசேவை' என இவர்கள் சொல்லாடுவதும் அனைவரும் அறிந்த ஒன்று. கரசேவை என்றால் பஜனை பாடுகிற விசயமல்ல, அது கடப்பாறையை வைத்து நடத்துகிற காரியம் என இன்றைய உள் துறை அமைச்சர் அத்வானி மசூதி இடிப்பிற்கு முன்னர் கூறியது நினைவிருக்கும். பரிசத் மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

பஜ்ரங் தள் உறுப்பினர்கள் / இந்துக்கள் / கரசேவகர்கள் ஆகிய மூன்று சொற்களையும் இவர்கள் பதிலிகளாக மாற்றி மாற்றி உச்சரிப்பது கண் கூடு. இந்த வகையில் வன்முறை நடவடிக்கைகளைத் திட்டமிடும் வன்முறையாளர்கள் தங்கும் இடம் கரசேவகபுரம். இந்த வரிசையில் இந்துத்துவம் தற்போது உருவாக்கியுள்ள இன்னொரு சொல் ராமசேவகர்கள். ராம பக்தர்கள் + கரசேவகர்கள் என்கிற இரு சொற்களை இணைத்து இச் சொல்லாடல் உருவாக்கப்பட்படுகிறது. யார் வேண்டுமானாலும் ராம பக்தர்களாக இருக்கலாம். காந்தி கூட ஒரு பெரிய ராம பக்தர்தான். ராம பக்தர்களாகத் தம்மை அடையாளம் காணும் இந்துக்கள் அனைவரையும் ராமனின் பெயரிலான முஸ்லிம் எதிர்ப்பாளர்களாக, மசூதி இடிப்பாளர்களாக, வன்முறையாளர்களாக முன்னிறுத்தியது இந்துத்துவத் தந்திரம். இந்தத் தந்திரத்தால் முஸ்லிம்கள் மட்டுமல்ல, வன்முறையில் விருப்பமற்ற இந்துக்களின் சுதந்திரமும் பறிக்கப்படுகிறது. தாங்கள் ராம பக்தர்கள்தான், ராம சேவகர்கள் அல்ல என அயோத்தியில் பல இந்துக்கள் வலியுறுத்திப் பேசியது 'இந்து' இதழில் வெளியாகியது. (அஞ்சலி மோடி கட்டுரை, மார்ச் 15)

மத்தியில் உள்ள தங்களின் ஆட்சியும் கவிழ்ந்துவிடக் கூடாது, திட்டமிட்ட காரியமும் நடக்க வேண்டும் என்பதற்காகத் தமது நிலைப்பாடுகளை இந்துத்துவம் கண்ட கண்டபடி மாற்றி, கவிழ்த்து, பொய்யுரைத்ததை யெல்லாம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிக்கைகள் கூட (மார்ச் 13) கண்டித்தன. 'இந்து' தனது செய்திகளிலேயே இதைப் பலமுறை சுட்டிக் காட்டியது. எப்படியெல்லாம் மாற்றி மாற்றிப் பேசினார்கள். ஒருவர் ஒன்று சொல்ல, மற்றவர் மாற்றிச் சொல்ல எப்படி எல்லாம் நாடகமாடினார்கள் என்பதையெல்லாம் இங்கே விட்டுவிடுவோம். இவற்றினூடாக அவர்கள் மேற்கொண்ட சொல்லாடல் உத்திகளின் சில அம்சங்களை மட்டும் பார்ப்போம்.

சிவராத்திரி அன்று கோயில் கட்டும் பணி தெடங்கப்படும் என இரண்டாண்டு காலமாகச் சொல்லி வந்தவர்கள் பிறகு நிலைமையை உத்தேசித்து 'பூமி பூசை / சிலா பூசை' என்று குறிப்பிடத் தொடங்கினர். பிறகு திடீரென (மார்ச் இரண்டாம் வாரத்தில்) சிலா பூசை, பூமி பூஜை இரண்டையும் விட்டு விட்டு 'சிலா தானம்' எனப் பேசத் தொடங்கினர். 'தானம்' என்று சொல்லும்போது தானம் பெறுவதற்கு ஒருவர் வேண்டும். அது யார்? அரசைத் தானம் பெறும் நிலையில் வைத்து ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதென்பது கோயில் கட்டும் பணியில் அரசுக்கு ஒரு கடப்பாட்டை ஏற்படுத்தும் தந்திரமாகிறது. அரசுடன் மேற்கொண்ட இரகசியப் பேச்சுவார்த்தைகளினூடாகக் கடைசில் டெல்லியிலிருந்து சத்ருகன் சிங் என்கிற பார்ப்பன அதிகாரி அனுப்பப்பட்டு ராமச்சந்திர பரமஹம்சிடமிருந்து சிலா தானம் பெறப்பட்டது. பெற்றுக் கொண்டதற்கு ரசிதும் வழங்கப்பட்டது. முன்னதாகத் தானத்தை ஃபைசாபாத் கோட்ட ஆணையர் ஏ.கே. குப்தா என்பாரிடம் தானம் வழங்குவதாக இருந்தது. பின்னர் அவர் ஒரு பார்ப்பனரல்ல என்பதால் சிங்கை டெல்லியிலிருந்து வரவழைத்து அவரிடம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தவிரவும் இதன் மூலம் மத்திய அரசின் மீது கடப்பாடு ஏற்றப்பட்டது.

இதற்கிடையில் குஜராத்தில் பா.ஜ.க. அரசின் ஆசியுடன் இந்துத்துவ வெறியர்கள் குறைந்தபட்சம் எழுநூறுக்கும் மேற்பட்ட (அதாவது அரசு வெளியிடுகிற விவரப்படி எழுநூறு; ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டிக்கவேண்டும் என்பது பொதுவான கருத்து) இசுலாமியர்களை கொன்று குவித்தனர். அய்ம்பதாயிரம் இசுலாமியர் இன்று அகதிகள் முகாமில் வதிகின்றனர். நரோடாவில் மட்டும் 700 பேர் கொல்லப்பட்டனர் எனவும், முஸ்லிம் பெண்கள் மீது தொடுக்கப்பட்ட வன்முறையை "வார்த்தைகளில் எழுத முடியாது" எனவும் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் கே.எஸ். பணிக்கர் குறிப்பிடுகிறார் (இந்து, மார்ச் 19). முஸ்லிம்களின் கடைகள் திட்டமிட்டு அடையாளம் கண்டு, துல்லியமாக அழிக்கப்பட்டன முப்பதுக்கும் மேற்பட்ட மசூதிகள் தகர்க்கப்பட்டன என்கிற விவரங்களைப் பலரும் குறிப்பிட்டுள்ளனர். குழந்தைகளை எல்லாம் பொறுக்கிப் போட்டு பெட்ரோல் ஊற்றி எரித்த கொடுமைகளை எல்லாம் சொல்லி மாளாது. குறைந்த பட்சம் இரண்டு குஜராத் அமைச்சர்களின்



படிப்பகம்

www.padippakam.com

மேற்பார்வையில் இக்கொடுமைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் 15,000 க்கும் மேற்பட்ட இந்துத்துவ வெறியர்கள் இரவு பகலாக ஆயுதங்களோடு தாக்குதலை நடத்தியதையும் எழுதாத பத்திரிகைகள் இல்லை.

இந்துத்துவம் இந்தக் கொடுமைகளை வழக்கம் போல எதிர் கொண்டு நியாயப்படுத்தியது. இரண்டு நாட்களுக்கு முன்னர் கோத்ராவில் சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டிகள் இரண்டு கொளுத்தப்பட்டு 58 கரசேவகர்கள் கொல்லப்பட்டதன். "இயற்கையான எதிர் விளைவு" என்றார் ஆர்.எஸ்.எஸ். பிரசாரகரும் இன்றைய முதல்வருமான நரேந்திர மோடி. நியூட்டனின் மூன்றாவது விதியை மேற்கோள் காட்டி 'ஒவ்வொரு வினைக்கும் ஒரு எதிர்வினை உண்டல்லவா?' எனப் புன்னகைத்தார் மோடி.

ஆக இந்துத்துவச் சொல்லாடலைப் பொருத்தமட்டில் பிரச்சினை கோத்ராவில் தொடங்குகிறது. அதற்கு முன் 1992ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதோ, தொடர்ந்த இசுலாமியர் மீதான வன்முறைகளோ, கோவில் கட்டுவதற்கு நாள் குறிப்பிட்டதோ, கோவில் கட்டுவதற்கென கரசேவகர்களைத் திரட்டி அவர்களுக்கு வெறியூட்டி அழைத்துச் சென்றதோ இவர்களின் கதையாடல்களில் தொடக்க நிகழ்ச்சியாக அமைவதில்லை. அல்லது ஒரேயடியாக இன்னும் நானூறு ஆண்டுகள் கதையைப் பின்னுக்குத் தள்ளி எந்தவித அடிப்படையுமில்லாத இராமர் கோயிலை இடித்து மசூதி கட்டப்பட்ட 'கதை'யை அவிழ்ப்பர்.

வெறியூட்டி அழைத்துக் செல்லப்பட்ட கரசேவகர்கள் தாங்கள் செல்கிற வழியெல்லாம் இசுலாமியர்களை இழிவு செய்து பேசியும், முஸ்லிம் கடைக்காரர்களிடம் வம்பு செய்தும், வாங்கிய பொருட்களுக்குக் காசு கொடுக்காமலும் பல்வேறு கொடுமைகளை மேற்கொண்டவாறே பயணித்தனர் என்பதையும், கோத்ரா சம்பவம் நடந்த அன்று அவ்வாறு ஒரு முசுலிம் கடைக் காரரிடம் பொருள்களைப் பெற்றுக் கொண்டு காசு கொடுக்காமல் சென்றதையும், கேட்கச்சென்ற முஸ்லிம் பெண்மணியை உள்ளே இழுத்துக் கொண்டதையும், ஆத்திரமடைந்த இசுலாமியர்கள் கல்வீசி எறிந்ததையும் உச்ச கட்டமாக இரண்டு 'போகி'கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதையும் ஆங்கிலப் பத்திரிகைகள் விரிவாக எழுதியுள்ளன (உ.ம். எக்ஸ்பிரசில் நக்வியின் கட்டுரை).

மனித உரிமை ஆர்வலர்களும், இசுலாமிய அமைப்புகளும், இந்துத்துவத்தைத் தொடர்ந்து கண்டித்து வருகிற இடது சாரிகள் உள்ளிட்ட பலரும் கோத்ரா கொடுமையையும் வன்மையாகக் கண்டித்தனர். வழக்கம் போல வெளி நாட்டுச் சதி குறித்த அய்யத்தையும் அத்வானி வெளியிட்டார். இத்தனைக்குப் பின்னும் "மதச்சார்பற்றவர்கள் எனச் சொல்லிச் கொள்பவர்கள் கோத்ரா சம்பவத்தைக் கண்டிக்கவில்லை. முஸ்லிம்கள் தாக்கப்பட்டால் கத்துகிறார்கள். இந்துக்கள் தாக்கப்பட்டால் கண்டு கொள்வதில்லை" என்கிற பொய்யை இந்துத்துவம் தொடர்ந்து பரப்பியது.

எல்லா வன்முறைகளையும் கண்டிக்க வேண்டும் என்பதில் அய்யமில்லை. இசுலாமியர்களின் வன்முறையை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு ஆலோசனைமிக்க இந்துத்துவ அரசு இருக்கிறது. அரசின் ஆதரவோடு பெரும்பான்மைச் சமூகத்தின் பெயரால் ஒரு சிறுபான்மைச் சமூகம் கொன்று குவிக்கப்படும்போதும், கொடுமைக் குள்ளாக்கப்படும் போதும் நாம் தான் குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது பொறுக்கவில்லை இந்துத்துவ வெறியர்களுக்கு.

நிற்க, மார்ச் 3ந்தேதி அத்வானி குஜராத்திற்கு வருகை புரிந்தார். கலவரப் பகுதிகளைத் தேர்வு செய்து சுற்றிப் பார்த்துவிட்டு வழக்கம்போல 'கோத்ரா சம்பவத்தின் எதிர்வினை' என்கிற கருத்தைப் பேசிய அத்வானி கோத்ரா சம்பவத்தைப் 'பயங்கரவாத நடவடிக்கை' எனவும் குஜராத் நிகழ்வுகளை மதக் கலவரம் என்றும் வேறுபடுத்தி ஒரு புதிய முரணைக் கட்டமைத்தார் (இந்து, மார்ச் 4).

1969, 70, 85, 90, 92 எனத் தொடர்ந்து மதக் கலவரங்கள் நடைபெற்று வருகிற இடம் குஜராத். மண்டல் எதிர்ப்புக் கலவரம் நாடெங்கிலும் நடைபெற்றதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கும் முன்பாகவே இட ஒதுக்கீட்டை எதிர்த்துக் கலவரம் நடந்த மாநிலம் குஜராத். இந்தியாவிலேயே அதிகம் முற்படுத்தப்பட்ட சாதியினர் வசிக்கும் மாநிலங்கள் இரண்டு. ஒன்று உத்திரப் பிரதேசம்



படிப்பகம்

www.padippakam.com

மற்றது குஜராத். குஜராத்திலிருந்து வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் சென்று வசிக்கும் இவ் உயர் சாதியினர் அங்குள்ள இந்துத்துவ அமைப்புகளின் முதுகெலும்பாய் உள்ளனர். குஜராத் பற்றி ஆய்வு செய்த அறிஞர் அச்சுத யக்னிக் "குஜராத் ஒரு எரிமலையின் மீது அமர்ந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சூழ் நிலையில் கோத்ரா சம்பவத்தைக் காரணமாகக் காட்டி இந்துத்துவ வெறியர்கள் திட்டமிட்டு, அரசு துணையுடன் மேற்கொண்ட மதப் படுகொலையே வெறும் 'எதிர்வினை' எனவும் சாதாரண 'மதக் கலவரம்' எனவும் ஒதுக்கி இதற்கு எதிராக கோத்ராவில் 58 பேர் கொல்லப்பட்டதை 'பயங்கரவாத நடவடிக்கை' எனவும் வேறுபடுத்தி எதிர் எதிராக நிறுத்தியதன் மூலம் மதக் கலவரம் என்பது தவிர்க்க முடியாதது, இயற்கையானது, மன்னிக்கப்பட வேண்டியது என்கிற கருத்தை மக்கள் மனத்தில் பதித்தது இந்துத்துவம்.

சொற்களும் பேச்சும் செயலினூடாக, செயலின் வினை பொருளாக, உப பொருளாகத் தோற்றம் கண்டன என மார்க்சியர்கள் குறிப்பிடுவர். இதில் நமக்கு எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை ஆனால் தோற்றம் குறித்த ஆராய்ச்சியைக் காட்டிலும் இன்று அதன் செயல்பாடுகளில் நமது கவனம் குவிவது அவசியம். தோற்றம் குறித்த கருத்தின் அடிப்படையில் சொல்லின், பேச்சின், சொல்லாடலின் அப்பாவித் தனத்திற்கும், இரண்டாம் நிலைத் தன்மைக்கும் நாம் கூடுதல் முக்கியதுவம் அளித்துவிட முடியாது. இந்து சொற்களும், சொல்லாடல்களும், பேச்சுக்களும் செயலின் வினை பொருட்களாக அல்லாமல் செயல்களின் மூலப் பொருட்களாக, செயல்களை உருவாக்குபவையாக, செயல்களை நியாயப்படுத்தி மக்களின் பொதுக் கருத்தில் ஏற்றுபவையாக, அதன் மூலம் மக்களைச் செயலற்றவர்களாக ஆக்கும் திறன் கொண்டவையாக உள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

மேற்குறித்த பயங்கரவாத அடிப்படையிலான கொலை X வகுப்பு வாத அடிப்படையிலான கொலை என்ற முரண்பாட்டினடியாக கோத்ராவில் கொல்லப்பட்ட இந்துக்களுக்குத் தலா இரண்டு லட்சம் ரூபாயையும் குஜராத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாயையும் ஈட்டுத்தொகையாக வழங்கியது நரேந்திர மோடி அரசு.

எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால்கூட கோத்ரா சம்பவத்தில் கொல்லப்பட்டது 58 பேர்கள். குஜராத்தில் கொல்லப்பட்டவர்களோ ஆயிரத்துக்கும் மேல். எனினும் தனது சொற் சாதுரியத்தின் மூலம் குஜராத் படுகொலை குறித்து ஒரு அடக்கப்பட்ட வாசிப்பை முன் வைப்பதில் வெற்றி கண்டது. இந்துத்துவம்.

இங்கொரு சம்பவம்: கலவரத்தை ஒட்டிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூற புகழ்பெற்ற காந்தியவாதி நிர்மலா தேஷ்பாண்டே குஜராத் சென்றார். முன்னதாகச் சென்று பயணிகள் மாளிகையில் தங்கியிருந்த நிர்மலா தன்னுடன் வர இருந்த முன்னாள் பிரதமர்களாகிய குஜ்ராலுக்காகவும் வி.பி. சிங்கிற்காகவும் காத்திருந்தபோது ஒரு புதிய ஆள் உள்ளே நுழைந்து அவரை 'நீங்கள் யார்?' என்று கேட்டிருக்கிறான். விவரம் சொன்ன நிர்மலா தன்னை ஒரு காந்தியவாதி என அறிமுகப்படுத்தியுள்ளார். அதற்கு அவன், "ஞாபகம் வச்சுக்க. இது சர்தார் படேலின் நாடு. காந்தியைப் பற்றிய இந்தப் பேச்செல்லாம் இங்கே வேண்டாம்... ஜெய் சீ ராம்!" என்று கத்திச் சென்றுள்ளான். (கல்பனா சர்மா, இந்து மார்ச் 18).

ஆக இந்துத்துவத்தின் முக்கிய எதிரியாக இருந்த காந்தியையும், காந்தியின் கொலையில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்பட்ட படேலையும் எதிர் முரண்களாக நிறுத்தி இன்றைய இந்துத்துவ வாதிகளைப் படேலுடன் அடையாளம் காண வைப்பதில் வெற்றி பெற்றுள்ளது இந்துத்துவச் சொல்லாடல்.

குஜராத் வன்முறையைக் காட்டி இராமர் கோயில் விவகாரத்தில் 'இந்து எதிர்வினை' மிரட்டலை ஒரு பேச்சுப் பொருளாக இந்துத்துவம் களம் இறக்கியுள்ள நுணுக்கம் மிகவும் ஆபத்தான ஒன்று.

- அடுத்த இதழில் முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# பூர்வகாணி(ச்)சாமி

– தவசி

தாகம் வியர்த்துக் கொட்டி நாக்கை உப்புக்கரிக்கச் செய்தது. மங்கலான பொழுதில் எழுதப்பட்ட வாழ்வுக்கான சரீர வார்த்தைகள் மிதந்தன பொழுதில். எதையோ வேண்டும் தாகம். நீர் அரும்பிய குளத்தில் சருகான தாமரை வேரைக் கிண்டி ஈரமெடுக்கும் குளத்து கொக்கின் அலகில் மனம். மண்விட்டு விரிவோடி விலகிக்கொள்கிறது கரம்பை மண். தாமரை சுமந்த வாசத்தின் சுவடுகள் படிந்து படிமணான குளத்து மண். அயிரை வால் சுழற்றிய கோடு திட்டிய ஓவியமாய் நிமிரக் கொத்திய அலகின் தாகம் உடல் சேர்ந்து மலங்க விழிக்கும். காலையின் காற்று தூக்கிப்போன தலைச் சும்மாட்டின் வலியைக் காணாத தூராந்திர தேச ஊர். சிறுமிகள் உள்பட தாவணிபோட்டு. கம்மல் சூடி. காலில் தண்டையணிந்து. மூக்குத்தி. சிரித்து. வளையலாக உள்ள கையை ஆட்டி. குளத்துவேர் ஊடுறுவிய ஈரப்பதத்தில் வரிசையாய் தெரியும் முகம்.

அந்தக் குளத்தின் பூர்வீகம் தெரியவில்லை. மேல் யாருமற்ற வெக்கை காற்று உலவும் வெளி. மௌன மூச்சின் லயம். நோஞ்சான் மாடு குளம்படி தாக்க சிரமப்பட்டு போகசாவகாசமாய் கரிச்சான் அமர்ந்து அசைபோடும் தன் நினைவுகளை. மஞ்சள் முகத்தோடு உருமி கரிமூட்டை ஏற்றிப்போகும் வேகத்தில் சலாரென ஒளிந்து கொள்ளும் மனிதர்கள்.

மேல் பார்த்த விழி கவிழும் நிழலாய் குளத்தில். பின்னல் கொடியில் அலைந்த மீன்கள் கண் சிமிட்டி ஒளி உமிழ்ந்த கனவு நீர் முட்டையாய் நகர்ந்து சேகரமாகிய வேர்கள் இன்னும் ஆழமாய் போய்க் கொண்டிருக்கிறது. தாகத்தின் நாக்குகள் நீண்டு தொட்டுத் தடவி கொஞ்சூண்டு துளியில் நாளாவது மடங்கு மகரந்த வாசனையில்பட்டு உயிர் சுரக்க மெய்ம்மை ஆரம்பமானது.

சுற்றிலும் வனத்தின் மௌனம். ஆள் அரவமாய் ஓடிக்கொண்டிருக்கும் ஓடை. வண்டுகள் ரீங்கரித்து கிங்...கிங் கென ஓசையெழுப்ப அவிழும் மொட்டில் ஒழுகும் தேனில்பட்ட இலைகள் பிசுபிசுத்து நகர்ந்த எறும்புகளின் வீடான சேதி நெடுகிலும் அலைவுறும். யாருமறியாத வன விருட்ச வீட்டில் பாம்புகள் கக்கிய கற்கள் வீசிய ஒளியில் ஊர்ந்து கொண்டிருந்த இருட்டும் இலைகளும். எங்கும் வெயில் இலாத குளிர்க்கானல் அலையும் வெளி. ஊடு பாதையில் ஒடிந்த கிளைகளில் ஏறி அடர்ந்த பறவைகள் எல்லையற்ற மௌனத்தை கத்தரித்து பறக்கும் சடசடத்து.

கண்மூடி தியானித்த ரெக்கைகள் அடிக்க நுழைத்த அடி ஐம்பத்துஎட்டாவதாக இருக்க கூடும். தாமரைக் குளத்தை தோண்ட அடிகள் பெருத்துக் கொண்டிருக்கும். குள வேர்களைத் தோண்ட துளி துளியாய் பெருகும் ஓடை. மெல்ல கொப்பளித்து பக்கவாட்டில் விழும் விந்தை. ஆதி நிலத்தில் நீர்பெருக்கு அதிகம் போலும். ஒவ்வொரு அடிக்குமான மண் நமது வண்ணம்மாற்றி உயிர்பிக்கும் வேர்களின் நீரூற்றை. மண் அள்ளிப்போட விழும் இடம் சேறாய் ஓடும். மண் இடம்விட்டு அமர்ந்து குத்துக்காலில் பேச்சுக் கொடுக்கும்.

'இன்னும் எத்தனாவது அடியில் உன் சனம்
இந்த மண்ணை ஒப்புக் கொள்ளும்'
'துளியின் பெருக்கம் ஓடும் ஓடையில் நாடோடிகள் வந்து பெருகும் போது'
'அதுவரை சுத்த மண்ணாயிராது தாதியின் பிள்ளையாய்
கொல்லப்புறம் உட்கார வைக்கப்படும்'
'மேல் தேசத்தில் நாங்களும் இனி அப்படித்தான்
உயிர்வாழ வேண்டியதிருக்கும்'.

எப்படியோ ஓடை புரண்ட தாமரைக் குளத்தின் நெடியறிந்து வருகிறான் குறவன்.



படிப்பகம்

www.padippakam.com

தாமரைக்குள் இலையெல்லாம் பசுமையாய் தோன்ற பட்சிகள் சுற்றி வட்டமடித்து ஆர்பரித்த வேளை ஊர்க்காரர்கள் பயந்துவிழுந்துகும்பிட்டு கிடாய் வெட்டிய இரத்தம் சிதறுகிறது.

கிடாய் அலறும் சப்தம் கேட்டு காது அதிர தோண்டிய இடத்திலிருந்து வேரின் தடத்தில் மேலேறுகிறான் குறவன். புதுப்பிராணியின் சாயல்சப்தம்இறந்துபட்ட ஆட்டுக்கு. கல்லால்ஆன கத்தியைக் கொண்டு அடிமேல் அடிவைத்து வருகிறான் ஆதி நரிக்குறவன். மண்ணின் ஒவ்வொரு அடுக்கும் அவனுக்கு பரிச்சியம் போலும். மண் கண்சிமிட்டி புன்முறுவலோடு அவனுக்கு கை அசைக்கிறது. ஆதி வரலாற்றின் தடயங்களான மண்ணடுக்கின் நிறம் குறவனின் உடம்பெங்கும் துளிர்த்து நிற்கிறது. அவனே சரித்திர சுமக்கும் ஆளாக வருகிறான்.

ஊரின் அரூபங்கள் செருமி முணுமுணுக்க ஆரம்பித்தன. நாய் பகலில் ஊளைக் கூப்பிட்டு சுற்றுகிறது தாமரைக் குளத்தை. குளத்துப்பக்கத்து அய்யனார் கோவிலில் குதிரைகள் கனைக்கும் சப்தம். காற்று அழித்தடிக்கும். இலையும் மண்ணும் பேசிய மொழியில் எல்லா ரகஸியமும் அடங்கியிருக்க வேண்டும். லாவகமாய் ஊர்த் தெருக்களில் புலம்பியபடி சுற்றுகிறது. கதவு நாராங்கியின் ஓரம் ஓரிரு வார்த்தையை ஒட்ட வைத்துவிட்டு நகரும்.

'நரிக் குறவர்களின் வருகை'

'தொல் குடிக்காரன் வருகிறான்'

முத்து சாமியின் வீட்டில் வேல்கம்பும், வாளும் சூரிக்கத்தியும் காது விடைத்து சிலுப்புகிறது முனையை வீட்டின் மூலையில். இருள் விலகிய சப்தத்தில் மௌனமாய் சிரிக்கும் சுவத்துப்பல்லி. உதிரத்தை தொட்ட வேல்கம்பின் நுனியில் கழுவாத இரத்தம் தீட்டியிருந்தது தஞ்சாவூர் ஆசாரியின் லாவகமான சிருஷ்டியை. பட்டாக்களும் கலப்பையும், வாளும், கத்தியும் செய்த தஞ்சாவூர் ஆசாரியின் காதில் விழுந்த அன்றைய வார்த்தையை உத்திரத்தோடு உரசி முறைக்கும் வேல்கம்பு எழுதியிருக்கிறது. வரி வரியான வார்த்தையை பல்லி முட்டைகள் மொழுகி அடைகாக்கும் இருட்டுப் பதத்தில் எங்கும் அரூப வெளிகள் எதையோ உணர்ந்துவிட்ட மூச்சில் பரபரப்பாகிறது.

முத்துச்சாமித் தேவன் பாடிய அர்ச்சந்திர மயானகாண்டப் பாடல்கள் எழுதிய நோட்டில் மெல்லிய ராகம் முணுமுணுக்கும் சப்தம். அறியப்படாத ராகத்தை முத்துச்சாமி தேவன் கூட அறிந்திருக்கவில்லை. பாடல் வரிகள் மெல்ல காத்திசைக்கும் பாங்கில் ராகத்தை பாடவாரம்பிக்கிறது. ஆலமரத்தின் இலைகள் சலசலத்த சப்தம் ஊரை உலுக்கியதாய் உடல்கள் நடுங்கிக் கொண்டிருக்கிறது.

எங்கும் வழமைக்கு மாறான ஆதிப்பழமை போன்று வெளியும் மனிதர்களும் உறவாடும் விந்தை. இலைகளின் அசைவும் மண்ணின் நகர்வும் மனித மொழி தாண்டிய விசயத்தை யாவருக்கும் அறிவிக்கும் பாங்கு அலாதியானது.

தாமரைக்குள வேரின் ஈரபசப்பில் நாவு நனைத்து அடங்கிய தாகப்பிரேமையில் மேல் வந்தேறி நிற்கிறான் நரிக்குறவன். அவன் விழிகள் புதியனவற்றில் பதிந்து மூடிக்கொள்கிறது. அலறும் கோழிகளின் சப்தம். வாளின் உரசலில் உயிர்களின் அலறல். கிழிபடும் சேலையைக் கொண்டு தூக்கில் தொங்கிய வலி. கண் முழிக்க முடியாமல் தினறும் குறவன். முடி தரித்த முனியாய் உடம்பெங்கும் கேசவனமாய் ஆடுகிறது. முரட்டுக்கல் பெயர்ந்து வந்து நிற்கும் அழகு. கருமையில் எழுதப்பட்ட வாசம் பிள்ளைப் பெறப்பையும் கள்ளின் நெடியையும் விலங்கு தின்ற கவிச்சியும் ஞாபகப்படுத்தும். சிமிறும் மொழியில் அரூபம் மட்டும் புரியும் மொழி.

ஏய்.... ஏய்... சா.. ஏய்.ய்..சா...மி... ஏ...

ஊர்சனம் கதவடைத்து தூங்குகிறது துர்ச்சகுனத்தின் சாயல்கேட்டு. தெருவில் காற்று கிளப்பிய புழுதி. தனுஷ்கோடியை அழித்த காற்றென பதுங்கும் ஊர்சனம். கூரைமேல், மண்ணின்மேல் பெரிய வாய்கொண்டு ஊளையிடும். ஒட்டுமொத்த ஊரின் முதுகெலும்புகள் கேட்கிறது. மண் தட... தட.... வென அதிரும் சப்தம். இருந்தன தானாக கிளம்பி இருப்பவற்றை அழிக்கும் வெளியின்கோடு. ஆட்டுரலும், குந்தாணியும், திருகையும் மூலையில்



படிப்பகம்

www.padippakam.com

சாத்தப்பட்ட கலப்பையும்,யாரையோ கண்டுவிட்ட தெளிச்சி. முகம் அசைவு கொள்ளும் வெளி பார்க்க யாருமில்லை பயத்தில்.

நரிக்குறவன் நடக்க மண் விலகி வணங்குகிறது. பதிலுக்காய் புரண்டு ஏதோ கூறுகிறான்.

ஏய்...ஏய்...சாமி... ஏய்... தூரத்து பனைமரத்தின் ஓலையில் எதையோகேட்டு தலையசைக்கிறான். சுற்றிலும் உள்ள வேத்து முகத்தில் வீரத்தின் கடைசி சொட்டுத் திமிர் அவன் கண்ணை உறுத்துகிறது. பார்த்தவன் அய்யனார் கோவிலின் நிறம் களைந்துஏதோ முனகும் சப்தம். அபாரத்தின் குடுமியை ஆட்டி கனைக்கும் குதிரை. கனைப்பு அடங்காத தாகத்தின் தவிப்புபோல.. முன் குதிரை, கால் தூக்கி வணக்கம் சொல்கிறது நரிக்குறவனுக்கு.

கனைப்பைக் கேட்டவன் கண்களில் உண்டான ஒளியில் ஏதேதோ தென்பட்டிருக்க வேண்டும். பூமியதிர தாயைக் கண்டவனாய் ஓடுகிறான்.

நிற்காத தாகத்தின் உச்சம். கொப்பளித்து பீறிடும் இரத்தத்தின் வலி போலும்.

'என் அப்பனே... யென அய்யனாரின் காலில் தொட்டமுகிறான். படிந்த எண்ணெய் திட்டுக்கள் சடார்... சடார்... என்று கல் தெரிப்பதாய் உதிரும். ஏற்றிய தீபங்கள் அணைந்து கொள்கிறது. அவன் மீது வீசிய நுரைத்த கள்ளின் நெடி அய்யனார்மீதும் 'கப்'பென அடிக்கிறது. பாதவிரலில் காட்டின் பேச்சு தனிமையாய் வீற்றிருக்கிறது. நரியைத் துரத்திய காடு உள்பட இரத்தம் சொட்டிய அமாவாசை இரவும் தங்கியிருக்கும் அய்யனாரின் பெருவிரல். கருமையின் திரேகத்தில் மெல்ல பொருமும் அழுகையின் மொழியில் அவனுக்கும் அய்யனாருக்குமான ஒத்த சாயல் ராகத்தினை தொட்டுப் போகிறது.

'என் அப்பனே உனைக் கண்டு எத்தனை யுகங்களாகிறது.. உன் வண்ணமழித்த பாவிகள் உன்னை வணங்குகிறார்களா... ஏய்... சாமி... ஏ..ய்.. சா...மி. ஏய்..'

அவன் மொழியின் மொழிபெயர்ப்பை இப்படித்தான் பொருள் தொனிக்க முடிகிறது. தொடர்ந்து அழுதே பேசிக் கொண்டிருந்தான். காற்றின் ஆட்டத்தில் வெற்றியின் மிதப்பு. குருவிகள் ஊட்டும் இரையில் வயிறாறும் குஞ்சிகள். மந்தையிலாத வெளியில் மாடுகள் சத்தியடங்கும். பருந்திடம் எட்டிப்பறந்து பறித்த குஞ்சியின் முகம் தடவும் தாய்க் கோழி. தப்பிய முயலின் முன்னங்கால்கள் முத்தத்தால் நனைகிறது. நரிக்குறவன் எதையோ அழுவதாக தேடுகிறான். அவன் வடித்த கண்ணிரின் ஆழம் ஓடையின் ரகஸியத்தையும். அதில் போய்ச் சேர்ந்த தன் குடிகளின் முகங்களையும். அறுத்த சதையில் எழுதிச் செத்த சனங்களின் வரலாற்றையும் பார்க்க முடியும் போலும்...

நரிக் குறவர்களின் பூமியில் நிலம் கூட நிறம் மாறி மிரட்டும் விந்தை.

ஆறடி உயரச்சிலையில் சுற்றிச்சுற்றி தடம் தேடும் ஆதிப்பயணி. பேசாப் பொருள்களில் தொல்மொழிகள் பளிச்சென தெரியும் மாயம். நரிக்குறவன் சாயலில் காட்சிகளில் யாவும் வலி. துடித்த சாவில் கழுகும். நரியும் கீறி இழுக்கும் சப்தம். கிளையில் எரிந்த தீ பிடிக்கும் லாவகமாய் பச்ச இலைகள் சாம்பலாகிறது. வாழ்வின் சரடு பிரியாத உயிர்கள் மண்ணில் சேகரமாகிறது.

வனவேட்டையாடித் திரிந்த சாத்தையா நாழிகை கணக்கில் வயிற்றுவலி தாளாமல் அலைவுற்ற முனகல் எங்கே கேட்கும் நரிக்குறவனுக்கு.

'என் மூதாதையே.. ஆறாதவலியில் இன்னும் துடிக்கிறாயா... உன் வலி தீர்க்காமலேயே நான் சதியால் சாவடிக்கப்பட்டேன்..! திசைகள் உணரும் உன் வலியை மூதாதையே...'

வெறித்துக் கொண்டிருக்கிறான் நரிக்குறவன். ஏய்... சாமி..... ஏ..ய்... சாமி... ஏய்..... சாமி......

அவன் எதையோ உற்றுப்பார்க்கிறான். கால், கைகள் அசைவுறும் சடக்..சடக்.. கென்ற சப்தம். திமிரும் முனகல். 'என் தாத்தனே' பதிலில்லை.. தலைதெறிக்க ஓடிவந்தவன் வன தாவரத்தை



படிப்பகம்

www.padippakam.com

முறித்து விழுகிறான் சாத்தையா. எங்கும் பூரண அமைதி. பேச்சரவமற்ற காட்டில் பழங்கள் விழுந்தடங்கும். கையில் விஷ அம்புகள் தவறிப் பாய்கிறது விருட்சத்தில். பச்ச விருட்சம் பொத்தலிட்டு வடித்த இரத்தம் சோகத்தின் தலையை வனமெங்கும் பரப்புகிறது. பறந்து போனவைகள் அழுகுரலின் சப்தத்தில் பட்சிகள் மிரண்டுகொண்டிருக்கின்றன. சாத்தையாவிற்கு மேமுழி சுழல்கிறது. வனம் சுற்றிப் பண்ணும் மாயத்தில் கருமை படர்ந்து வலையாய் தோன்றுகிறது. மூலிகையின் சாறுகள் கொடுக்க ஆளில்லாத வனத்தில் வெண்பரப்பில் நீர் அலம்பும் சப்தம். ஏதாவது மிருகத்தின் சாயல் கொண்டால் பயக் காதுகள் விடைத்து இலையுரசலுக்கு கூட திமிறும் வலி. எங்கும் சளப்...சளப்... பென்ற ஓசை. அம்புபோன நாளையெடுத்து நேராக வளைத்து நடக்க தெம்பில்லாத சாத்தையா. உயிர் கரைக்க துடியாடும் வயிற்று வலியில் கண் முழி பிதுங்கி, நுரை பொங்கும் வாயில் வார்த்தைகள் மறைந்து போகிறது.

'அய்யோ...அய்யோ...ஏலா........சாமி....'

வனம் நீங்கிய வெற்றுத்தரையின் நீர் ஓசையைக் கேட்டு உருள்கிறார் சாத்தையா. தாவரங்கள் சட...சட...வென முறித்து வழிவிடும் லாவகம். கனிகள் உதிர்ந்து உதட்டை ஈரமாக்கும். நாவு நீட்டிக் குடித்த கனிகள் சட்டென வலியில் எடுத்தெரிய வட்டப்பாறையை நோக்கிப் பறந்து போகிறது சாத்தையா உயிர் கேட்டு. உருண்டு உருண்டு வந்த சாத்தையா முனகும் ஒலியில் பூர்வக்குடிகளின் நிஜவாழ்வு. அக்கறையின் சாயல் ஓட பதறும் குலைகள். துடிக்கும் நெஞ்சு வீரமல்லுக்காய் இருக்க கூடும். உருள உருள சாத்தையாவிற்கு முலைப்பால் பீய்ச்சி தெளிச்சியடையச் செய்யும் வீரம்மல். கண் ஒட்டிய கண்ணத்தில் பாலின் வெண்மையோடுகிறது. கசக்காத பாலில் கனிகளின் வாசனை.

'இந்த விடத்தில் உன் தீராத வலி திர்ந்து விடும் சாத்தையா'

'பாரது' நீ கவலையை விடு..... உன் சனத்தை இங்கே குடியேற்றி வை.. நான் பாதுகாக்கிறேன்....'

ஏ...ய...சாமி... ஏய... சாமி

சாத்தையனால் முடியுமா.... அது....?

'உன் சனத்தை வாழ வைக்கவும் முடியும்'

வலி போகியது தேசாந்திர தொலைவுக்கு. சிறுபுள்ளியின் தொடக்கம் கூட கிடையாது. யாருமற்ற வனத்தில் கேட்ட குரல் அய்யனாராகத்தான் இருக்கக் கூடும். வனத்தின் நிழலில் கல் உருப்பெற்று குதிரையோடு நின்றார் தயாராய் சாத்தனார்.

நரிக்குறவன் தேடிய கொண்டையின் தண்டை சங்கிலியாக மாற்றப்பட்டிருந்தது. உதிர்த்த காரை சட்டென காட்டும் தண்டையை. நரிக்குறவன் ஆசுவாசப்படுகிறான். முகத்திலடித்து முனங்குகிறான்.

ஏன் தாத்தனே... தாத்தனே... என்... சாமியே.... என் சாமியே... 'என் சாதிசனம் ஏதுமில்லையா...? பேசிய உன் வாயை கட்டியதும் யார்... என் சாமியே....'

விசித்திர தேம்பல் கேட்டு கதவு திறக்கும் ஊர் சனம். பெண்கள் பதறும் விழியில் நீர் தாரை. குலையை நடுக்கச் செய்யும் அழுகை. சுற்றுவட்டாரம் முழுமையும் சேர்ந்தழுது எடுத்துப் போகும் காற்று. மிக சாவதானமாய் தள்ளாடி தெருவில் புலம்பிப் போகிறது. திறக்காத கதவை ஈரம் தொட்டுக் கரைக்கும். வாசல் பெயர்த்து நடையிடும் ஓசை. மண் திரளாய் மாறும் லாவகம். ஈரமண் சொதப்பில் ஊறாத எறும்புகளும், பூச்சிகளும் வனமழிந்த ஆதிக் கதையில் சேர்ந்தழுகும். ஈரத்தின் வாசனை பால்ய தானியத்தையும் முகத்தையும் சேகரித்த எறும்புகளுக்கு கொண்டு வந்திருக்க வேண்டும்.

வீசைகள் கொடுக்கறுவாளாய் தொங்குகிறது. ஊர்குடி ஓடிவரும் அழுகையொலி கேட்டு. மாரடித்துப் புலம்பும் நரிக்குறவன் எதையோ அய்யனாரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

ஏய்... சாமியே.. என் சாமியே.. என் பூமி.. என் பூமி.



படிப்பகம்

www.padippakam.com

பதிலில்லை. உச்சி குடுமியில் ஆணியடித்து பச்ச முட்டியில் யாரோ எடுத்துப்போன அமைதி. தியானத்தை உடைக்கும் நரிக்குறவனின் குரல். 'ஏய்.. சாமி.. ஏய்... சாமி... என்.. பூமி.. என்.. பூமி.. மிச்ச துண்டில் தெருப்புழுதியாவது உண்டா...?'

நடுங்கும் ஊர்சனம் அழுகையில் தேங்கித் தேங்கி நடையாய் மாற்றுகிறது. தாமரைக் குளத்தின் விநோதம் மரண பயத்தை உண்டு பண்ணியது. வேர்கள் பிளந்து தலைகீழாய் பசுமையோடு மண் பார்த்து பூக்கும் தாமரை நிற வாசனை வெளியேராது விரிவோடிய துளைகளை வெளியாகும் மூச்சிற்காய் அனுப்பும் மாயம். பட்சிகள் வட்டமிட்டு கண்களில் தோன்றும் ஓடைப் பெருக்கின் சாயல். மிதந்து வரும் குறவர்களின் சனம். பதறும் பட்சிகள். வில்வாரின் விசைகளில் உயிர் இல்லாத அசைவு. கெவுளிமதம் பாடும் வித்தையில் களையிழந்த முகம். கோடுகளில் பூசப்பட்ட கருமை. ஊர்ச்சனம் வியர்த்துக் கொட்டும் பயத்தில் நனைந்து கோவிலை நோக்கி தங்கள் சாமிகளானவைகளை கூப்பிட்டு கூப்பிட்டு குலவையிட்டு நகர்கிறார்கள்.

வாசலை அடைந்ததும் திகைப்பின் உருவம். கேச வனம் அழுது புரளும் அதிசியம். புரியாத மொழி. ஓங்கு தாங்கானத்தின் மிச்சமான தாட்டிய உடம்பு. முகம் மறைத்த முடியும், உறுப்புகள் மறைந்த இலைகளும் ஆபரணங்களில் எவை எவையோ தொங்கும். பார்த்தவுடன் பயமும் திகைப்பும் மிரட்டி திரும்ப வைத்த கருப்புவே நரிக்குறவனை 'கல்'யென நினைது மாயழகு

கல்லு மனிதா நீ யார்...?

தேம்பல் நிற்காத அழுகை.

ஏய்.... உன்னைத்தான் கல்லு மனிதா யார் நீ?

நரிக்குறவன் விழி பார்த்த கணம். சிவப்பு சூரியன்கள் உரசும் தீப்பிழம்பு. வாங்கிய அடிகளின், வெட்டப்பட்ட சதைகளின் இரத்தக் கண்கள் அது. பதிலில்லாமல் பார்க்கிறான். ஊர்ச்சனத்தை சுடுகிறது தீ. 'சூ......... ஆ......... சூ...... ஆ...... யென முனங்கும் ஓசை. மாயழகோடு முத்துச்சாமியும். வேலுவும்

ஏலே.... யார் நீ ?

'இந்தப் பூமிக்குச் சொந்தக்காரன்' வார்த்தையிலும் அனல் அடித்தது..

'ஏய்.. சாமி.. இந்த பூமி எங்களுக்குச் சொந்தமானது. எங்கள் அய்யனார் சாமி... இது...'

'அடே. குறப்பயலே' எல்லோருக்கும் பயம் குளிர்விட்டுப் போகியது'. 'இவேன் எப்படி இங்க வந்தான்.' கூட்டத்திலிருந்து யாரே கத்தினர்.

'ஏங்கடா... குறப்பய கோயிலுக்குள்ளே இருக்கான். பாத்துட்டு சும்மா நிக்கிறீக' 'ஏய்..... ஓடுறா... வெளியே... இல்லே செத்துப் போவே.. ஓடிப் போயிரு'

'ஏய்.. சாமி.. எங்க சாமி... எங்க பூமி... பூராம் வந்தோட்டிகள் சேர்ந்து என்னைப் போகச் சொல்லுது... இது நல்லா இல்லே சாமி... எங்க குடிகள் இங்கதான் இருந்துச்சு... இங்க நிலத்தோட ஆதி கதைகளோட பிணைஞ்சு கிடக்கு சாமி... அடிச்சு பறிச்ச சாமிக பூமியே வச்சுக்கிட்டீங்க... இதான் சாமி நிஜம்... எங்க பூமி... எங்க சாமி... எங்க பூமி... ஆமா..' நரிக்குறவன் உறுதியால் எழுந்து நின்று சொன்னான்.

'அடாத் தாயோலி... குறப் பயலுக்குத் திமிறப் பாரு..' யென அடிக்க ஓங்கின கையை நரிக்குறவன் நிமிஷ நேரத்தில் ஒடித்துவிட்டான். அவரின் அலறல் எல்லோரையும் உறைய வைத்துவிட்டது... மொத்தமாய் சேர்ந்து நரிக்குறவனை உதைத்தனர்.

உலுப்பி விட்டு ஓடினான் ஊரின் புஞ்சைக் காட்டுப் பக்கம். என்.. பூமி... என் பூமி... என் பூமி... என் சாமி... யென தொடர்ந்து கேட்கும் அவனுடைய குரல். விரட்டிப் போகிறது ஊர்ச்சனம். காற்று அவனுக்குச் சாதகமாய் புழுதியை வாரி ஊர்ச்சனத்தின் மீது வீசுகிறது. கண்மூடி திறக்குமுன் ஓடிக் கொண்டிருக்கிறான் நரிக்குறவன்... எங்காவது அவன் பூமியும் அவன் சனமுமாக இருக்ககூடும். அவனது கருத்த உதடுகள் ஓயாமல் உச்சரிக்கிறது 'என் சாமி... என் பூமி... சாமியோவ்...'

●



படிப்பகம்

www.padippakam.com

# தலித்தல்லாதார்

## இடைவெளி முகிழ்க்கும் வினாக்கள்

- கௌதம சன்னா

தலித் - தலித் அல்லாதார் என்ற பதப்பிரயோகம் தற்போது அதிகரித்து வருகிறது. 'தலித்' அல்லாதார், "தலித் அல்லாதார்" என்ற வார்த்தையை கடுமையாக எதிர்த்தனர். இதன் ஆரம்ப கட்டத்தில் அறிவு ஜீவிகள் வட்டாரத்தில் கடும் குழப்பத்தினையும், அதிர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது. ஆனால் தலித் அல்லாதவர்களால் இதற்கு தீர்வு சொல்ல முடியவில்லை என்பதால், விவாதத்தின் மையத்திலிருந்து இதை ஓரம் கட்டிவிட்டனர்.

பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்ற பிரிவினையின் அதிகாரதாகம், அதிகாரபோகம் ஆகியவை எந்த விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை தலித்துகள் அறிவார்கள். ஆனால் இந்த பதம் மிகப் புதிது. அதே வேளை தலித் - தலித் அல்லாதார் என்ற பதம் மிகப் பழையது. இந்த வார்த்தைகள் புதிதாக தோன்றினாலும், அதன் பழைய வார்த்தை எல்லாவற்றையும் விளக்கிவிடும்.

சவர்ணர் - அவர்ணர்
சாதி இந்து - சாதியற்ற இந்து
ஊர் - சேரி
தலித் அல்லாதார் - தலித்.

இடைபட்ட காலத்தில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார், தலித்துகளின் அரசியல் - சமூக பங்களிப்பில் உண்டாக்கிய பின்னடைவிலிருந்து ஒரு விவாதம் தேவைபடுகிறது.

இடைவெளிகள் எப்போதும் கவனத்தை கவராதவைகளாக இருக்கலாம். இதிலிருந்து தினமாக ஒலிக்கிறது சமிக்ஞைகள். தலித்துகள் - தலித் அல்லாதார். சந்திக்கும் புள்ளி எது... இணைக்கும் புள்ளி எது... தலித்துகளுக்கு அனைத்து துறைகளிலும் பங்களிக்க வரும் தலித் அல்லாதார் இந்தப் புள்ளியை அறிவாரா?

நீண்ட காலத்திற்கு முன் நிகழ்ந்த வரலாறு அது. உலகம் முழுவதையும் அன்பின் குடைகீழ் கொண்டுவர பவுத்தம் ஒரு இயக்கமாக செயல்பட்டது. அதில் ஒரு அம்சமாக சனாதன எதிர்ப்பினையும் கொண்டிருந்தது.இதன் பொருள் பார்ப்பனீய எதிர்ப்பாக இருந்தது. பவுத்தத்தின் வாழ்க்கை முறையும், பண்பாட்டு உருவாக்கமும் சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு ஒரு புரட்சியாக அது அமைந்தது. நீடித்திருக்கும் இப்புரட்சிக்கு பங்களிப்பு செய்ய பலபேர் புறப்பட்டு வந்தார்கள். இப்படி புறப்பட்ட பலர் பார்ப்பனர்கள். இயக்க ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் அளிக்கப்பட்ட அவர்களின் பங்களிப்புகள் எவ்விதமான விளைவுகளை உண்டாக்கின.?

இயக்கரீதியாக.. பார்ப்பனர்கள் நிறைவேற்றியவைகளை கூரிய வாள் முடிவிற்கு கொண்டு வந்தது.... தூய்மை, தியாகம், அன்பு-மைத்ரி-யை மையமாகக் கொண்டு எளிமையாக இயங்கிய பவுத்த மடலாயங்கள். பார்ப்பனர் தலைமைக்குப்பின் அதிகாரம் சார்ந்தும் பலவேளை அதிகார மையமாகவும் இருந்ததோடு, பழைய பார்ப்பனீய ரிஷிகள் நடத்திய சுகபோக வாழ்வின் மடாலயத் தொடர்ச்சியை பவுத்தத்தின் மூலம் நிறைவேற்றினார்கள். அன்பின் பிடியிலிருந்த மக்கள் அதிகாரத்தின் பிடிக்குள் வீழ்ந்தார்கள். பவுத்தத்தின் உண்மையான வாழ்வியலை கொண்டிருந்த மக்கள் தீண்டாதாராய் பட்டம் பெற்று முடங்கிபோக - பவுத்த இயக்கம் ஊழலில் சிக்கி, தேங்கி குழம்பியது. சமூகமும் தேங்கிப்போக, இசுலாமியரின் வலியவாள் பவுத்தர்களை சீவியும் - துரத்தியும் முடித்தது. வாளின் பயத்தில், தலையை காப்பாற்றிக்கொள்ள சொந்த நிறத்திற்கு மாறினர் பார்ப்பனர். இது இயக்க நிலையில் பார்ப்பனர் பங்கு. புத்தரின் தத்துவத்தில் 'அநித்ய வாதம்' முக்கியமானது. எதுவும் நிலையின்றி நொடிக்கு




படிப்பகம்

www.padippakam.com

நொடி மாறுகிறது என்பதுதான் அநித்யம். இது விஞ்ஞானரீதியானது. மனிதரின் ஆன்மீகத் தேவைக்கு புத்தர் அளித்த கொடையிது. மனித வாழ்வே நிலையற்றதாய் மாறிக்கொண்டிருக்கும் போது. ஒருத்தரை ஒருத்தர்வெறுத்துக் கொள்ளும் தேவை எழாத உள்ளாற்றலை இத்தத்துவம் அளித்தது. 'பரம்'பின் நிலைத்த தன்மையைபேசிய பார்ப்பனர்க்கு இது பெரிய சவாலாக இருந்தது.

தத்துவத்தின் பங்களிப்பில் வந்த பார்ப்பனரில் முக்கியமானவர் நாகர்ஜுனர். அநித்ய வாதத்தை வளர்த்தவர்களில் முக்கியமானவர் இவர். அநித்யத்தின்



தொடர்ச்சியில் அவர் சூன்யவாதத்தை முன்வைத்தார். நிலையின்றி தொடரும் நிகழ்வில் எதையும் அறுதியிட முடியாதபோது அது சூன்யமாக இருக்கிறது. எனவே மனித வாழ்வே சூன்யமாய் இருக்கிறது என்று மனித வாழ்க்கை குறித்த நம்பகமின்மையை உண்டாக்கினார். அநித்யத்தை புத்தர் உரைத்த வழியிலிருந்து ஒரு இயங்கா பொருள்நிலைக்கு போக இது வழிவகுத்தது.

இதன் தொடர்ச்சியாய் காலடி சங்கரர் (சங்கம் + அரர் = சங்கரர்) வந்தார். வாழ்வே சூன்யமென்றால் அங்கு வாழ்வே இல்லை என்று பொருள். ஆகவே அனைத்தும் மாயம்; மனதின் கற்பனைகள். நிலையானது 'சத்' மட்டுமே. நிலையற்ற அனைத்தும் 'அசத்' என்று மனித நம்பிக்கைகளையே முடக்கிவிட்டார். இந்த மாயா வாதம் தத்துவத்துறையில் அடுத்த அடி வைப்பதற்கான கதவை இறுக்க மூடிவிட்டது என்று இன்றும் கருத்து இருக்கிறது. புத்தரின் அநித்யத்தை – மாயாவாதமாக மாற்றிய சங்கரருக்கு மறைமுக பவுத்தர் (பிரசன்ன பவுத்தர்) என்ற பட்டமும் உண்டு. இந்த சங்கராச்சாரியின் தொடர்ச்சியை காஞ்சியிலும், பூரியிலும் காண்கிறோம். பவுத்த தத்துவத்தில் பார்ப்பனரின் பங்கு இப்படியாக முடிந்தது.

பவுத்தம் எதை – யாரை நிராகரித்ததோ, அவர்களது பங்களிப்பாலேயே தன் வீச்சை இங்கு இழந்தது. பங்களித்தவரின் வாளில் உரைந்த ரத்தம் காலம் தாண்டி வாடை வீசுகிறது.

1916ம் வருடம் சென்னையில் முக்கிய நிகழ்வொன்று – பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்கப்பட்டது. "தென்னிந்திய மக்கள் சங்கம்" என்ற வியாபாரிகள் நலச் சங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனரல்லாதார் நலன் காக்க "தென்னிந்திய நலஉரிமை சங்கம்" தொடங்கியது.

பார்ப்பனர்களின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கியதோடு, அவர்களிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்கி பார்ப்பனரல்லாதார் கைகளில் கொடுக்கும் நோக்கம் அதற்கிருந்தது. வியாபாரிகள் தொடங்கிய இந்த இயக்கம் "பார்ப்பன எதிர்ப்பை" கையிலெடுத்தது. அதை மையப்படுத்தி, அனைத்து மக்களையும் அரவணைக்க ஜஸ்டிஸ் கட்சியானது. தென்னிந்திய நலஉரிமை சங்கமாக (1916) இருந்தபோது இவ்வமைப்பு பார்ப்பனரல்லாதார் அறிக்கை வெளியிட்டது. அதில் பார்ப்பனர் அதிகாரத்தின் பரவலையும், தீமையையும் சாடுகிறது. சர் பிட்டி தியாகராசர் கையொப்பத்தின் கீழ் வந்த இந்த அறிக்கையில் தலித்துகளை குறித்து தனிப்பட்டு எதையும் காணமுடியாது. பார்ப்பனரல்லதார் என்பதில் அவர்கள் அடக்கப்பட்டனர். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி பிடித்தப்பிறகு, சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. அதன் அளவு எதுவரை என்பதை பலர் கூறிவிட்டனர். ஆனால் நாம் கவனிக்கவேண்டிய அம்சம், பார்ப்பனரிடமிருந்து அதிகாரம் மாறியும் பார்ப்பனீய கொடுங்கோண்மையான சாதியும், இந்துமத பரிபாலனமும் அப்படியே இருந்தது.

ஜஸ்டிஸ் கட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சுயமரியாதைஇயக்கம் களத்திற்கு வருகிறது. பின்பு திராவிட இயக்கம் என்று உருமாறினாலும் கூட, அதன் மையம் பார்ப்பனீய எதிர்ப்பாக இருந்தது. பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் ஆவேசமான இந்த இயக்கம் 1967ல் அவரது சீடர்கள் ஆட்சியில் அமர உதவியது. பார்ப்பனரல்லாதாருக்கு சுயமரியாதையை இந்த இயக்கம் தூண்டியது. அதாவது பார்ப்பனீயத்திற்குஎதிர்ப்பாக இருப்பது தான் சுயமரியாதை, தன்மானம் என்பதாகும். பெரியார் ஈ.வெ.ரா. மறைவிற்கு பிறகு, ஒரு பார்ப்பனர் அதன் அதிகாரத்தில் வருமளவுக்கு, அதை வரவேற்கும் அளவிற்கு இந்த இயக்கம் தரம் தாழ்ந்து போனது.

1916ல் பார்ப்பனரல்லாதார் இயக்கம், பார்ப்பனர்எதிர்ப்பைமையமாககொண்டபோது, தலித்துகள் நிலை என்ன?

இங்குதான் பார்ப்பன எதிர்ப்பிற்கும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்குமான அடிப்படை வேறுபாட்டைக் காண்கிறோம். இந்த வேறுபாட்டின் வேர்கள் மறைக்கப்பட்ட பக்கங்களில் விரவி காண்கிறது.

தமிழகத்தின் முதல் தமிழ் பத்திரிகை (அநேகமாக) "சூர்யோதயம்". புதுப்பேட்டை வேங்கிடசாமி பண்டிதர் அவர்களால் வெளியிடப்பட்டதாக (அநேகமாக இதன் வருடம் 1859 ஆக இருக்கலாம்) பதிவுகளிலிருந்து தெரிகிறது. இதுவே முதல் தலித் பத்திரிக்கையும் கூட. தொடர்ச்சியாக தொடங்கப்பட்ட தலித் பத்திரிக்கைகளெல்லாம் பார்ப்பன எதிர்ப்பு என்பதை கடுமையாக தொடர்ந்தபடி இருந்தன. இதன் உச்சகட்ட வீச்சை "ஒரு பைசா தமிழன்" (அயோத்திதாச பண்டிதர்) இதழில் காணலாம்.

தத்துவார்த்தரீதியாகவும், இயக்கரீதியாகவும் பார்ப்பன எதிர்ப்பு, சாதி, இந்துமதஎதிர்ப்பு என்பது பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்பே இருந்தது. அதன் தலைமை முழுதும் தலித்துகள் வசம் இருந்தது.

இதற்குக் காரணம் இல்லாமலில்லை, தலித்துகளின் வாழ்க்கைமுறை, பண்பாடு, வழிபாட்டு முறைகள் உட்பட அனைத்தும் பார்ப்பனீய எதிர்ப்பாக இருந்தது. (இன்னும் இந்நிலை உண்டு) இது குறித்து ஏராளமான பதிவுகள் உண்டு. 1900ல் எட்கர் தஸ்டர்ன் – 1914 வரை பண்டிதர், பின்பு டாக்டர் அம்பேத்கர் வரை பலர் விரிவாக பதிவு செய்துள்ளனர். உதாரணமாக, பண்டிதர் 1909ல் எழுதுகிறார்:

"மிலைச்சர்களாம் ஆரியர்களை கிராமங்களுக்குள் வரவிடாமல் துரத்தியும், அவர்கள் கால் வைத்தயிடங்களிலெல்லாம் சாணத்தைக் கரைத்து தெளித்து, அச்சட்டியை அவர்கள் ஓடிப் போன வழியில் உடைத்தும் வருவது வழக்கமாயிருந்தது" (இதில் கிராமம் என்பது தற்போதைய வார்த்தையில் சேரி என்ற பொருள்தான்).

இதுதவிர தீண்டாதார் என்போரை கணக்கிட மக்கள் கணக்கெடுப்பு ஆணையர் வகுத்த 13 விதிகளில் ஒன்று:



படிப்பகம்

www.padippakam.com

"தீண்டாதார் என்போர் பார்ப்பன குருவை ஏற்காதவர்கள்." இது 1911 முதல் 1931 வரை பயன்படுத்தப்பட்டது. இந்த விதிகளை டாக்டர் அம்பேத்கர் விரிவாக அலசியுள்ளார்.

தலித்துகளின் இந்த வாழ்க்கை முறையானது பார்ப்பனீயத்தை எதிர்ப்பதை நோக்கமாக கொண்ட வாழ்முறையல்ல. அது தனித்த, உலகளாவிய வாழ்முறை. அதனாலேயே வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் பார்ப்பனீயத்திற்கு எதிர்ப்பான வாழ்முறையாக அமைந்திருக்கிறது. இந்த வாழ்முறை பார்ப்பனரல்லாதாரிடம் இல்லை என்பது தெளிவு.

பார்ப்பனீயத்தை, சாதியை தலைமீது தாங்கி வந்தவர்கள்தான் அதன் அதிகார நெருக்கடியை எதிர்க்க பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்கினர். பின்பு சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் என்று அது வளர்ந்தாலும் பார்ப்பனீயத்திற்கு மாற்றான ஒரு வாழ்முறையை கட்டமைப்பதில் அது தோல்வி கண்டது. ஆனால் அரசியல் ரீதியில் வெற்றி கண்டது.

இந்த வெற்றி தலித்துகளின் வாழ்வில், சாதிய ஒடுக்குதலில் ஏதாவது மாற்றத்தை உண்டாக்கியதா? விடைகள் பூஜ்யமாகவும், வினாக்கள் வாள்கொண்டும் நிற்கிறது.

தலித்துகள் – தங்களின் சமூகக் கருத்தான பார்ப்பன எதிர்ப்புக்கு பங்களிக்க வந்த பார்ப்பனரல்லாதாரின் பங்குதான் என்ன? உண்மையில் பார்ப்பன எதிர்ப்பை கையில் எடுத்த பார்ப்பனரல்லாதார் தலித்துகளின் வாழ்க்கைமுறையை, பண்பாட்டை பின்பற்றி முன்னெடுத்திருக்க வேண்டும்; தலித்துகளின் போராட்டத்தின் உந்து சக்தியாக கலந்திருக்க வேண்டும்; போராட்டத்தில் தலித்துகளை முன்னிருத்தியிருக்க வேண்டும். இதை செய்ய அவர்களை எது தடுத்தது.

இது, வரலாற்று ரீதியாக முக்கியமான அம்சமாகும். இது பெரியார் உட்பட அனைவரும் கவனிக்காத அல்லது விரும்பாத ஒரு அம்சம். இதற்கு இரண்டு காரணம் :

1. பார்ப்பனரல்லாதார் அதிகாரம் நோக்கி நகர்ந்தது.

2. தலித்துகளை தீண்டத்தகாதவர்களாக பார்த்தது.

இதில் இரண்டாவதின் பொருள் என்னவென்றால், தலித்துகளின் வாழ்க்கைக்கும், பண்பாட்டிற்கும் உள்ள நெடுங்கால வரலாற்றை அதன் முற்போக்குத் தன்மையை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. சொல்லப் போனால் அவர்களுக்கு வரலாறே இல்லை என்பதாகத்தான் எண்ணினர். அதனால் அவர்களை "உயர்த்துவதற்கு" ஏதாவது செய்தால் போதும் என்ற எண்ணம் – இந்த எண்ணத்தின் உளவியல் மதிப்பீட்டை யாரும் செய்யலாம்.

பெரியார் கூட தவறவிட்ட இந்த இடத்திற்கு அவரை கடவுளாக்கிய அவரது சீடர்கள் இனி ஒளி பாய்ச்ச முடியாதபடி வாய்ப்புகள் சுருங்கி, மறைந்துவிட்டன.

தலித்துகளின் பார்ப்பன எதிர்ப்பிற்கு பங்களிக்கிறோம் என்று சொல்லாமல் வந்தவர்கள் பார்ப்பனரல்லாதார் என்ற இன்னொரு சுமை அவர்களது காலில் மாட்டி நகர்ந்துவிட்டனர். தீண்டாமை தொடர்கிறது.

"உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ள மாபெரும் சம்பவங்கள் அனைத்தும் இரண்டு தடவை தோன்றுகின்றன. மாபெரும் தலைவர்களும் இரண்டு முறை தோன்றுகிறார்கள்" என்று ஹெகல் எழுதியுள்ளார். அவர்களுடைய தோற்றம் முதல் சந்தர்ப்பத்தில் சோகக் கதையாகவும், இரண்டாவது சந்தர்ப்பத்தில் கேலிக் கூத்தாகவும் இருக்கிறது என்பதை அவர் எழுத மறந்துவிட்டார் என்று மார்க்ஸ் எழுதுகிறார்.

இங்கு கூறப்பட்ட இரண்டு வரலாற்று சம்பவங்களும் இதை ஞாபகப்படுத்தலாம். மார்க்ஸ் அளித்த தத்துவ வெளிச்சம், அதன் ஆளுமை இந்திய மண்ணோடு மல்லுக்கு நிற்கிறது. இரண்டு சம்பவங்களைத் தாண்டி, ஒரு மூன்றாவது சம்பவத்தை நிகழ்த்திக் காட்டும் வேலையை வரலாறு கொண்டு வந்திருக்கிறது.

(அடுத்த இதழில் முடியும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகம் ; மையமும் - விளிம்பும்

- நிகழ் அய்க்கண்

ஜனநாயகத்தை காப்பாற்ற இடைத் தேர்தலில் பங்கேற்பு; தொண்டர்கள் வீதியில் உருண்டு வெங்கட்ராமா! கோவிந்தா! என்று கூவி ஓட்டு சேகரிப்பு; தொண்டர்களின் காலில் விழுந்து ஓட்டு கேட்டார்; நான் உங்கள் வீட்டு பிள்ளை; குடும்பத்துடன் பிரச்சாரம்; இரு சகோதரிகள் பிரச்சாரம்; எம்மதமும் சம்மதம், எந்த ஜாதியும் என் சொந்த ஜாதியே, ஓட்டு மொத்தத்தில் நாம் எல்லோரும் மனித ஜாதி; அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற சர்வ சமய வழிபாடு; போலிஸ் பலத்த பாதுகாப்பு; மண் சோறு சாப்பிட்டனர்.... இப்படியாக பல புதுமைகளுடன் கோலாகலமாக ஜனநாயக முறையில் ஆண்டிப்பட்டி சட்டமன்ற இடைத் தேர்தல் அரங்கேறியிருக்கிறது.

ஜனநாயகம் தேர்தலின் மூலமாக காப்பாற்றப்படும் பொழுது, தலித்துகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம், கொட்டகச் சேந்தல் ஆகிய ஊராட்சிகளுக்கு இதுவரை உள்ளாட்சி தேர்தல் நடத்த முடியாத நிலையில் அரசு, ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் பங்கேற்ற திராவிட இயக்க கட்சிகளும், தகவல் தொடர்பு சாதனங்களும் பேசுவதையும், எழுதுவதையும் தவிர்ப்பது ஏனோ?

மன்னர் காலம் முதல் இன்றுவரை அதிகார மையங்களைச் சுற்றியே செய்தியைப் பின்னும் தொடர்பு சாதனங்களுக்கு விளிம்பு நிலை மாந்தரின் கதைகளை புனைய நேரம் ஏது?

'கருவாடு வித்த காசு நாறாது' என்பார்கள். அதுபோல, சாதி இந்துக்களுக்கு, தலித்துகள் ஓட்டு போடுவதின் மூலம் நாறுவதில்லை. ஆனால் ஜனநாயக முறையில் தலித்துகளை தேர்ந்தெடுக்க மறுப்பதில் மட்டும் நாற்றமெடுக்கும் மந்தை/சாவடி சிந்தனை–யை கொண்டுள்ளனர்.

தலித்துகளை தேர்தலுக்கு முன்னே மிரட்டுவதும் தேர்தலுக்குப் பின்னே கொலை – குத்து – வெட்டு, வீடுகள் கொளுத்தல் ஆகியவை நடந்துகொண்டே இருக்கின்றன. மேலவளவு முருகேசன், மொடக்காத்தான் பாண்டியன், தர்மபுரி, கடலூர் மாவட்டங்களில் எரிக்கப்பட்டதும், கொடைக்கானல் குண்டுபட்டிகளும், சங்கரலிங்கபுரங்களும், தாமிரபரணி நதியில் மரணங்களும்... நீளும்.

மக்கள் சிவில் உரிமைக்கழக தமிழ்நாடு – புதுவை பிரிவு பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் ஆகிய ஊர்களில் செய்த ஆய்வில் சில மட்டும்.

"மேல்ஜாதி இந்துக்களுக்கு தெரிந்ததெல்லாம் ஊர் பொதுவில் உள்ள தங்கள் சாதி, சமூக கூட்டம், அதில் எடுக்கப்படும் முடிவுகள். அது சார்ந்து விதிக்கப்படும் கட்டுப்பாடுகள்." -

இப்படிப்பட்ட சாதிச்சபைகளே கிராம மக்களின் ஆட்சி மன்றமாய், சட்ட பூர்வமற்ற அதிகார மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் முடிவெடுக்கும் அதிகாரங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதும் பங்கு கிடையாது. அவர்கள் இதற்கு கட்டுப்பட மட்டுமே கடமைப்பட்டவர்கள்.

காவல், சட்டம், நீதிமன்றம், பாதுகாப்பு பற்றியெல்லாம் சொன்னால் அதெல்லாம் எத்தனை நாளைக்கு என்று கேட்கிறார்கள். (புதிய கோடங்கி நவம். 2001)

மந்தை/சாவடி இங்கே ஜனநாயக பலி பீடமாக, தலித்துகளை பலி வாங்கும் இடமாக, பீதியை உணர்ந்து கொண்டே இருக்கவும் வழி செய்வதை அறியலாம்.

'போர் எழல்' எனும் பிரிவில் பகைவன் தப்பிடாதவாறு தாக்குக, பகை நாட்டுக்குள் உணவு, தண்ணீர், நெல், புல், விறகு செல்லாதவாறு தடுத்திடுக என்கிறது மநு. இலங்கையில் சிங்கள இனத்துக்கும் – தமிழர் இனத்துக்கும் இடையே நடப்பதை 'போர்' - ஆக வடிவமைக்கிறார்கள். இங்கு மேல் ஜாதி – தலித் மோதல் நடந்தபிறகு வேலை வாய்ப்புகள் தர மறுத்தல், உணவு பொருட்கள், தண்ணீர் போன்றவற்றை தரமறுப்பு, வீடுகள் தீக்கிரை, பொருட்கள் சூரையாடுதல், இன்ன பிற.



படிப்பகம்

www.padippakam.com

மந்தை/சாவடி சிந்தனை ஒரு மேல் ஜாதிக் குழுவாக இருக்கிறது. தலித்துகளாகிய பிறரை அங்கிகரிப்பதில்லை. பகைமையாகவே கருதுகின்ற போக்கை காணமுடிகிறது.

மநு காலங்களில் கூட பகைமை போர்மூலம் தீர்க்கப்படுகிறது. இங்கே மேல் ஜாதியினர் சேரிகளை நோக்கி படையெடுப்பு. அரசன் வென்ற பகுதி தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டது போன்றே தலித்துகளும் மேல்ஜாதி இதை ஆதிக்கத்திற்குட் பட்டவர்களாக ஆக்கப்பட்டிருப்பது கண் கூடு.

சமாதான வழி முதலாவது, தண்டனை வழி இரண்டாவது. மேலும் தண்டனைக்கு பயந்துதான் உலகம் நடந்து வருகிறது. தண்டனை இன்றேல் யாரும் நல் வழியில் நடவார்; தண்டனையே ஆண்மையுடைய நீதி என்கிறார் மநு!

தண்டனையே சாதியாகிருக்கிறது?

கீழ்க்கண்ட பதிவுகள், கட்டமைத்ததை திணிக்க, கட்டளைக்கு அடி பணியச் செய்த மேல் ஜாதியினரின் முயற்சிகளை, மந்தை/சாவடி பஞ்சாயத்துகளின் ஒடுக்குமுறைகளை அறியலாம்.

மதுரை பகுதியில் திரு. வைத்திய நாத அய்யரின் கீழ் இயங்கி வந்த அகில இந்திய ஹரிஜன சேவக் சங்கத்தின் மேலூர் பகுதி மண்டல அதிகாரி திரு. ஸ்வாமி ஆனந்த தீர்த்தர் அவர்கள் பதிவு செய்து அனுப்பியதை பாபாசாகேப் அம்பேத்கர் பிற்சேர்க்கையாக தனது தொகுப்பு நூல் – 9இல் சேர்த்துள்ளார்.

சமூக இயலாமைகள் ஒழிப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 5 ஆண்டுகள் ஆன பிறகும், இயலாமைகளை ஒழிக்க வேண்டிய கிராம முன்சிப், பஞ்சாயத்து தலைவர், காவல்துறையினர் மேல்ஜாதி இந்து –நோக்கிலே இருந்திருக்கின்றனர். நீதித் துறை கூட பாரபட்சமாகவே செயல்பட்டிருக்கிறது.

நத்தம் அருகே பரளி, மேலவளவு, ஆட்டுகுளம், திருவாரூர், கொட்டகுடி, மணகுளம், கிடாரிபட்டி கிழவளவு, தும்பைபட்டி, எட்டி மங்கலம், தெற்குத் தெரு ஆகிய இடங்களில் நடந்த கொடுமைகள் சில.

உ கடைக்குள் நுழைய அனுமதி மறுப்பு; பொதுக் கிணறு ஊருணியில் தண்ணீர் எடுக்க மறுப்பு; மாடு குளிப்பாட்டும், மனிதர்கள் குளிக்கும் குளத்தில் சமைப்பதற்கு நீர் எடுப்பு; பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுத்ததற்காக அந்த கிணற்றில் மலத்தை வீசுதல்; ஊருணியில் தண்ணீர் எடுக்கப் போய் கர்ப்பிணி பெண் தாக்கப்படல்; முடிவெட்டும் தொழிலாளி தலித்துகளுக்கு முடிவெட்டிவிட மறுப்பு; சாவடி/ மந்தைகளில் நுழைந்ததற்காக அடி உதை; சாவடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் உட்கார்ந்து இருந்ததற்காக தலித்துகள் புறம்போக்கு நிலத்தில் போட்டிருந்த நாற்றங்கால்கள் அழிப்பு; பொது நடைபாதை வழியாக பிணத்தை எடுத்துச் செல்ல மறுப்பு; நாவினிப்பட்டியில் பொங்கல் பண்டிகையின் போது இரண்டு தலித் இளைஞர்கள் புத்தாடை அணிந்தார்கள் என்பதற்காக கிராம முன்சிப் ஆட்சேபித்திருக்கிறார்; சட்டை/மேல் துண்டை கழற்றச் செய்து கீழே விழுந்து கும்பிடச் செய்து கோவணத்துடன் போகச் செய்திருக்கின்றனர்.

தும்பைபட்டியில் திரு கக்கன் நாடாளுமன்ற உறுப்பினர் ஊரில் 1953 ஆகஸ்ட் 1–ல் நடந்தது. கிராமத்தில் நடந்த சிறு சிறு திருட்டு குற்றத்துக்காக வயது வந்த தலித்துகள் மந்தைக்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். வழக்கம்போல் தரையில் வயிறு படும்படியாக கீழே விழுந்து கும்பிட்டு வணக்கம் செலுத்தினர். விசாரணையில், தைரியமான, கீழ்படிந்து போகாத இளைஞர்களை தேர்ந்தெடுத்து தண்டனையை நிறைவேற்ற கைகள் விலங்கிடப்பட்டுகொடுமையாக தாக்கப்பட்டனர். தப்பியோட முயன்ற இளைஞரை கல்லும் – கரடுமான தரையில் இழுத்து வந்து மரத்தில் கட்டி 8 மணிநேரம் நிற்க வைத்தனர். தலித்இளைஞர்கள் மீது காவல் நிலையத்தில் பொய் வழக்குகள் போடுவது வழக்கம். கடுமையான காயத்தை பார்த்து, போலிஸில் சிக்குவோம் என அறிந்து திரு. P. கக்கன் M.P. அவர்களின் தந்தை பூசாரி கக்கனிடம் சென்று அவர்மூலம் தலித் கோயிலில் சில பொருட்கள் திருடு போய் விட்டதாக கூறி காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்தனர். பின்னர் கிராம முன்சிப் மூலம் திருடுபோன கோயில் பொருட்கள் அந்த தலித் இளைஞர்களிடமிருந்து மீட்டதாக அறிக்கை அனுப்பினார்.



படிப்பகம்

www.padippakam.com

திரு. வைத்தியநாத அய்யர் கூறியதாக 1946 – ஜூன் 7 ஃரிப்ரஸ் பத்திரிக்கை ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறது. மதுரை நகரில் ஒரு தலித்தின் மூத்த குழந்தை இறந்துவிட்டது. அவர் அந்தகுழந்தையின் உடலை மதுரை நகராட்சியின் சுடுகாட்டில் தலித்துகளுக்கென ஒதுக்கப்பட்ட கொட்டகையில் எரிப்பதற்கு பதில் சாதி இந்துகளுக்கென ஒதுக்கப்பட்ட கொட்டகையில் எரித்துவிட்டார் என்பதற்காக, சாதி இந்துக்கள் ஆட்சேபிக்காத நிலையில், காவல் துறையினரே அந்த தலித்மீது புகார் பதிவு செய்திருக்கின்றனர்.

மந்தை/சாவடி சிந்தனைக்கு ஆதரவாக நீதிமன்றம்–காவல்துறை–கிராம நிர்வாகச் செயலை தேசிய கட்சிகள் பதவியில் இருந்தபோது நடந்தவைகளை அறிய முடிகிறது.

ஸ்வாமி ஆனந்த தீர்த்தரின் பொதுவான கருத்தாக:-

*“தலித்துகள் தங்களுடைய அடிப்படை உரிமைகளை பயன்படுத்தத் துணியும் போதெல்லாம், சாதி இந்துக்கள் அவர்களை சாவடிக்கு வரவழைத்து துன்பத்துக்கும் தொல்லைக்கும் உள்ளாக்குகிறார்கள்”*

மேலும் அவர் கூறுகையில், தலித் மக்கள் தங்களுடைய சமூக தாழ்வு நிலையை நினைவில் வைத்துக் கொள்ளவே சுதந்திரம் கிடைக்கிறது என்கிறார்.

தேசிய இயக்க அரசோ திராவிட இயக்க அரசோ சாணிப்பால், சவுக்கடி, வெண்மணி, இரட்டை டம்ளர் முறைகளும், கல்விபயில போய் கண் குருடாக்கப்படுவதும், இன்னமும் பல இடங்களில் கோயில்களில் நுழைய முடியாத நிலையும், தனி மனிதனாக, குழுவாக, இனமாக, அரசியல் கட்சியாக, அரசு நிறுவனங்களாக இருந்து கொண்டு தடையேற்படுத்தி வருவதை காணலாம்.

மநு கூறியது போல,

புறச்சேரியிலே இருக்க, உடைந்த மண் பாண்டங்களை உபயோகிக்க, நாய்களையும் – கழுதைகளையும் வளர்க்க, இரும்பு நகைகளையே அணிய, பிணத்தின் மீதுபோடப்பட்ட ஆடைகளை அணிய, இரவில் மட்டும் நடமாட பகலில் அரச முத்திரையுடன் நடமாட – இதுவே தலித்துக்கள் பற்றிய மேல்ஜாதி இந்துக்களின் எண்ணமாய் இருக்கிறது போலும்?!

இந்த அரசு ஜனநாயகமானது தானா? எனில் மறுக்கிறார் டாக்டர் அம்பேத்கர்.

"ஒரு சமூகம் தனது வடிவிலும், அமைப்பிலும் ஜனநாயக முறையில் இல்லையென்றால், அச்சமூகத்துக்காக செயல்படும் அரசு ஜனநாயக அரசாக இருக்க முடியாது. ஜனநாயகம் என்பது தேர்தல்கள் தவிர வேறொன்றும் இல்லை என்று நினைப்பவர்கள் மூன்று தவறுகள் செய்கிறார்கள்.

(1) அரசு என்பது சமூகத்திலிருந்து முற்றிலும் வேறானது, தனிப்பட்டது என்று நம்புவது (2) ஓர் அரசு சமூகத்தின் இறுதி நோக்கங்களையும் பிரதிபலிக்க வேண்டும் என்பதையும், அரசு வேரூன்றியிருக்கும் சமூகம் ஜனநாயக சமூகமாக இருந்தாலன்றி இது நடவாது என்பதையும் உணரத் தவறுவது. (3) ஜனநாயகமா? ஜனநாயகமற்றதா? என்பது சட்டத்தை செயல்படுத்துவதற்கு எல்லா அரசும் சார்ந்திருக்கின்ற சாதனங்களை குறிப்பாக சிவில் சர்விஸஸ் அமைப்பை பொருத்தது என்பதை மறந்து விடுவது."

மேலும் "நல்ல அரசு எனில் நல்ல சட்டம், நிர்வாகம் இருக்கவேண்டும். ஆளும் அதிகாரம் கொடுக்கப்படுவோர் தலித் மக்களின் நலனைக் கருதாமல், தங்களுடைய சொந்த வர்க்கத்தின் நன்மையை மட்டும் கருதுவார்களேயானால் இந்த பொருளில் நல்ல அரசு இருக்கமுடியாது" என்கிறார். (தொகுப்பு நூல் : 8)

ஒவ்வொருவரும் மற்றவர்களில் ஒவ்வொருவரையும் தனக்குச் சமமாக நடத்தி, தான் உரிமை கொண்டாடும் அதே சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் கொடுக்கத் தயாராய் இருந்தால் தான், மக்களுக்காக நடைபெறும் அரசாக இருக்கமுடியும். இந்த ஜனநாயக மனப்பான்மை, தனிநபர் ஜனநாயக சமூகத்தில் கலந்து பழகுவதன் விளைவாக உருவாவது. எனவே ஜனநாயக அரசு வேண்டுமென்றால் முதலில் ஜனநாயக சமூகம் இருக்கவேண்டும் என்கிறார். மேலும், "ஜனநாயகம் ஓர் அரசியல் இயந்திரம் மட்டும் அல்ல, அது ஒரு



படிப்பகம்

www.padippakam.com

சமூக அமைப்பு மட்டும் கூட அல்ல. அது ஒரு மனப்பான்மை அல்லது வாழ்க்கைத் தத்துவம் ஆகும்'' என்கிறார் டாக்டர் அம்பேத்கர்.

சமூகத்தில், சகோதரத்துவம் இல்லையென்றால், சுதந்திரம் சமத்துவத்தை அழித்துவிடும். சமத்துவம் – சுதந்திரத்தை அழித்துவிடும். ஜனநாயகத்தில் சுதந்திரம் சமத்துவத்தையும், சமத்துவம் சுதந்திரத்தையும் அழிக்கவில்லை என்றால் இரண்டுக்கும் அடிப்படையாக சகோதரத்துவம் இருப்பதே காரணம். எனவே சகோதரத்துவமே ஜனநாயகத்தின் ஆணிவேராகும் – டாக்டர் அம்பேத்கர்.

இந்துமத அமைப்புமட்டுமல்ல,தேசிய/மாநில இயக்கங்களும் ஜனநாயகமற்றதாக இருக்கிறது. சாதியும் வேணும் ஓட்டும் வேணும் – இது தான் இவர்கள் ஜனநாயகம். இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, திராவிட இயக்க ஆட்சியிலும் சரி சாதி மோதல்களும், தீண்டாமை கொடுமைகளும் குறைந்தபாடில்லை. வன் கொடுமை தடுப்புச் சட்டங்களுக்கு தடுப்பு சுவர் கட்டி வைத்திருக்கின்றனர். திராவிட இயக்க ஆட்சியின் அமைச்சரவையில் தலித்துகளுக்கு ஒதுக்குகிற துறையை உற்று நோக்கினாலே தெரிந்துவிடும். அதிகாரமிக்க துறைகளை ஒதுக்குவதே இல்லை. அங்கேயும் இட ஒதுக்கிடு நிலைதான். விளிம்பு நிலையிலே இருத்திவைப்பது தான் இவர்களுடைய நோக்கம். தலித்துகளுக்கு செயல்படுத்தும் நலத் திட்டங்கள் கூட மேல் ஜாதியினரின் சுயலாபத்துக்கே பயனளிக்கும். கூலி உயர்வுக்கென்று கோலப்பன் கமிட்டி பரிந்துரைகளும் கிடப்பிலே.

தலித் இயக்கங்கள் இந்த ஜனநாயகமற்ற அமைப்பு முறையில் உள்ள தேர்தலை நிறங்கண்டு கொள்வது மட்டுமின்றி, சாவடி/மந்தை பஞ்சாயத்துக்கு எதிராகவும், சாதி/தீண்டாமை அரசியலோடு/தேர்தலோடு தொடர்பு கொண்டுள்ளதை வேரறுக்கவும், தேர்தல் நடக்காத பஞ்சாயத்துகளில் உடனடி தேர்தல் நடத்த சக இயக்கத்தினரையும், பிற அரசியல் இயக்கங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுவது அவசியமாகிறது.

நூல் விமர்சனம் :

## 'இந்தியா டுடே' : இலக்கிய மலர்

அ. மார்க்ஸ்




'இந்தியா டுடே'யில் ஏற்பட்டுள்ள 'ஆட்சி மாற்ற'த்திற்குப் பிறகு ஒரு இலக்கிய மலர் வந்துள்ளது (இலக்கிய மலர் 2002. விலை ரூ.20). வாசந்தி காலத்திலென்றால் சுஜாதா ரேஞ்சில் எழுத்தாளர்கள் ஆக்கிரமித்திருப்பர். அவ்வாறின்றி கிட்டத்தட்ட மலர் முழுவதும் இன்றைய தலைமுறை இளைஞர்களால் நிரப்பப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆறுதலாக இருக்கிறது.

மலரைத் திறந்தவுடன் இரண்டு பழைய முகங்கள். இந்த இரு அபிப்பிராயஞ் சொல்லிகளும் அடிக்கிற லூட்டிதான் தாளவில்லை. முதலில் நமது காலச்சுவடு 'ஸ்போக்ஸ்மன்' ரவிக்குமார். இப்படிச் சொல்வது அவரை இழிவு செய்வதல்ல. 'தமிழ் இனி 2000' போது அவ்வாறு மேடையேற்றப்பட்டவர் ரவிக்குமார் என்பது ஊரறிந்த கதை. அன்று முதல் இன்றுவரை அந்த ஊழியத்தை அவர் விசுவாசமாகச் செய்து வருவதற்கான கடைசிச் சாட்சி இந்தியா டுடே மலர். பாருங்களேன்: ரவிக்குமாரின் கருத்துப்படி சிறந்த கட்டுரையாளர் காலச்சுவடு கண்ணன், சிறந்த அரசியல் கவிஞர் மனுஷ்ய புத்திரன், ஆகச் சிறந்த பெண் கவிஞர் சல்மா. நல்ல வேளையாக காலச்சுவடு வட்டத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிலேட்டில் கிறிக்கொண்டிருப்பது அவரின் கண்ணில் படவில்லை. பட்டிருந்தால் அந்தக் குழந்தை சிறந்த குழந்தைக் கவிஞராக மலரில் இடம்பெற்றிருக்கும். ராஜேந்திரசோழன், ஔவை, சேரன் முதலான பெயர்களையும் விட்டுவிடவில்லை.

●



படிப்பகம்

www.padippakam.com

இப்படியான அவரது லிஸ்டில் அழகிய பெரியவன், இமயம் போன்ற பெயர்களைக் காணும்போது தலித் இளம் எழுத்தாளர்களுக்கான உரிய இடம் எனத் தோன்றுவதைக் காட்டிலும் வேறு மாதிரிதான் யோசிக்கத் தோன்றுகிறது.

வழக்கம்போல மணிக்கொடி, எழுத்து, சி.சு. செல்லப்பா முதலான திரு உரு வணக்கங்கள் அதன் இன்னொரு பக்கமாகத் தலித் இளம் எழுத்தாளர்களைக் காய்தலும் ரவிக்குமாரின் இக் கட்டுரையிலும் வெளிப்படுகிறது. அபிமானி, அறிவுக்குயில், இதய வேந்தன் முதலானவர்களின் அடுத்தடுத்த தொகுதிகள் முதல் தொகுதிகளின் மீதான மதிப்பை உயர்த்திவிட்டனவாம். இந்த முதல் தொகுதிகளின் மீது எந்த நல்ல வார்த்தைகளையும் அவர் இதுவரை உதிர்த்ததில்லை என்பது சிந்திக்கத் தக்கது. தலித்களால் நடத்தப்படுகிற தலித் சிந்தனைகளுக்கு முதன்மை அளிக்கிற 'புதிய கோடங்கி' இதழுக்கும் கூட அதற்குரிய அடையாளத்தை வழங்க அவர் தயாராக இல்லை. மற்ற சிற்றிதழ்களுடன் சேர்த்து ஒரு போடு போடுகிறார். 'மணிக்கொடி'யோடு ஒப்பிட முடியாது எனக் கை விரிக்கிறார்.

பின் நவீனத்துவம், யதார்த்தவாதம், ஆசிரியனின் பங்கு முதலான சென்ற இருபதாண்டு கால விவாதங்களை அவரது சமீப காலப் பரிணாமத்திற்கு ஏற்றவாறு காய்கிற ரவிக்குமார் சென்ற கால் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றின் உயிர்ப்பு மிகு விவாதங்களுக்கு இவையே காரணமாயிருந்தன என்பதற்கும், தமிழ்ச் சிந்தனைப் போக்கை இவையே அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதில் பெரும் பங்கு வகித்துள்ளன என்பதற்கும் என்ன சொல்லப் போகிறார் மொத்தத்தில்,

'ஒரு நூலிழை கிடைத்தாலும் வணிக இதழ்களின் பரப்புக்குள் தாவிவிட... இளம் படைப்பாளிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கிடைக்கும் வெளியைத் தமது சார்புகளையும் காழ்ப்புகளையும் காட்டப் பயன்படுத்த அவர்கள் தயங்குவதில்லை' என ரவிக்குமார் கூறியிருப்பது அவருக்குத்தான் அதிகமாகப் பொருந்துகிறது. அவரது சார்புகளையும், காழ்ப்புகளையும் கண்டறிய இக்கட்டுரை மேலும் ஒரு ஆவணம்.

சிற்றிதழ்ப் பாரம்பரியத்தின் கொடுமுடிகளாக மணிக்கொடி, எழுத்து, கசடதபற ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பது அபத்தம். பிரக்ஞை, படிகள், இலக்கிய வெளி வட்டம், பரிமாணம், மார்க்சியம் இன்று, மீட்சி, மேலும், நிறப்பிரிகை, ஆய்வு, சிதைவு என்பதான ஒரு போக்கே தமிழில் புதிய சிந்தனை விகாசிப்புகளுக்குக் காரணமாகியிருந்துள்ளன. ரவிக்குமாரைப் போலன்றி இதை ஓரளவுக்குச் சரியாக இனம் காணுகிறார் சாரு நிவேதிதா. எனினும் அவரது வழக்கமான தன்மையோடு கசடதபற-வையும் இழுத்து வந்து இடையே செருகுவது அவரது நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. பொதுவாக அவரது இலக்கியப் பிரதிகள் அளவிற்கும் விவாத இடையீடுகளின் முக்கியத்துவத்திற்கும் இணை சொல்லத் தக்கதாக அவரது அபிப்பிராயங்கள் அமைவதில்லை. பல சந்தர்ப்பங்களில் கடைசி பியர் பாட்டில்களை அவருக்கு வழங்கியிருப்பவர்களே சிறந்த எழுத்தாளர்கள். இக் கட்டுரையிலும் அத்தகைய போக்குகளை நிறையவே காண முடியும். எனினும் கோபிகிருஷ்ணன், பிரம்மராஜன், சாணக்யா, அழகிய பெரியவன் முதலான சில நல்ல எழுத்தாளர்களையும், நவீன தமிழின் முக்கிய போக்குகளையும் அவர் தொட்டுச் செல்வது குறிப்பிடத் தக்கது.

மலரின் பெரும் பகுதியைச் சிறு கதைகள் எடுத்துக் கொள்கின்றன. நல்ல சிறுகதைகளை இனங்கண்டு தொடர்ந்து பிரசுரித்து வந்த தனது பழைய போக்கை 'இந்தியா டுடே' மீட்டுக் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

பாமா தவிர பெரும்பாலும் இளம் எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ள சிறுகதைகள். கதையின் கதையைத் தொட்டுச் செல்கிறதாகவும், கலாச்சார நீக்கம் செய்யப்பட்டனவாகவும்



படிப்பகம்

www.padippakam.com

(ஓரளவிற்கு) விளங்குகிற அஜயன்பாலா, தாமிரா ஆகியோரின் எதார்த்தம் தாண்டிய எழுத்துக்கள் குறிப்பிடப்பட வேண்டியவை. இதில் அஜயனின் கதை பழைய ருசியக் கதைகளை நினைவூட்டினாலும் கலாச்சார அடையாளங்கள் தவிர்க்கப் பட்டுள்ள அஜயனின் கதைக்கு வரையப்பட்டுள்ள சித்திரங்கள் (ராமச்சந்திரன்) இன்னும் கொஞ்சம் 'அப்ஸ்ட்ராக்ட்' ஆக, அடையாளங்களைத் தவிர்த்து அமைந்திருக்கலாம். சாணக்யா, புகழ் போன்றோருக்கு சிறுகதைக்கென ஒரு சிறந்த நறுக்கான நடை கைகூடி இருக்கிறது. சிறுகதைக்கான உக்கிரம் கூடிய எழுத்தாயினும் சாணக்யாவின் கதை இரு சிறுகதைகளின் ஒட்டைப் போலவும், ஒரு குறுநாவல் போலவும் அமைந்து விடுவதால் சிறுகதைக்கான விளைவை அதனால் ஏற்படுத்திவிட இயலவில்லை. மீரான் மைதீனின் 'முஞ்சி' இசுலாமியப் பின்புலத்துடன் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாயினும் க.சி. சிவக்குமார், மஹி, அரவிந்த பாரதி முதலியோரின் எழுத்துக்களைப் போலவே ஏற்கனவே சொல்லப்பட்ட கதைகளாகவே அமைந்துவிடுகின்றன. மீரான் மைதீனின் கதையை அண்ணாவின் 'செவ்வாழை'யுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். குறிப்பிட்ட அளவிற்கு அழகிய பெரியவனின் கதையும் கூட அப்படித்தான்.

இலக்கிய ஆக்கம் என்பது அதிர்வுகளை ஏற்படுத்துவது. நம்மை நிலை குலையச் செய்வது. அதன் ஆதார அம்சம் கலகம். புதிய எழுத்து முறை இதற்கு உதவினாலும்கூட, ஏற்கனவே சொல்லப்பட்ட விசயங்களை 'அழகாக' அல்லது 'செட்டாக'ச் சொன்னால் போதும் என்றால் ஏமாற்றங்களே எஞ்சும்.

பாமாவின் கதை தலித் எதிர்வினைகளையும் கூடப் பொது அளவுகோல்கள் கொண்டு அளந்துவிட முடியுமா என்கிற கேள்வியை எழுப்புகிறது. விவாதிக்கலாம்.

கிட்டத்தட்ட எல்லா முக்கிய இளம் கவிஞர்களின் (சிவகுமார், யவனிகா, சங்கர், அப்பாஸ், சல்மா, ரேவதி, அமலன், ராஜ்குமார், மாலதி, அமிர்தம் சூர்யா...) கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. ஏனோ மதிவண்ணன், லட்சுமி மணிவண்ணன், வெங்கடேசன், குமாரசெல்வா, ரசூல், கரிகாலன் முதலியோர் விடுபட்டுள்ளனர். எல்லோரும் எப்படிச் சாத்தியம் எனக் கேட்கலாம். எனினும் மதிவண்ணன் முதலியோரை விட்டிருக்கக் கூடாது. கிட்டத்தட்ட எல்லாக் கவிதைகளும் ஒன்று போலவே உள்ளன. குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ஒன்றுமில்லை.

வேலு சரவணனின் நாடகம் வழக்கம்போல நம்முன் உள்ள குழந்தையை உசுப்பி விடுகிறது. குழந்தை நாடகங்களாயினும் கூட அவை வேறு பல பரிமாணங்களில் சிந்தனைகளை உசுப்பிடத் தக்கனவாக அமைய வேண்டும். முருக பூபதியின் பிரதி அண்ணன் கோணங்கியின் சமீபத்திய பிரதிகளைப் போல நுழைவதற்கும் சிரமப்படுத்துகிறது. ஒரு வேளை முயன்று நுழைந்தால் நமக்கு அதிசயங்கள் கிட்டலாம்.

ரஜினி பற்றிய சினிமாக் கட்டுரை நமக்குத் தெரிந்த செய்திகளையே திரும்பத் திரும்பச் சொல்கிறது. பயணக் கட்டுரை பொருத்தமற்றதாக இருக்கிறது. கி.வா.ஜ. பாணியிலான பயணக் கட்டுரைகள் இன்று காலாவதியாகிவிட்டன. அமெரிக்கா பற்றிய பாத்நிலாவின் கட்டுரைகளைப் போல Hyper reality பற்றி இங்கே பேச முடியாவிட்டாலும் நமக்குக் காணக் கிடைக்கும் Realityயையாவது கட்டவிழ்த்துக் காண முயலுவது அவசியமாயிருக்கிறது. அந்த வகையில் தாமிரபரணி பற்றிய கட்டுரை வெற்றிபெறவில்லை.

பல்வேறு புதிய முகங்கள் ஆறுதலளித்த போதும் ஒரு இலக்கியப் பிரதி ஏற்படுத்த வேண்டிய அதிர்வுகளை ஏற்படுத்துவதில் இந்தியா டுடே இலக்கிய மலர் பெரிய வெற்றியைப் பெற்றுவிடவில்லை. எனினும் முந்தைய மலர்களோடு ஒப்பிடும்போது சற்றே நம்பிக்கை தெரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பயணம் - கவிதைகள் - க. பஞ்சாங்கம் (பஞ்சு) (செல்வன் பதிப்பகம், புதுவை - விலை ரூ.35)

- நிகிலன்

'ஓட்டுப்புல்' - பஞ்சு என்று வானம்பாடிக் கவிஞர்களில் குறிப்பிடும்படியாக சொல்லப்படுபவரான டாக்டர் க. பஞ்சாங்கம் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு 'பயணம்'.

ராபர்ட் எம். பிர்ஸிக்கின் 'ஜென்னும் மோட்டார் சைக்கிள் பராமரிப்புக் கலையும்' (ZEN AND THE ART OF MOTOR CYCLE MAINTENANCE) என்ற புத்தகம் படிக்கும்போது உணரப்பட்ட மனநிலைகளுக்கு நம்மை இட்டுச் செல்லும் 'பயணம்' கவிதைத் தொகுப்பு, சுதேசமித்திரனின் 'அப்பா' கவிதைத் தொகுப்பு போன்ற தனித்வமான கவிதைத் தொகுப்பாகும்.

பயணங்கள், அதற்கான முனைப்புகள், அதில் கிட்டும் அனுபவங்கள் எளிமையான கவிதைகளாக வெளிப்பட்டு இருக்கிறது.

நடந்து போன காலங்களில்
சாவுச் செய்தியும்
நடந்து தான் வரும்' (பக்.40)

'பயணத்தில்
தடுக்கப்பட்ட காட்சிகள்தான்
வாழ்வு திருவிழாவாய்க்
கொண்டாடத் தக்க தென்பதை
அழுத்தமாய் சொல்லித் தரும்' (பக். 43)

என்ற யதார்த்தமான, கொண்டாடும் காட்சிப்படிமங்களுக்கு வலு கூட்டுவதுபோல்

'எப்போதுமே
மாமிசம் உண்ணத்தக்கதல்ல
உணரத் தக்கது' (பக். 49)

இப்படி அனைத்துக் கவிதைகளுமே நேரடித் தன்மை வாய்ந்த அழகான கவிதைகள்.

பொதுவாகவே கவிஞர் பஞ்சுவின் கவிதைகள் பஞ்சைப் போன்றே மென்மையானவை; இருப்பினும் அவரின் கச்சிதமான வார்த்தைப் பிடிகளில் கனக்கும் மனம்.

'பயணம் தந்திரமில்லாமல் இல்லை' - என முடியும் கவிதையில் (பக். 18) நாம் கழித்த பயண நேர மன அவலட்சணங்கள் கவிதைக் காட்சிக்குள் நம் முகத்தை வெளிச்சமிட்டுக் காட்டும்.

'மேலும் சில காட்சிகள்' என்று தலைப்பிட்டுப் பின்னப்பட்ட கவிதைகள் கொஞ்சம் தத்துவப் பூச்சுடன் நம்முன் விரியும் :

'இல்லை என்பதை
எந்த இருப்பை வைத்து உணர்ந்தாய்?' (பக்.62)

என்ற கேள்வியில் வேகமாய் ஓடிக் கொண்டிருக்கும் பயணத்தின் நடுவே போடப்படும் பிரேக்குகளாக நிலைகுலையவைத்து மனத்துயிலெழுப்பும்.

பக்கம் 66-ல் உள்ள கவிதை முழுதுமே மேற்கோளாக்கி சிலாகிக்கக் கூடிய கவிதையாகி, மேலும் கவிதை வாசிப்புப் பயணத்தை நீட்டிக்க நாம் ஆசைப்படும்போது அக்கவிதையோடு புத்தகம் முடிந்து மூடப்பட்டு விடுவதில்; பயணத்தினிடையே நம்மை எதிர்பாராத நேரத்தில், அத்துவான காட்டிற்குள் இறக்கிவிடப் பட்டது போல் உணரப்படுவது அவரது 5 ஆம் பக்கக் கவிதை வரிகளை நம் கண்முன் நிறுத்துகிறது.

'நாமே ஓரிடத்தைத் தேர்ந்தெடுப்பதை விட பயணமே ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்துத் தருவது சொல்லி மாறாத அதிர்ச்சியாய் அமைகிறது.'

கவிதைப் பயணம் விரும்புபவர்கள் வாசித்து அனுபவிக்க வேண்டிய நல்ல கவிதை நூல்.



படிப்பகம்

www.padippakam.com

# கொண்டறுப்பு

- அயன்புரம் இராஜேந்திரன்

அன்னைக்கு விடிய காலலேருந்தே ஊரு கும்மாளமா தெரிஞ்சுது. பொடுசுங்க, பெரியபசங்க எல்லாமே ஆத்துக்கு ஓடிச்சிங்க. கருக்கல்லேயே ஆத்துல தண்ணி வந்துடுச்சின்னு கட்டையன் தாத்தா சொல்லிட்டு போச்சு. ஆத்துல தண்ணி கரபுரண்டு ஓடிச்சி.

தண்ணியப் பாத்த சந்தோசத்துல பசங்கல்லாம் மொண்டக் கட்டையாவும், கோமணத்தோடும் தொம் தொம்னு ஆத்துல குதிக்கிறதும், சொர்வானம் வுடுறதும், நீச்சலடிச்சிகிட்டு அக்கரைக்கு போறதுமா ஆத்த ஒரு கலக்கு கலக்கிடுச்சிங்க.

அது ஆடி மாசம். ஆடில்ல தண்ணி வந்தாதான் தண்ணி பாச்சி, வெத வெதச்சி, நாத்து நட்டு அய்ப்பசிக்குள்ள அறுப்பு அறுக்க முடியும். இல்லாட்டி நட்டும் புரோஜனமிருக்காது. பிந்தி நட்டா அய்ப்பசி மாச மழயில பயிரெல்லாம் அழிஞ்சி போயிடும். அன்னாடம் காச்சிகளுக்கு கெடைக்கிற அரவயிறு கொறவயிறு கஞ்சிக்கும் மண்ணுவுழுந்துடும். 'ஆடிப்பட்டம் தேடி வெத'ன்னு அய்ப்பசி மாச மழைக்குப் பயந்து தான் சொல்லியிருக்குனுமுன்னு தோனுது.

கிறுசுநாதன் அண்ணன் வந்து இன்னும் ரெண்டு நாள்ல கலுங்கடிக்கெல்லாம் தண்ணி வந்துடுமாம், இப்பத்தான் லஸ்கர பாத்து பேசிட்டு வந்தேன்னு அப்பாகிட்ட சொல்லிச்சி. ஆயா ராசம்மா வூட்டுக்குள்ள என்னமோ வேலை செஞ்சிட்டு இருந்திச்சி. வெளில பேசிட்டு இருக்கிறத கேட்டதும் ரெண்டு வாரத்துக்கு முன்னாடி போயி ஆயாவோட அண்ணங்கிட்ட வெத நெல்லு கேட்டுட்டு வந்தது ஆயாவுக்கு ஞாபகத்துக்கு வந்தது. ஆத்துல தண்ணி வந்துடிச்சி. சீக்கிரமா வேலயத் தொடங்கனும். இன்னொரு தடவ அண்ணனைப் போயி பாத்துட்டு வரனும்னு மனசுக்குள்ள பேசிவிட்டது.

அப்பா வெசனத்தோட திண்ணையில உக்காந்திருந்தது. வெத நெல்லுக்கு மாமாகிட்டயிருந்து எந்த பதிலும் வரல. இருக்குற எரநூறு குழி நிலத்தையும் நட்டாத்தான் ஏதோ கொஞ்சம் நிம்மதியா குடும்பம் நடத்தலாம். கோயிலுக்கு அளந்ததுபோக என்ன மிஞ்ச போவுது. கடங்காரந் தொல்ல வேற. பையன் வேற ஆஸ்டல போயி படிக்கனும்னு அடம் புடிக்கிறான். நம்ம சாதி சனத்துல யாரும் ஒழுங்கா படிக்கல. இவனை எப்படியாவது படிக்க வைக்கனும். கையில ஒரு பைசா இல்ல. வயல் கொத்தனும், ஏரு உழுவுனும்ன்னு பல யோசனையில இருந்தவரு திடீரென்று எழுந்துகிட்டாரு.

தேவர் வூடு வரைக்கும் போயிட்டு வர்றேன்னு ஆயாகிட்ட சொல்லிட்டு நேரா குடியானத் தெருவுக்கு போச்சிது. தேவர் வூட்டுகிட்ட போயி ஓரமா நின்னுகிட்டு 'அய்யா, அய்யா'ன்னு கூப்பிட்டுது. எந்த பதிலும் இல்ல. கொஞ்ச நேரங்கழிச்சி 'ஆச்சி, ஆச்சி'ன்னு கூப்புட்டுது. சத்தம் கேட்டு வெளியில எட்டிப்பாத்த தேவரோட பொண்டாட்டி "என்ன கருப்பா என்ன வேணும்னு" கேட்டா. "ஒன்னுமில்லீங்க... தலய சொரிஞ்சிகிட்டே ஒரு அம்பது ரூவா கடனா வேணும். வேல செஞ்சி கழிச்சிடுறேன். அதான் அய்யாவைப் பாத்து கேட்டுட்டுப் போலாம்னு வந்தேங்க"ன்னு சொல்லுச்சி.

"அய்யா வீட்ல இல்லீயே கருப்பா... சொசைட்டி வரைக்கும் போயிருக்காங்க. வீட்டுக்கு மத்யானமா வருவாங்க. நீ வந்துட்டு போனதா சொல்றேன். அது சரி.. அப்படியே கொல்லப் பொறமா போயி மாட்டுக்கு கொஞ்சம் வக்யல புடுங்கி போட்டுட்டு, கொஞ்சம் தண்ணியும் காட்டிட்டு போ"ன்னு சொன்னா.

கடன் கேட்டு வந்ததுக்கு நொட்டைவேல, நோனிவேல சொல்றாளுங்கன்னு முனுவிகிட்டே கொல்லப்புறமா போயி சொன்ன வேலய செஞ்சிபுட்டு, "ஆச்சி... மாட்டுக்கு தண்ணி காட்டிட்டேன், வக்யலும் போட்டுட்டேன். அய்யா வந்ததும் கொஞ்சம் சொல்லி வையுங்க. சாய்ங்காலமா வந்து அய்யாவைப் பாக்கிறேங்க"ன்னு சொல்லிபுட்டு எப்படியும் கடன் கிடைச்சிடும்ங்ற நெனப்போட வூட்டுக்கு போச்சுது.

நாலஞ்சி நாள்ல கிராமத்துல எல்லா நெலத்துலேயும் தண்ணி பாஞ்சிடுச்சி. ரெண்டு நாளைக்கு முன்னாலேயிருந்தே வயவேலையெல்லாம் தொடங்கிடிச்சி. கூலி வேலக்கு போறவங்கல்லாம் கருக்கல்லேயே எழுந்திருச்சி கௌம்பிட்டிருந்தாங்க.



படிப்பகம்

www.padippakam.com

அப்பாவும் கலுங்கடியிலிருந்த தன்னோட நாத்தங்காலுக்கு மம்புட்டியை எடுத்துக்கிட்டு கிளம்பினாரு. ஆயா ஒரு சொம்பு நெறய நீராரம் கொடுத்துச்சி. அதை குடிச்சிட்டு ஒரு பெரிய ஏப்பத்த விட்டாரு. நாத்தங்காலுக்கு போயிட்டு வாரன்னு சொல்லிட்டு மம்புட்டியை எடுத்து தோள்ல வச்சிகிட்டு நடையை போட்டாரு.

ஊருக்கு ஒரு புறம் பஸ்சு ஓடுற சாலையும், அத ஒட்டி ஓடுற ஆறும் இருக்குது. மறுபுறம் எங்கு பாத்தாலும் வயலும், வரப்பும், செடிகளும், கொடிகளும், மரமும் மட்டைகளுமாதான் தெரியும். பயிரு வச்சி, பச்சை புடிச்சதும் போய் பார்த்தா கண்ணுக்கு ஒரே குளுமையா இருக்கும். திரும்புற இடமெல்லாம் பச்சை பச்சையா வளந்து கெடக்கும்.

தெருவுக்கு பக்கத்துல இருக்குற பெரிய வாய்க்கா வரப்பு நல்ல மோடா இருக்கும். அதுல நின்னுக்கிட்டு பாத்தா கலுங்கடி இதோதான் இருக்கறாப்பல தெரியும். ஆனா நடந்தா காலே வலி எடுத்துக்கும். வாய்க்காலும் வரப்புமா நடந்து சென்ற அப்பா நாத்தங்காலுக்கு போனதும் தண்ணி நல்லா பாஞ்சிருக்கிறத பாத்துட்டு மடயை அடைச்சுபுட்டு நாத்தங்காலுக்குள்ள இறங்கினாரு. பக்கத்து வய பக்கமா திரும்பியவருக்கு மனசு பக்குன்னு ஆயிப்போச்சு.

நாத்தங்காலுக்கும் பக்கத்து வயலுக்கும் எடையில இருக்கிற வரப்பு பொதுவானது. வயப் பக்கமா அண்ட வெட்டுனவுங்க வரப்போட அளவ வெட்டி குறச்சிட்டாங்க. அதப் பாத்தோன்ன அப்பாவுக்கு வயித்தெரிச்சலா ஆகிப் போச்சு. வேலய முடிச்சிட்டு போனதும் இத ரெண்டுல ஒண்ணு பாத்துடனும்னு மனசு கெடந்து துடிச்சிது.

மனசுல தேக்குன கோவத்தோட மம்புட்டியை ஓங்கி ஓங்கி போட்டாரு. நெத்தி வேர்வை நெலத்துல சிந்த சுட்டெரிக்கும் வெய்யில்ல நாத்தாங்கால கொத்தி, அண்ட வெட்டி அழுகுபடுத்திட்டு ஒட்டி ஓடுற வாய்க்கால்ல இறங்கி தண்ணிய அள்ளி அள்ளி குடிச்சாரு. அப்படியே மம்புட்டியையும் உடம்பயும் கழுவிட்டு ஓட்டமும் நடயுமா வூடு வந்து சேந்தாரு.

வூட்டுக்கு போறதுக்குள்ள வயிறு கபகபன்னு புடுங்குச்சி. பானைல கெடந்த பழயதை அள்ளி கொஞ்சம் வயித்துல போட்டுகிட்டு குடியானத் தெருவுக்குள்ள கோவமா போனாரு.

காட்டூர் புள்ள வூட்டு வாசல்ல போய் நின்னுகிட்டு "நீங்கெல்லாம் ஆண்டன்னு சொல்லிக்றீங்க. உசந்த சாதிங்றீங்க. பத்து, இருவது ஏக்கர் நிலம் வச்சிருக்கீங்க. அப்புறம் எதுக்கு பறயன் சொத்துக்கு ஆசப்படுறீங்க. புள்ளயா குட்டியா ஒன்னுமில்ல. அப்புறம் எதுக்கு இப்புடி வரப்பவெட்டி வயல சேக்றீங்க. காலமெல்லாம் உங்க வயக்காட்டுல ஒழச்சிபுட்டு கொடுக்குற கூலில கூழோ கஞ்சியோ குடிச்சிபுட்டு உசுரு வாழுறோம். அதெல்லாம் நெனச்சிப் பாக்குறீங்களா.

ஏதோ நூறுகுழி இருநூறு குழின்னு நாங்க வச்சிருக்கோம். அதுவும் ஒங்களுக்கு பொறுக்லியா? ரெண்டுல ஒன்னு தெரிஞ்சாகனும்"னு கத்திக்கிட்டிருந்தாரு.

சத்தம் கேட்டு காட்டூர் புள்ளயோட பொண்டாட்டி எட்டிப்பாத்தா. அவளப்பாத்ததும் இன்னும் கொஞ்சம் வேகமா கத்திகிட்டே.

"உங்க பண்ணையாளு என்னோட வரப்ப வெட்டி வரப்ப சின்னதாக்கிட்டான். அதுக்கு ஞாயம் கேட்டுத்தான் கத்திகிட்டு இருக்கேன். எனக்கு பதில் சொல்லலேன்னா நான் இத வுடமாட்டேன்." அப்படி இப்படின்னு சத்தம் போட்டுகிட்டே இருந்தாரு.

பக்கத்து வூட்ல இருந்து காட்டூர் புள்ளயோட மச்சான் சீனிவாசம்புள்ள "டேய் கருப்பா, நானும் பொறுத்து பொறுத்து பாக்கிறேன். என்ன ரொம்பத்தான் துள்ற. பறப்பயலுக்கு தெனாவெட்ட பாத்தியா! டேய். அவனப் புடுச்சி கட்டுங்கடா"ன்னு திமிரா ஓடிவந்தாரு.

அப்பா அதெக்கெல்லாம் பயப்படுல. "என்ன பறயன்னா அவ்வளவு எளக்காரமா? அதெல்லாம் அந்தக்காலம். முடிஞ்சா கட்டிப் பாருங்க"ன்னு எதித்து பேசிகிட்டே தன்னோட ஞாயத்த கேட்டாரு.

அந்த தெருவுல அப்பாவோட கொரலுக்கு எந்த ஞாயமும் கெடைக்கில. பறப்பயலுக்கு எவ்வளவு துணிச்சல பாரு. நம்மல பாத்தா பயம் வுட்டுபோச்சு. எல்லாம் கட்டி வச்சி உரிச்சா சரியாப் போயிடும். அப்படிங்கிறமாதிரி பேசினவங்கதான் அதிகம்.

அதுமட்டுமல்ல, "சரிதான் போடா! ஓ வரப்ப வெட்டுனுவன் யாரு. ஓ சொந்தக்காரன்தான. அவனப் போயி கேளு"ன்னு பிரச்சனையைத் திசை திருப்பவும் செஞ்சாங்க.



படிப்பகம்

www.padippakam.com

அப்பா விடல. "தப்பு செஞ்சது அவந்தான். ஆனா லாபம் ஒங்களுக்குத் தானே! அதனால நீங்க தான் பதில் சொல்லனும்"னாரு.

எவ்வளவு கத்தியும் புரோஜனமில்ல. கத்தி கத்தி களச்சிப் போனவரு என்ன செய்யிறதுன்னு தெரியாம திரும்பி நடந்தாரு. தன்னால ஒன்றும் செய்ய முடியிலியேன்னு அவமானமா நெனச்சாரு.

வெறுப்போடும், வேதனையோடும் போய்க்கிட்டு இருக்கும்போது காட்டூர் புள்ளயோட மாட்டுவண்டி நெல்ல ஏத்திக்கிட்டு அரிசியரைக்க போய்க்கிட்டிருந்தத பாத்திட்டாரு. ஒரே ஒட்டமா போயி மாட்டையும் மூக்கணாங்கயிறயும் இறுக்கி புடுச்சி வண்டியை தடுத்து நிறுத்தினாரு. வண்டிய ஓட்டிட்டு வந்த கண்ணய்யன் மாமாவைப் பாத்து "ஏண்டா இந்த மானங்கெட்ட பொழப்பு பொழக்கிறீங்க. ஒக்கால ஓலிங்களா. அவுனுவலுக்கு என்ன, சொத்துல கொறச்சலா, சொகத்துல குறச்சலா. அவுனுவலுக்கு சொத்து சேக்க ஆளா பறக்றீங்க"ன்னு வஞ்சாரு.

பக்கத்துல நின்னு பாத்துக்கிட்டு இருந்த அஞ்சம்மா அக்கா, "சரிதான் வுட்டுட்டு போ தம்பி. நம்மல போல ஏய சனங்களுக்கு எங்க ஞாயமெல்லாம் கெடைக்குது. காரித்துப்பிட்டு போவியா. ஏதோ புத்தியில்லாம செஞ்சிபுட்டான். வுட்டுட்டு போ"ன்னு சமாதானம் சொல்லிச்சி.

அப்பா சண்டப் போட்டுகிட்டு இருக்கிறத வனமயில் அக்கா வந்து ஆயாகிட்ட சொல்லிச்சி. அத கேட்டதும் ஆயா வாய்க்கு வந்தபடி வைய ஆரம்பிச்சிது. "இந்த குடியானவுனுவ புத்தியே இதுதான். பறயன் சொத்துக்கு ஆசப்படறதும் பறச்சிங்க இதுக்கு ஆசப்படறதும் அவுனுவ தொழிலாப் போச்சி. அப்புறம் ஆண்டம்பானுங்க. தொடக்கூடாதும்பானுங்க, சாண்டாகுடிக்கிங்க, ஏ இத கடிச்சிங்க"ன்னு வஞ்சிகிட்டு இருந்தது.

அப்பாவுக்கு எந்த ஞாயமும் கெடக்கில. அவரால அத மறக்கவும் முடியல. அத நினச்சிக்கிறப்பல்லாம் ரொம்ப வருத்தமாயிடுவாரு.

ஊரெல்லாம் விவசாய வேல சுறுசுறுப்பா நடந்துகிட்டு இருந்தது. அப்பாவும் சொந்த வேலயிலேயும், கூலி வேலயிலேயும் ஓயாம ஒழச்சிகிட்டு கிடந்தாரு. மூனு மாச காலம் போனதே தெரியல. வயலெல்லாம் கதிர்விட்டு பழுத்து கிடந்தது. இந்த வருசம் நல்லவெளச்சல்னு பேசிகிட்டாங்க. ஏழ பாழைங்களுக்கும் ஓரளவு வேல கெடச்சிது. அதுகள்ட்ட இருந்த நாறு குழி, எரநூறு குழி நெலத்லேயும் வெளச்சப் பரவாயில்லாம இருந்தது.

அப்பாவும் தன்னோட நெலத்துல இருவது மேனி வரைக்கும் நெல்லு காணும்னு பூவன் மாமாகிட்ட பேசிகிட்டிருந்தாரு.

ஊரெல்லாம் அறுப்பறுக்கும் பரபரப்புல இருந்திச்சி.

ஒரு நாள் காலயில குடியானத்தெருவுல ஒரே கூச்சலா இருந்தது. ஒப்பாரி வைக்காதகுற. இதஎந்த திருட்டு பய செஞ்சிருப்பான். கையில கெடச்சா கண்டதுண்டமா வெட்டி புடுவோம். தேவடியா பயஎவன் செஞ்சானு தெரியலயேன்னு கத்திகிட்டு கெடந்தான்க.

கண்ணயன் மாமா குடியானத் தெருவுலேருந்து வந்தாரு. அவருகிட்ட "என்ன அங்க ஒரே சத்தமாயிருக்கு"துன்னு கேட்டதுக்கு, "யாரோ நேத்து ராத்திரி காட்டூர் புள்ளயோட நெலத்துல பூந்து கொண்டறுப்பு அறுத்துட்டாங்கலாம். ஏதோ புதுசா திருட்டு கும்பலாட்டம் தெரியதுன்னு பேசிக்கிறாங்க. ராத்திரில காவகாக்க ஆளு போட்டு இத கண்டுபுடிக்கனும்னு பேசிக்கிறாங்க"ன்னு சொன்னாரு.

கதயகேட்டுகிட்டிருந்த பெருசுங்க ஆளுக்கு ஒரு கதைய அவுத்து வுட்டுதுங்க. அங்க அப்படி நடந்தது. இங்க இப்படி நடந்ததுன்னு சொல்ல ஆரம்பிச்சுதுங்க. சின்ன பசங்கெல்லாம் வாய பொளந்துகிட்டு கதை கேட்டுகிட்டிருந்துதுங்க.

சோனி மாமாவும், அப்பாவும் வூட்ல அடுக்கி வச்சிருந்த சாக்கு மூட்டைங்கள பாத்துகிட்டே ஒருத்தர ஒருத்தர் பாத்து சிரிச்சிக் கிட்டாங்க.

ஆயாவ கூட்புட்டு கோழி அடிச்சி கொளம்பு வைக்க சொல்லிபுட்டு கள்ளுகடய நோக்கி எகத்தாளமா நடக்க ஆரம்பிச்சாங்க. ●

* கொண்டறுப்பு : நெற்பயிரை அடிவரைக்கும் அறுக்காமல் மேலுள்ள கதிரை மட்டும் கொஞ்சுவது.



படிப்பகம்

www.padippakam.com

# சினிமாவில் கலகம்

**- வேட்டைக்கார கண்ணன்**

(இரண்டு திருத்தங்கள்: ஒன்று தி கிரேட் ட்ரெயின் ராபரி படத்தின் இயக்குநரான போர்ட்டர் (EDWINS - PORTER) என்ற அமெரிக்கர் 1896இல் தாமஸ் ஆல்வா எடிசனின் பிளாக் மரியா ஸ்டுடியோவில் பணியாற்றியவர். எனது கட்டுரையில் கிரிபித்தின் மாணாக்கர் என்று குறிப்பிட்டது தவறு.

இரண்டாவது திருத்தம் : தி கிரேட் ட்ரெயின் ராபரி படத்தின் திருடர்கள் அரசாங்க பணத்தை கொள்ளையடிப்பதாக குறிப்பிட்டிருந்தது தவறு. கொள்ளையர்கள் ரயிலில் வந்த பயணிகளைத்தான் கொள்ளை அடிக்கிறார்கள்.)

இத்தவறுகளால் வாசகர்களை சற்றுப் பின்நோக்கி அழைத்துச் செல்ல வேண்டியது அவசியம். ஆகவே சினிமாவின் குழந்தைப் பருவமான 1895 – 1914 வரையில் நடந்தவற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

வெற்றுக் கண்களுக்கு துணையாக எப்படி மைக்ராஸ்கோப்பும் டெலஸ்கோப்பும் வளர்ச்சி அடைந்தனவோ அந்த மாதிரி அசைவை ஆய்வு செய்ததின் விளைவாக சினிமாவின் வளர்ச்சி பாதி நிகழ்ந்தது என்றால் மீதி வியாபார ரீதியான கண்ணாடி விளையாட்டுக் கருவிகள் மற்றும் பார்க்கும் கருவிகள் ஆகியவை பிம்பங்கள் அசையும் பிரமையை வழங்கின.

முதலில் யாரும் சினிமாவுக்கு கதை சொல்லும் ஆற்றல் இருப்பதாக நினைக்கவில்லை. அதனுடைய ஆற்றல் கதை சொல்லாத வெறும் கலையாற்றல் என்று மட்டும்தான் நினைத்தார்கள். ஆனால் நிலைத்த சட்டக பிம்பங்கள் (Still Images) நகர ஆரம்பித்து, அதற்கான நேரத்தை தக்கவைத்துக் கொண்டவுடனும்தான் புகைப்படக்காரர் இந்தத் தொடர் சட்டக நேரத்தை எப்படி கையாள்வது என்ற சவாலை எதிர்கொண்டார். அதோடு அசைய வைக்கும் இந்த விசை வேகத்தால் இடம் (Space) சம்பந்தமான விஷயத்தையும் சேர்த்து ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆகவே ஒரு நாவலைப் போல நாடகத்தைப்போல இசை அல்லது நாட்டியம் போன்ற முறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி கோவைகளுக்கு தொடக்கம் – நடுப்பாதி – முடிவு ஆகியவை தேவைப்படுவதைப்போல ஒரு சிறிய சலனப் படத்துக்கும் அவைகள் தேவையாயிருந்தன.

## மேலோட்டமான ஆவணங்கள் :

துவக்ககால புகைப்படக் கலைஞர்கள் நிர்ணயிக்கப்பட்ட சம்பவங்களைப் படம்பிடித்தார்களே தவிர ஒரு கதையை அல்ல. உதாரணமாக ஒரு குழந்தை அப்பா – அம்மாவுடன் ஸ்பூன் வைத்துச் சாப்பிடும் காட்சி, அல்லது பழக்கப்படுத்தப்பட்ட இரு பூனைகுட்டிகள் ஒன்றை ஒன்று துரத்தி வளையத்துக்குள் பாயும் காட்சி இப்படி இருக்கும். இது போன்ற படங்கள் ஸ்டில் போட்டோகிராப்பை விட கலாபூர்வமாக இருந்தது என்பது உண்மை தான்.

சலனப் படம் ஆக்கிய துவக்ககால காமெரா கலைஞர்கள் தாங்கள் படமாக்கக்கூடிய விஷயத்தை தேர்வு செய்யும் போது ஒரு ஓவியர் அல்லது (ஸ்டில்) போட்டோகிராபர் ஆகியோர் ஏற்கனவே அளித்துள்ள விஷயத்தைத்தான் கண்டு கொண்டார்கள்.

அதாவது சில காட்சிகள் மற்றவற்றைக் காட்டிலும் உள்ளார்ந்த ஆர்வத்தை (அல்லது மற்றொரு பொருளில் வெளியார்ந்த) தூண்டுவன என்பதுதான் அது. ஒரு வேலை ஆள் கதவைத் தட்டுவது, ஒரு மாது கோழிகளுக்கு தானியம் போடுவது - இத்தகைய காட்சிகள் ஆரம்பகாலப் பார்வையாளர்களைத் திருப்திப் படுத்தின. பின்னர் இது போன்ற அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் மாற்றப்பட்டு கடலில் செலுத்தப்படும் கப்பல், தேசத் தலைவர்கள் பெருங்கூட்டத்தைப் பார்த்து உரையாற்றும் பாவனைக்காட்சிகள் ஆகியவை இடம் பிடித்து பார்வையாளர்களை வசீகரித்தன. ஒரு பயில்வான் புஜபல பராக்கிரமத்தை (எட்வர்ட் சாண்டோ) காட்டுவார். அல்லது துப்பாக்கி வீரர் இடைவிடாமல் குறிப்பொறியை (லிட்டில் ஷாட் – அன்னி ஓக்லே) சுட்டு வெற்றி பெருவார். பின்னர் இக்காட்சிகளுக்கு மாற்றாக இதைவிட அதிக சம்பவங்கள் கொண்ட தமாஷ் கேளிக்கைகள் இடம் பிடித்தன.



படிப்பகம்

www.padippakam.com

'ஃபன் இன் எ சைனீஸ் லாண்டரி' மற்றும் நாடகத் துறையில் பிரபலமாக வெற்றி அடைந்த ஜோசப் ஜெபர்சனின் 'ரிப்ஸ் அவேக்கனிங்' ஆகியவற்றை இதற்கான உதாரணங்களாக குறிப்பிடலாம்.

இவைகளையும்விட ஆர்வமூட்டக் கூடிய காட்சிகள் கூட படமாக்கப்பட்டன. ஆனால் அவையும் கூட இரண்டு விஷயங்களால் எல்லைக்குட்படுத்தப்பட்டன. கேமரா எங்கு நிலைப்படுத்தப் படுகிறது. படமாக்குபவர் எக்கட்டத்தில் காட்சிகளைப் படமாக்குவார் என்பவைகளே அந்த எல்லைகள்.

அதாவது பார்வையாளர்கள் தெளிவாகப் பார்க்க வசதியான இடத்தில் கேமராவை நிலைப்படுத்துவது – அதாவது நேர்முன்னால் பார்வை மட்டத்தில் – அதே சமயம் படமாக்குவதற்கு வசதியாக தேவையான அளவு பின்னால் – என்பதற்கு மேல் எதுவும் இல்லை.

இப்படங்களுக்கான கால அளவு அரை நிமிடம் அல்லது அதற்குச் சற்று குறைவாக இருக்கும்.

அதாவது செயற்கையாகச் செய்யப்படாத நிஜத்தை (பேசாத, கருப்பு – வெள்ளை இரட்டைப் பரிமாண எல்லைக்குள்) லூமியர் மற்றும் எடிசன் போல மற்றவர்களால் அப்போது படமாக்க முடியவில்லை.

இந்த வகையில் லூமியரின் கடல் முகத் துவாரத்தில் துடுப்புப் போட்டு சுழன்று வந்த படகுகள் அல்லது எடிசனுடைய படத்துக்காக பாத்திமா ஆடிய நடனம் ஆகியவற்றை குறிப்பிட முடியும்.

முதலில் சினிமாவைச் செய்தவர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகிய இரு பிரிவினருமே நிஜத்தை மிகவும் புதியதாக, புதிய வழியில் பார்ப்பதாக உணர்ந்தார்கள்.

ஆகவே ஒரு பிரஞ்சு பார்வையாளன் "ஏய் உயிருடன் இருக்கிறது! எல்லாம் உயிருடன் நிஜமாய் இருக்கிறது!" என்று லூமியர் காட்சியைப் பார்த்ததும் கத்தினான்.

இத்தகைய படங்களில் குறிப்பிட வேண்டிய ஒரு காட்சியை லூமியர் படைத்திருந்தார். அது ரயில் நிலையத்திற்குள் இழுத்துச் செல்லும் காட்சி. இது போன்ற காட்சிகளை படமாக்கும் போது கேமரா இறக்கமாக (செங்குத்தாக அமையாமல்) விரிகோண நிலையில் அமையவேண்டும் என்பதை நிறுவியது.

கருவளம் கொண்ட இத்தகைய புராதன காட்சிப் படங்கள் வேறுபாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தன. ஒன்றை ஒன்று விலக்கிச் செல்லும் இத்தகைய வேறுபாடுகளின் அழகியல் பண்புக்கூறுகள் இன்றுவரை தொடரக் கூடியன. ஆனால் இவைகள் ஸ்டில் போட்டோ கிராபியில் தோற்றம் கொண்டு பின்னர் சலனக் காட்சியில் இடம் பெற்றன.

புகழ்பெற்ற சினிமா கோட்பாட்டாளர் சீக் பிரைட் கிராகயர் (Sieg Fried Kracauer) அவருடைய நூலான "சினிமா கோட்பாடு: பருமை எதார்த்தத்தின் குறுக்கம்" என்ற நூலில் இதை வடிவாக்கத் தன்மை என்று கூறுகிறார். அதன்படி கலையியலில் தங்கியிருப்பதற்கு, பழங்கலைகளில் இருந்து விஷயங்களையும், மாதிரிகளையும் உபயோகிப்பதாகும்.

சலனப்படம் வருவதற்கு முன்பு கூட சில ஸ்டில் போட்டோ கிராபர்கள் தங்களுடைய புகைப்படங்களில் இடம் பெறும் நபர்களை கலாபூர்வமான இடங்களில் இருத்துவது; பின்புலத்தை ரசனையுடன் ஒப்பனை செய்வது; ஒரு சித்திரத்துக்கு ஒப்பான முறையில் ஒளியைப் பயன்படுத்தி எந்திரகதியான தன்மையை குறைப்பது என்ற விதத்தில் இயங்கினார்கள். அதே சமயம் நிஜத்தை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளையும் பார்வைகளையும் சிதைத்துவிடாமல் எதார்த்தமாகப் படம் பிடிக்கும் கேமராவின் திறனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதிலும் உண்மையோடு விளங்கினார்கள்.

ஆனால் எடிசனின் படங்கள் இந்த விஷயத்தில் குறைபாடுடையவை. இதற்கு காரணம் அவருடைய பளுவான, இடைஞ்சலான கேமராவின் இயலாமையாக இருக்கலாம். எப்படியாயினும் அவைகள் நாடகத் தன்மையானதே. எது உருவாக்கப்பட்டு கிடைத்ததோ அதை படமாக்குவது என்பதைத் தவிர வேறு ஒரு வேலையும் கேமராவுக்கு இல்லை. ஆகவே கால-இட விதிகளால் கட்டுண்டு நிகழ்த்தப்படும் பழங்கால நாடகப் பாணி கதை சொல்லும் முறையேதான் இது.

எதார்த்தவாத மரபு – டாக்குமென்டரி பாணி – முதலில் மிகவும் பலமுடையதாக இருந்தது. கையோடு எடுத்துச் செல்ல வசதியான லூயிஸ் லூமியரின் கேமராவுக்கு ஸ்டுடியோவோ அல்லது ஏற்கனவே தயாராக உள்ள செட்டோ தேவையாயிருக்கவில்லை. ஆகவே கேமராவை தெருக்களுக்குக் கொண்டு போய் படித்தமான


படிப்பகம்

www.padippakam.com

காட்சிகளில் பதிய முடிந்தது. நாடகத்தில் ஒரு சுவரைத் தொலைத்துவிட்டு ஜன்னல் வழியே வெளியே பார்க்காமல் நிஜமாகவே கதாபாத்திரங்கள் வெளியே பார்த்தார்கள். மற்றொரு அடிப்படையான வேறுபாடு, எடிசனின் படமாக்கலில் கிடைக்காதது, லூமியரின் படங்களில் கிடைத்தது. அதாவது மக்களும், மிருகங்களும், வாகனங்களும் நிஜமாக கேமராவை நோக்கி வந்தன. கேமராவுக்கு அப்பால் போயின. ஆனால் எடிசனின் படங்களில் இத்தகைய காட்சிகள் மேடை நுகத்தடியில் சிக்கி கதறின.

இவ்விதமாக லூமியரும் அவரைப் பின்பற்றியவர்களும் விட்டுச் சென்றுள்ள காட்சி முறைகளும், கதாபாத்திர நிகழ்ச்சிகளும் சென்ற நூற்றாண்டின் திருப்பு முனையில் மக்கள் எவ்விதம் வாழ்ந்தார்கள் என்பதை நம் கண்முன்னே நிஜபிம்பங்களாக விரித்துப் போடுகின்றன. நிஜவாழ்க்கையை களமாகக் கொள்ளும் அற்புத கலை ஆற்றலின் கருவளம் இத்தகைய காட்சிகளில் கிடைத்தன. லூமியர் 1895 இல் எடுத்த "Arroseur Arose (The Squirter is Squirted) என்ற படத்தின் நிகழ்ச்சி, வழக்கமாக செட்டுக்குள் எடுக்கப்பட்ட கேளிக்கை நிகழ்ச்சியை செட்டுக்கு வெளியே எடுத்தது.

தோட்டக்காரன் புல்வெளிக்கு நீர் தூவிக் கொண்டிருக்கிறான். அச்சமயம் ஒரு பொடியன் நீர்வரும் ட்யூப்பை தனது காலால் மிதித்து தடை செய்கிறான். தோட்டக்காரன் குழம்பிப் போய் ட்யூபை முகத்துக்காகத் திருப்பிப் பார்க்கிறான். பொடியன் டக் கென்று காலை எடுக்க, எதிர்பாராமல் தண்ணீர் பீய்ச்சி தோட்டக்காரன் தொப்பலாக நனைகிறான். பின்னர் 1896இல் வந்த "A Game of Cards" படமும் இது போன்ற ஒன்றுதான்.

எதார்த்தமான செட்டிங்குகளில் நடிக்கப்பட்ட கதைகள் இதன்பிறகு குறைந்தபட்சம் பத்தாண்டுகள் வரை தொடர்ந்தன. ஒன்று லூமியர் பாணி என்றால் மற்றொன்று எடிசனின் பாணி. இந்த சினிமாக்களும் ஓரிடத்தில் நிலைப்படுத்தப்பட்ட கேமராவால் எடுக்கப்பட்ட சிங்கிள் ஷாட் கேளிக்கை நிகழ்ச்சிகளால் செய்யப்பட்டன.

கதை சொல்லும் ஆற்றலை 1900 இல் சினிமா பெற்றிருக்கா விட்டால் புதிதாய் பிறந்த சலனப்படம் கரு நிலையிலேயே கலைந்து போயிருக்கலாம். சினிமாத் தொழில் நுட்பத்துக்கான கண்டுபிடிப்புக்கள் வந்து சேரச் சேர அதை ஒட்டி சினிமா உத்திகள் குறித்து எழுந்த முடிவற்ற விவாதங்கள் தீர்த்துக் கொள்ளப்படாமலேயே தொடக்க காலப் படங்கள் மறைந்து போயின. அதோடு தேசிய கௌரவம், தனி நபர் பங்கு போடும் தன்மை போன்றவை சினிமா வரலாற்றை சிக்கலாக்குகின்றன. ஆனாலும் ஜார்ஜஸ் மெலியிசினுடைய பங்கையும், அவர் முழுக்கதை சொல்லும் ஆற்றல் உடையதாக சினிமாவை மாற்றியதையும் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. இந்த வகையில் அவரைவிட குறைவாகச் சாதித்தவர்களையும் கூட சினிமா வரலாறு மறந்து விட முடியாது.

மற்றவர்களைப் போல் அல்லாமல் மெலியிசுக்கு கலைப்பின்னணி இருந்ததால் சலனப்படம் பற்றி வேறு விதமாக அவரால் சிந்திக்க முடிந்தது.

அடிப்படையில் ஒரு மாயாஜால வித்தைக்காரரான மெலியிஸ் அதற்கென ஒரு அரங்கையும் நடத்தி வந்தார். இந்தச் சிறு அரங்கில் பொறிக் கதவுகள், ரசம் பூசிய கண்ணாடிகள், கண்ணுக்குத் தெரியாத கயிறுகள் மற்றும் இதர பொறிகள் மூலமாக மேடையில் மாயங்கள் நிகழ்த்தப்பட்டன. ஆக, மாயாஜாலக்காரரான மெலியிசை புதிதாக வந்த சலனப்படம் கவராமல் இருந்தால்தான் அதிசயம்.

இந்நிலையில் மெலியிசுடைய அரங்கத்துக்கு அருகில் லூமியர் சகோதரர்கள் தங்களுடைய சலனப்பட நிகழ்ச்சியை நடத்த, அதைக் கண்டு களித்த மெலியிஸ், அச்சகோதரர்களிடம் தனக்கு ஒரு கேமரா – புரொஜெக்டரை (அக்காலத்தில் இரண்டு கருவிகளும் ஒரே தொகுப்பாக இருந்தன) விலைக்குத் தரும்படி கேட்கிறார். லூமியர் சகோதரர்கள் மறுத்து விடுகிறார்கள்!

வீண் செலவு செய்வதிலிருந்து தன்னைத் தடுத்தாட்கொண்டதற்காக மெலியிஸ் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் பொதுக் கவனத்தை இழந்து விட்ட சாதனம் அந்த கேமரா – புரொஜெக்டர்.

இந்நிலையில் ராபர்ட் பாவுல் வடிவமைத்திருந்த ஒரு உபகரணத்தை மெலியிஸ் வாங்கினார். இதுவும் லூமியருடைய உபகரணத்தைப்போல தெருக்களில் படம் பிடிக்க வசதியாக இருந்தது.

இப்படியாக 1896இல் ராபர்ட் – ஹௌடின் தியேட்டரில் மெலியிஸ் தனது சலனப்படங்களைக் காட்டத் துவங்கினார். அவருடைய தெரு


படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கைப் படங்கள் மற்ற படங்களைப் போல சாதாரணப் படங்கள்தான். ஆனால் தற்செயலான 'விபத்தால்' அவர் கண்டுபிடித்தது. மற்றவர்களிடமிருந்து மெலியிசை பிரித்துப் பார்க்கக்கூடிய அவருடைய பங்களிப்பாக சினிமா வரலாற்றில் முத்திரை பதித்தது. அவருடைய இந்தக் கண்டுபிடிப்பு சினிமாவை நிஜத்துக்கு அப்பால் நகர்த்தி பிரமிப்பிற்குள் தள்ளியது.

1896ஆம் ஆண்டின் ஏதோ ஒரு நாளில் 'பிளஸ்டி ஒபேரா' என்ற இடத்தை மெலியிஸ் படம்பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்த போது கேமராவுக்குள் இருந்து பிலிம் ஜாம் ஆனது. ஒருவழியாக கேமராவை சரிசெய்து மீண்டும் படப்பிடிப்பை முடித்தார்.

பின்னர் ஏற்கனவே ஜாம் ஆகிப் போன பிலிமில் ஏதாவது தேறுமா என்று கழுவிப் பார்த்தபோது ஒரு செப்பிடு வித்தைக்காரரான மெலியிசை மகிழ்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு போனது. இந்த ஜாம் ஆன பிலிமை திரையிட்டுப் பார்த்தபோது, துவக்கத்தில் தெருவில் குதிரைகள் இழுத்துச் செல்லும் டிராம் வண்டி ஒன்று, திடீரென்று சவ ஊர்வலப் பெட்டியின் பிம்பங்களாக மாறின!

இந்த விபத்தின் அதிசயத்தை 'மந்திரவாதி' மெலியிஸ் எளிதில் விட்டு விடுவாரா? ஆகவே 1896இல் "Vanishing Lady" "The Haunted Castle" போன்ற படங்களை விபத்தின் இந்த சூட்சுமத்தை கையாண்டு எடுத்தார். இப்படித்தான் 'டிரிக் சினிமா' அல்லது 'சினிமா ட்ரிக்' துவங்கியது. இதைத்தான் நாம் இப்போது 'ஸ்பெஷல் எபக்ட்ஸ்' என்று நாமகரணம் சூட்டியுள்ளோம். இப்படியாக மெலியிஸ் பிலிமில் பிம்பங்களை வெளுக்க வைத்து மறைத்து மற்றொரு பிம்பத்தைக் காட்டி, சூப்பர் இம்போசிஷன் கண்டுபிடித்தார். பிலிமின் ஓட்ட வேகத்தை கூட்டி குறைத்து ஒரு பிம்பத்தின் தோற்றத்தை பின் நிறுத்தி, மற்றொரு பிம்பத்தை முன் நிறுத்தி, ஏற்கனவே படமாக்கப்பட்ட சலனப் படங்கள் - மற்றும் மினியேச்சர்களைப் படம்பிடித்து சேர்த்து - பிலிமின் ஒவ்வொரு சட்டகத்தையும் கையினால் வண்ணம் தீட்டி - என்று மெலியிஸ் சினிமாவை ஒரு பிரம்மாண்டமான மாய உலகமாகவே சிருஷ்டித்து விட்டார்.

மெலியிசின் இந்தச் சாதனைகளைப் பார்த்து பின்வந்த இயக்குநர்கள் மூக்கில் விரலை வைத்தார்கள்.

மெலியிஸ் ஒரு நிமிடம் ஓடிக் கொண்டிருந்த சினிமாவை பத்து பதினைந்து நிமிடங்களாகப் பெருக்கினார். இப்படி அவர் பாணியில் நூற்றுக்கணக்கான படங்கள் எடுத்தாலும் அவர் பெயரை சிறப்பாக நினைவு கூற வைத்த படங்கள் 'அதிசயக் கதைகள்' (1890 இல் சின்ட்ரலா முதல்) மற்றும் நையாண்டி கலந்த சயின்ஸ் பிக்ஷன்கள்.

(An Impossible Voyage - 1904; The Conquest of the Pole - 1912)

இவைகள் தவிர மெலியிசுடைய மாஸ்டர் பீஸ் என்று எல்லோரும் அங்கிகரிப்பது நிலவுக்கு ஒரு பயணம் (A Trip to the Moon) என்ற படம் ஆகும்.

ஜூல்ஸ் வெர்னியின் (Jules Verne) கதையை குத்துமதிப்பாகத் தழுவிய நையாண்டி கலந்த படமே நிலவுக்கு ஒரு பயணம். இப்படம் விஞ்ஞானத்தின் மேல் உள்ள மோகத்தை விமர்சிக்கும் விதமாக அமைந்திருந்தது.

இதன் பிரதான பாத்திரமான விஞ்ஞானியாக மெலியிசே நடித்தார். கண்ணாடியால் மூடப்பட்ட ஸ்டுடியோ செட்டை வடிவமைத்து அதில் படமாக்கினார். ஒவ்வொரு காட்சியும் தடையற்ற வேகத்தில், பார்க்க வாக்கான இடத்திலும் கோணத்திலும் படமாக்கப்பட்டது. நடிப்பில் பங்கு பெற்ற கலைஞர்கள் முழுமூச்சாக தங்களது ஊமை அங்க அசைவுகள் மூலமே நடித்தார்கள். காட்சியோடு வாசகங்கள் இடம் பெறும் சப்-டைட்டில் முறைகூட அப்போது தோன்றவில்லை. அவர்கள் காட்சிக்குள் நுழைந்தார்கள்; காட்சியை விட்டு வெளியேறினார்கள். ஏன் பார்வையாளர்களுக்கு பணிவோடு 'சலாம்' கூட வைத்தார்கள். யாருக்குத் தெரியும் சினிமாவுக்கு இது போன்ற அதித மரியாதைகள் தேவையில்லை என்று !

இப்படத்தில் காட்சி ஜோடனைக்காக திரைச்சீலைகள் பின்புலமாகப் பயன்படுத்தப் பட்டன. இவை மட்டுமல்ல, விஞ்ஞானியை தனியே இனம் பிரித்துக் காட்ட பயன்பட்ட விசேஷக் கயிறுகள், கூம்பு வடிவ தொப்பி; ஆசிர்வதிக்கப்பட்ட காப்பாளர்கள் அணிந்த பளபள அரை டிராயர் ஆகிய அனைத்துமே நிஜவாழ்க்கைக்கு சம்பந்தமில்லாத நாடகக் கூறுகளே ஆகும்.

அதே சமயம் சினிமாவுக்கே உரிய சில உத்திகளும் கண்டுபிடிக்கப் பட்டன.


படிப்பகம்

www.padippakam.com

உதாரணமாக காட்சிகளை இணைக்கும் போது திரைகளை மூடித் திறப்பதற்கு பதிலாக, காட்டப்படும் காட்சியை நேரடியாக நீக்கி அடுத்த காட்சிக்குப் போவது முதலிய டிசால்வ் போன்ற சமாச்சாரங்கள் நாடகத்துக்கான புல்லிகள், பொறிக்கதவுகள் போன்றவற்றால் சாதிக்கப் பட்டன.

இப்படத்தில் ராக்கெட் நிலவை நெருங்கும் ஷாட் இன்றைய டாலி ஷாட் போல (Dolly Shot) காட்சி அளிக்கும். ஆனால் கேமராவை நிலவை நோக்கி கொண்டு செல்வதன் மூலமாக படம் பிடிக்கப்படவில்லை. மாறாக நிலவை கேமராவை நோக்கிக் கொண்டு வருவதன் வழியாக இக்காட்சி சாத்தியமாயிற்று. ராக்கெட் ஏறுக்கு மாறாக கடலில் விழும் காட்சி நிஜமான கடலைப் பயன்படுத்தாமல் சலனச் சித்திரத்தை வைத்து செய்யப்பட்ட அசலான 'ஜிம்மிக்' ஆகும்.

நிலவுக்கு ஒரு பயணம் என்ற இந்தப்படம் மெலியிசின் சினிமா பங்களிப்பையும் அதே சமயம் அது எல்லைக்குட் பட்டிருந்ததையும் காட்டுகிறது. ஒத்திசைவான காட்சிகளை காட்டி ஒரு கதையை முழுமையாக புரியவைக்க முடிந்தது என்பது உண்மைதான். மேலும் மெலியிஸ் சினிமாவை நாடகத்திற்குள் தள்ளுவதே தனது நோக்கம் என்பார். இதில் அவர் முழுமையாக வெற்றி பெற்றார். ஆனால் சினிமாவின் தனிப் பெரும் சாதனமாக கேமரா மற்றும் வெட்டி ஒட்டும் (Cutting Shears) வாய்ப்புக்கள் குறித்து கண்டுபிடிப்பதில் தோல்வியே அடைந்தார். அவை மற்றவர்கள் கண்டுபிடிப்பதற்காக கேமராவின் இருண்ட கருவறையிலும் பிரசவ மேஜையான எடிட்டிங் டேபிளிலும் காத்துக் கிடந்தன.

மெலியிசின் சாதனைகள் இதோடு முடியவில்லை. அவர் தயாரித்தளித்த தந்திரக் காட்சிப்படங்கள் (Trick Film) பின்னர் 1920க்களில் பிரான்சில் உதித்த கலை முன்னோடிகளின் (Avant-Grade) படங்களுக்கும், நாற்பது ஐம்பதுக்களில் தோன்றிய அமெரிக்க பரிசோதனைப் படங்களுக்கும், 60-70க்களில் எடுக்கப்பட்ட தலைமறைவு (Underground Movies) மற்றும் விடுதலையான படங்களுக்கும் (Free Movies) அடித்தளம் அமைத்தன.

இப்படியாக அமெரிக்க திரைப்படத்துறையின் துவக்கத்தில் வெளிவந்த படங்கள் முக்கியமாக கதைப் படங்கள் (Fiction) ஆவணப் படங்கள் (Documentary) மற்றும் பரிசோதனைப் படங்கள் (Experimental) என்ற போக்குகளின் கருநிலை வடிவங்களாக இருந்தன.

இந்நிலையில் கதை சொல்லும் படங்களை எடுத்ததில் முதன்மையான இடத்தை வகிப்பவர் நமது எட்வின். எஸ். போர்ட்டர் (Edwin S. Porter). இவர் எடிசனின் நிறுவனத்தில் பணிபுரிந்தவர். கலைப் பின்னணி மற்றும் ஞானம் போன்றவற்றில் போர்ட்டர் மெலியிசைவிட திறமை குறைவானவர்தான். எடிசன் பணிக்கு அமர்த்தக் காரணமே போர்ட்டர் சிறந்த கலைஞர் என்பதைவிட சிறந்த மெக்கானிக் என்பதால்தான்.

சினிமா வரலாற்றினைப் பார்த்தால் மரபுக் கலைகளில் அவ்வளவாக அனுபவமில்லாமல் இருப்பது என்பது கலைத்தன்மை மற்றும் வர்த்தகத்திற்கு ஆதாயமாகத்தான் இருந்திருக்கிறது.

தனக்குத்தானே பாதை அமைத்துக் கொள்ளக் கூடிய புதிய ஊடகமான சினிமாவுக்கு பல சமயங்களில் முரட்டுத் தனமும் வேகமும் தொடர்ந்த பரிசோதனைகளுக்கு தூண்டுதலாகவே இருந்திருக்கின்றன.

ஏற்கனவே வரையறுக்கப்பட்ட கலை உத்தி முறைகளும், கருத்தாக்கங்களும், வடிவங்களும் இல்லாமல் இருப்பது என்பது சுதந்திரமாக புதிய எதையும் முயற்சி செய்து பார்க்கவாய்ப்பளிக்கிறது போலும்.

துவக்க நிலையில் சினிமா செய்பவர் முதலாவதாக கேமரா மேனராக இருக்க வேண்டும். அவருக்கு கற்பனை வளமான படைப்பாற்றல் இருப்பதைவிட முக்கியமானது கேமராவை முறையாக இயக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பதுதான். ஒரு வேளை போர்ட்டருக்குள் அறியப்படாத மேதைத்தனம் இருந்ததோ என்னவோ!

ஆகவே போர்ட்டர் மிக இக்கட்டான அடுத்த அடியை சினிமாவின் செய்நுட்பத்தில் எடுத்து வைத்தார். அதுதான் ஆதிமுறையிலான, மேலோட்டமான எடிட்டிங் என்ற படத்தொகுப்பு முறை.

இப்படி அவர் எடுத்து வைத்த காலடியானது சினிமாவை அதன் வளர்ச்சி என்ற பிரதான பாதையில் ஓட வைத்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# "கதை கதையாம் காரணமாம்"

- ஸ்வரமஞ்சரி

" என்னதம்பி, ஏதோ எழுத உட்கார்ந்துட்ட மாதிரியிருக்கு..."

முத்தையாண்ணன் என்னருகில் வந்தபோது நான் முதல்வரியைக் கூட ஆரம்பித்திருக்க வில்லை.

"ஆமாண்ணே"

"என்ன லெட்டரா?"

"இல்லேண்ணே ஏதோ சிறுகதை" கூவம் நதியைக்கடக்க நேர்கையில் கை இயல்பாய் மூக்கைப்பொத்தி சுவாசத்தைசிறிதுநேரம் நிறுத்தி வைக்க விரும்புவதைப் போல பரபரத்த என் கையை பிரயாசைப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டேன். அவர் மூச்சில் மலிவு விலை மதுவின் மகத்துவம் இன்னும் உலராமல் இருந்தது.

"அப்படின்னா?"

"ஏதாவது சம்பவம் மூலமா நல்ல விஷயம் சொல்றது."

"ம்... ம்... என்ன எழுதப் போறா?"

"வேண்டாண்ணே. நீங்க எங்கியோ கிளம்பிட்டிருக்கீங்க."

சுற்றுமுற்றும் பார்த்தார் முத்தையா.

"கந்தசாமியண்ணனைக் காணும்.. சரி நீ சொல்லு.."

"இல்லேண்ணே உங்களுக்கு இதெல்லாம் பிடிக்காது.."

"இருக்கட்டும்பா.."

கொஞ்ச நேரத்தைக் கடத்த வேண்டிய நிர்பந்தம் அவருக்கு இருந்தது. அவர் பிடிவாதம் பிடிக்கவும் நான் சொல்ல ஆரம்பித்தேன்.

"பிரமாதமா ஒண்ணுமில்லேண்ணே. பஸ் ஸ்டாப்புல ரெண்டு நண்பர்கள் சந்திச்சுக்கிறாங்க. நம்ம விஜயநகர் மாதிரி இடம்னு வெச்சுக்குங்க."

"ம்.. எப்படி சந்திச்சுக்கிறாங்க.?"

"வேலைக்குப் போக பஸ்ஸூக்குக் காத்திட்டிருக்கார் ஒருத்தர். பேரு ராமுன்னு வெச்சுக்கலாம். அப்போ அவர் நண்பர் சுந்தர் வேறொரு பஸ்ஸில் வந்து இறங்குறார்."

இதெல்லாம் ஒரு கதையா என்பது போல சுவாரஸ்யமின்றி கந்தசாமி வரும் வழி நோக்கி விழி பதித்தார் முத்தையா.

"சரி அப்புறம்.." என்றார் வேறு வழியின்றி.

"நம்ம ராமு இருக்காரே, சரியான குடிகாரப் பேர்வழி.."

"ம்.." என்னை முறைப்பது போல்பட்டது எனக்கு.

"உங்களையில்லேண்ணே" இலேசாக சிரித்துவிட்டுத் தொடர்ந்தேன்

"சுந்தர் ராமுவை எதிர்பாராம சந்திக்கவும் ரெண்டு பேரும் நலம் விசாரிச்சுக்கிறாங்க. குழந்தைங்க சுகமெல்லாம் கேட்டுட்டு அப்படியே சுந்தர் ஒரு அம்பது ரூபாயை எடுக்கிறார். `இந்தா ராமு உன் குழந்தைங்களுக்கு ஏதாச்சும் வாங்கிட்டுப் போ' ன்னு சொல்லவும் பணத்தை வாங்க வேகமாக கை நீட்டுறார் ராமு. ஆனா சுந்தருக்கு அப்பத்தான் ஞாபகம் வந்தது போல, `இல்லே ராமு வா நானே வாங்கிக் கொடுத்திடறேன்'னு சொல்றார்.

சுந்தர் ஏன் இப்படி பேச்சை மாத்துறார்னு ராமுவுக்குத் தெரியும்.'இல்லே சுந்தர் இப்போ நான் வாங்கிட்டுப்போறேன். நீ ஏதோ அவசர வேலையா போறே போலிருக்கு'ன்னு சொல்றார். வேறு வழி



படிப்பகம்

www.padippakam.com

தெரியலே சுந்தருக்கு. பணத்தை ராமுகிட்டே கொடுத்திடறார்."

"அப்புறமென்ன, ராமு அந்தப் பணத்துல தண்ணியடிச்சுடறான். வேலைக்குப் போகாம வீட்டுக்கு வந்துடறான். சரிதானா.." என்றார் முத்தையா ரசித்தபடி.

"ஆமாண்ணே அதெப்படிண்ணே கரெக்டா சொல்லிட்டிங்க."

"இது பெரிய அதிசயமா. அம்பது ரூபான்னா ஒரு குவார்ட்டருக்காச்சு. பின்ன எதுக்காக வேலைக்குப் போகணும். பாம்பின் கால் பாம்பறியும்தம்பி .." கடகடவென்று சிரித்தார் முத்தையா. "கதை அவ்வளவுதானா?"

"இல்லேண்ணே. கதையே இனிமேதாண்ணே இருக்கு."

இனிசொல்வதற்குஎன்ன இருக்கப்போகிறது என்பது போல என்னைப் பார்த்தார்.

"ம்.. இந்தகந்தசாமிகட்டாயம்வந்துடறேன்னு தான் சொன்னான். இன்னும் காணோம். சரி. சிக்கிரம்சொல்லு. நான் இங்கிருக்கிறது தெரிஞ்சா என் வீட்டுக்காரி வந்தாலும் வந்துடுவா..ஹாங்.. அதோ வந்துட்டா. போ இனி கதை கந்தல் தான்."

"இனிமே தான் கதை நல்லாயிருக்கும்ணே"

"அட. என் கதையை சொல்றேன்பா"

அதற்குள் பார்வதியக்கா பக்கத்தில் வந்துவிட்டாள்.

"இங்கென்ன தம்பிகூட கதைச்சிட்டிருக்கிங்க?"

"ஹி.. ஹி.. ஒண்ணுமில்லே.."

"கந்தசாமியண்ணனுக்காக காத்திட்டிருக் கிங்க.."

"தெரியுதுல்ல.. பேசாம போ.."



"உங்க பொண்ணுக்கு நோட்டு வேணுமாம். ரெண்டு நாளா சொல்லிட்டிருக்கா. இல்லேன்னா நாளைக்கு ஸ்கூல் போகமாட்டாளாம்"



படிப்பகம்

www.padippakam.com

“நல்லதாப் போச்சு. போகவேணாம்.”

“இப்படிச் சொல்ல வெக்கமாயில்லே.. பேசாம இருபது ரூபா குடுங்க..”பாக்கெட்டுக்குள் கை நுழைக்கத்தாவினாள் பார்வதியக்கா.

ஆனால் முத்தையாவிடம் பலிக்கவில்லை. “போடி போசாம, நீ வெச்சிருந்தா குடு..” என்றார்.

“நாளைக்கு குழம்புச் செலவுக்குத்தான் வெச்சிருக்கேன். வேற இல்லே..”

“நானும் என் செலவுக்குத்தான் வெச்சிருக்கேன்.”

“அது என்ன செலவுன்னு எனக்கும்தெரியும். அப்படியென்ன குடிச்சே ஆகனும்னு. கொஞ்சங் கூட பொறுப்பே இல்லாம..”

அதற்குமேல் வம்பிழுக்க விரும்பாமல் போய்விட்ட மனைவியின் திசைநோக்கி “மனுசன் சந்தோசமா இருக்கவுடமாட்டாளுக” என்றார். பேச்சு பேச்சாக இருந்தாலும் கண்கள் கந்தசாமி வரும் வழியில் அலைபாய்ந்தது.

“சரிண்ணே..நீங்க கிளம்பலியா?”

“இந்தாளை இன்னும் காணுமே தம்பி. சரி. சரி. உன் கதையை எங்கவுட்டே. அப்புறம் என்னாச்சு?”

“நீங்க சொன்ன மாதிரியே ராமு தன்னோட நண்பர் கொடுத்த பணத்துல தண்ணியடிச்சுட்டு வீட்டுக்கு வந்துடறார்”

“பெண்டாட்டி சண்டை போடுறாளா?”

“இல்லேண்ணே. அந்த ஆள்வேலை பார்த்துட்டு வந்தாலும் காசு குடுக்கப் போறதில்லே. அதனால அவ பேசாம இருந்துடறா. ஆனா பிள்ளைங்க தான் பசியெடுத்து அழுதுங்க..”

அரை குறையாய் கேட்டுக் கொண்டிருந்தார் முத்தையா.

“இதுங்களுக்கு நல்ல சாப்பாடு போட முடியாட்டியும் அழுதவாய்க்கு பாலோ, ஒரு பிஸ்கட்டோ வாங்கிக் குடுக்கக் கூட வக்கில்லாமப் போச்சேன்னு வருத்தப்படறா.”

தூரத்தில் கந்தசாமி வந்து கொண்டிருந்தார்.

முத்தையாவின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பு வெளிச்சம்.

நான் சொல்லிக் கொண்டிருந்தேன். “ ராமு தன் நண்பனைப் பார்த்ததையோ அவர் பணம்கொடுத்ததையோ மனைவிகிட்டே சொல்லலே.”

“ஆமா அதை ஏன் சொல்லணும்”

“ஆனா ஏதோ திருட்டு பண்ணிட்டமாதிரி மனசுக்குள்ள துடிக்கிறான் ராமு. குழந்தைங்க அனுபவிக்க வேண்டிய பணத்தை தான் திருடிட்டதா குற்ற உணர்ச்சி ஏற்படுது. நல்லாயிருக்காண்ணே கதை..”

“என்ன நல்லாயிருக்கா..” என்றபடி கந்தசாமி வந்தார்.

“தம்பி ஏதோ கதை எழுதுறான்.. சரி.. நாம போவோமாண்ணே..” முத்தையா எழுந்து கொண்டார்.

“அண்ணே என்கிட்டே காசு கொஞ்சம் கம்மியா இருக்குண்ணே” என்றார் கந்தசாமி.

“பரவால்லே நான் வெச்சிருக்கேன். வாங்க போவோம்.”

முத்தையா என் பக்கம் திரும்பினார்.” தம்பி. அந்த ராமு மனசு திருந்தி அதற்கப்புறம் குடிக்கிறதையே நிறுத்திட்டான் கதையை முடிச்சுருங்க நல்லாருக்கும். அப்பத்தாம் பத்திரிக்கையிலே போடுவாங்க.சரியா.எங்களுக்கு நேரமாச்சு. வர்றோம்.”

அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான். என் எழுத்தைப்படித்து இவர் மாறாவிட்டாலும் ஏதாவதொரு முத்தையா திருந்துவார் என்ற நம்பிக்கை இருந்தது எனக்கும் என் எழுத்துக்கும். ●




படிப்பகம்

www.padippakam.com

# அன்புள்ள நாகரிக மாந்தரே!

இரத்தம் யாருடையதாக வேனும் இருக்கட்டும்.
நம்முடையதோ அவர்களுடையதோ
மானிடம் குருதி வடிக்கிறது.



யுத்தம் எங்கு நடந்தாலும்
கிழக்கிலோ மேற்கிலோ
அமைதி காக்கும் பூமி
குருதி கொப்பளிக்கிறது.

குண்டுகள் எங்கு விழுந்தபோதும்
வீடுகள் மீதானாலும் எல்லையின் மீதானாலும்
கட்டமைக்கும் ஆன்மா
காயம் படுகிறது.

வயல்கள் கருக்கப்பட்டால்
நம்முடைய வயலானாலும் சரி
அயலார் வயலானாலும் சரி
பஞ்சத்தால் வாழ்வு பாதிக்கப் படுகிறது.

டாங்குகள் முன்னேறினால் என்ன
பின் வாங்கினால் என்ன
பூமித்தாயின் கருப்பை மடலாக்கப்படுகிறது.

வெற்றிப் பூரிப்பானால் என்ன
தோல்வியின் சோக கீதமானால் என்ன
உயிரோடு இருப்பவர்கள்தான்
சுமக்க வேண்டும் பிணங்களை

எனவேதான் ஓ! நாகரிக மாந்தரே
யுத்தங்கள் ஒத்திப்போடுவதே நல்லது.
உங்கள் வீட்டிலும் சரி
எங்கள் வீட்டிலும் சரி
தீபங்கள் தொடர்ந்து எரியட்டும்

- Sahir Ludhiyanwi
தமிழில் : புதுவை ஞானம்



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் முகம்

மார்ச் 2002 இதழ் கிடைத்தது. நன்றி! பிரதிபா ஜெயச்சந்திரன் முதல் பாராட்டைப் பெறுகிறார். கச்சிதமான மனம் ஒன்றவைக்கும் சிறுகதை. இதற்கு அடுத்ததாக இரண்டு விஷயங்களை இணைத்துப் பார்ப்பதைக் குறிப்பிட வேண்டும். ஒன்று அயோத்திதாசர் 1909 ஜனவரி 27ல் குறிப்பிடும் "எங்களை வாதை செய்வதின் காரணம் நாங்கள் நாளுக்கு நாள் சொந்த பூமியும் பயிரிடுஞ்சமுசாரிகளாகி விடுகிறோம் என்றுதான்" - என்ற ஓரத்தூர் கிராமப் பறையர்களின் கடிதம். இரண்டு, அயன்புரம் ராசேந்திரன் நீலகண்டனின் கடிதத்தில் வருகின்ற "வர்ணம் அல்லது சாதி என்றால் முதலில் அதை ஒழித்தாக வேண்டும் என்பதால் அதை வர்க்கம் எனப் பெயர் மாற்றும் பார்ப்பனீயத்திற்கு ஆட்பட்ட மார்க்சிய தந்திரமாய்....." என்ற வரிகள். ஓரத்தூர் பார்ப்பார்கள் செய்யும் அக்கிரமத்திற்கு தலித்துகளின் சமுசாரியாக்கம்தான் காரணம் என்பது உண்மையானால் வர்க்கம் என்று பெயர் மாற்றம் (?) செய்வது பார்ப்பனீயத்திற்கு ஆட்பட்ட மார்க்சிய தந்திரம் என்பது பொய்யாகி விடும். அல்லது வர்ணம் அல்லது சாதி என்றால் ஓரத்தூர் தாழ்த்தப்பட்டோர்களின் காரணம் தவறானதாகிவிடும். அவ்வாறு தவறானதாக ஆகும் பட்சத்தில் ஓரத்தூர் பார்ப்பனர்களின் அக்கிரமங்களுக்கு வர்ணவாதிகளும் சாதிவாதிகளும் எதைக் காரணமாகச் சொல்வார்கள்? அல்லது அயன்புரத்தார்தான் என்ன சொல்வார்? சாதிதான். சாதிதான். சாதிதானா! இந்தியாவிலிருந்து டர்பன் மாநாட்டிற்குச் சென்றிருந்த ஒரே கத்தோலிக்க ஆயரான Dr. மேதகு. சின்னப்பா அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். "என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்வேன். இந்த N.G.O.க்கள் தலித் பிரச்னைகளை வெளியிட்டு ஒரு Project எழுதி வெளிநாடுகளிலிருந்து பண உதவி பெற்று தலித்துகளுக்கு உதவுகிறார்கள் என்பது என்னுடைய பொது அபிப்ராயம்" என்கிறார். அதற்கு முன்னதாக "யாரும் இந்த சாதியத்திற்கு எதிராக செயல்பட்டு அரசாங்கத்தோடு கைகோர்த்து அதன் உதவியோடு இந்த நாட்டிலிருந்து சாதியத்தை அகற்றிவிடப் பாடுபடுவதாகத் தெரியவில்லை" என்றும் சொல்கிறார். வர்க்கம் என்ற அளவீட்டை மறுப்பதன் விளைவு - சாதியத்தை இருக்க வைப்பதற்குத்தான் பயன்படும். ஆம், தலித்துகள் இருக்கத்தான் வேண்டும் என்றால், கோவேறு கழுதைகளையும், கே. டானியல் சொல்லும் 'கட்டாடி'களையும், அருந்ததியர்களையும் இன்னும் பலரையும் எப்படிப் பார்ப்பீர்கள்? அது உட்சாதிகள் என்ற பித்தலாட்டமா? அல்லது பார்ப்பனிய சதி என்ற ஏமாற்றுத்தனமா? இனியும் சொந்த பூமியும் பயிரிடுஞ் சமுசாரிகளுமாக அவர்கள் ஆவதையும், நடுத்தரவர்க்க வாழ்க்கைக்கும் மனோ நிலைக்கும் அவர்கள் மேலெழும்புதலையும், பழனி முருகனுக்கும், அய்யப்பனுக்கும், மேல்மருவத்தூருக்கும் பாதயாத்திரை போவதையும், இவற்றிற்கெல்லாம் காரணமான வெறும் சாதிப்பற்றுச் சிந்தனையையும் தலித்துகள் விட்டொழிக்கவில்லையெனில் அது அபிமானியின் தேர் போல நடுத்தெருவிலேதான் நிற்கும். சாதிய விடுதலை என்றால் என்ன? என்பதையாவது யாரேனும் சொல்கிறார்கள்? பங்காரு லெட்சுமணன் டர்பனில் பங்கேற்றுப் பேசியதும், கிருபாநிதி BJP தலைவராக உள்ளதும் சாதிய விடுதலை எனச் சொல்லலாமா?

– குருசாமி மயில்வாகனன்
சிவகங்கை

தமிழ் அடையாளத்தை சோபா சக்தி மறுக்கிறார். அது அவரது இஷ்டம். ஆனால் அவரைப் பிறர் தமிழ் அடையாளத்தோடுதான் பார்ப்பார்கள். கொரில்லா ஒன்றும் ஆங்கிலக்கதை அல்ல. உங்களின் கதைவிடலைத்தான் சென்ற இதழிலேயே கற்சுறா புட்டுப்புட்டு வைத்துவிட்டாரே. புதிய தத்துவங்களின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் பழைய ஜீன்சுகளைக் கிழித்துவிட்டுக் கொண்டு திரியும் இவர்கள், இந்த கலகக்காரர்கள், புதிதாக எதை நிர்மாணம் செய்யப்போகிறார்கள். சாதி இல்லாத சமூகம் கட்டமைக்க வேலை செய்கிறார்களா? வரிந்து கட்டிக் கொண்ட விளிம்பு நிலை வாழ்க்கையை இன்னும் பலருக்கு தானமாகத் தரப்போகிறார்களா? நாங்கள் இந்துக்கள் அல்ல என்ற முழக்கம் புகலிடத்திலும் எதிராலிக்கிறதா?



படிப்பகம்

www.padippakam.com

என்ற கேள்விக்கு பதிலே சொல்லாத நேர்மையான பதிலை அயன்புரம் ராசேந்திரனும் புதிதாக இணைந்துள்ள நீலகண்டனும் தொடரவிட்டது ஏன்? இருப்பதைத் தகர்ப்பதை உங்கள் முதன்மையான பணியாகக் கொள்ளுங்கள். அதுவே புதியதை நிர்மாணிப்பதற்கான முதல் பணியாகவும் இருக்கட்டும். சாதி வெறும் சாதியாக இருக்கும் வரைக்கும்தான் இந்தப் புளுகுகள் எல்லாம் அரங்கேற முடியும். ஆனால் ' நடந்து கொண்டிருக்கிற யுத்தம் வர்க்கசாதியப் போராட்டமாகும். ஈழ வெள்ளாளிய, கரையாரிய ஆதிக்கங்கள் போன்ற வர்க்க ஆதிக்கவாதிகளையும், தமிழகத்தில் முக்குலத்தோர், நாடார், கவுண்டர், வெள்ளாளர், வன்னியர்.. இன்னும் பல வர்க்க சாதிய ஆதிக்க வாதிகளையும் எதிர்கொள்ள, வெற்றுப்பாவான தமிழக தலித்தியம் பயன்படாது. பாதிக்கப்படுகிறோம், எனவே போராடுகிறோம். எதற்குப் போராடுகிறோம்? பாதிப்பை எப்படி நிறுத்தப் போகிறோம்? பாதித்தவர்களை என்ன செய்யப் போகிறோம்? யாரிடத்தில் நிறுத்தி விசாரணை செய்யப் போகிறோம்? அப்போது எதிர்புறமிருந்து கட்டாடிகளின் கேள்விகளுக்கும், அருந்ததியர்களின் கேள்விகளுக்கும் என்ன ஈடுசெய்ய போகிறோம்?

தமிழக தலித்தியம் ஏறக்குறைய ஒரு Project ஆகமாறிவிட்டது. இனி அது தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்கு ஏதும் பங்களிக்க முடியுமா? என்பது சந்தேகம்தான் – எனது சந்தேகம் தவறானது என்றால் புதிய கோடாங்கி வாசகர்கள் இது குறித்து விவாதத்தினை முன்னெடுக்கட்டும்.

நன்றி.

குருசாமி மயில்வாகனன்,
சிவகங்கை .

---

தலித்தியம், ஒழுங்கவிழ்ப்பு, மாற்று அரசியல் போன்ற விளிம்புநிலைச் சிந்தனைகளைத் தொகுத்து ப்ரான்ஸிலிருந்து நாங்கள் வெளியிட்ட இருள்வெளி (1998), சனதருமபோதினி (2001) ஆகியவற்றின் தொடர்ச்சியாக கறுப்பு என்னுமொரு சின்னக் கதையாடல்களின் தொகுப்பை எதிர்வரும் ஆனிமாதம் வெளியிடுவதற்காக ஒரு வளம் பார்த்து வருகிறோம்.

ஆதிக்க சாதிகளுக்கும், ஆதிக்க சக்திகளுக்கும் பீதியையும், கலவரத்தையும், குற்றவுணர்வையும் கிளப்பக்கூடிய வகையில் உங்கள் புனைவு எழுத்துக்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும், களச்செயற்பாடுகளையும், மொழி பெயர்ப்புகளையும் தோழமைகூர்ந்து எதிர்வரும் 30.04.2002க்கு முன்னதாக அனுப்பி வைத்து எமக்கு தோள்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பெருங்கதையாடல்களைச் சிதைத்துப் பார்க்கும் எத்தனத்தின் வழி நிராகரிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மௌனமாக்கப்பட்ட நமது தோழிகள் / தோழர்களது பிரதிகளையும் சேகரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள்.

நன்றி

தோழமையுடன்

சுகனும் ஷோபாசக்தியும்

தொடர்பு முகவரி :
Sugan Kanagasabai
1, Rue Honore of Balzac
95140 Garges Les Gonesse, France.
shobasakthi@hotmail.com
T.P. 00 33 66 65 31036



படிப்பகம்

www.padippakam.com

# அயோத்திதாசர் சிந்தனைகள்

## வேளாளர் விருத்தி

பெரும்பாலும் தமிழ்பாஷை வழங்குமிடத்தில் பூமியைத் திருத்திப் பயிரிட்டு சீவிப்பவர்கள் சீனராயினும், பர்மியராயினும், ஐரோப்பியராயினும் அவர்களை வேளாளரென்றே கூறத்தகும். வேளாளரென்பது பூமியை உழுது பயிரிடுந் தொழிற்பெயர். இத்தகைய சிறந்தத் தொழிலை பிராமணனென்னும் பெயரை வைத்துக் கொண்டிருப்பவனாயினும், க்ஷத்திரியனென்னும் பெயரை வைத்துக் கொணட்டிருப்பவனாயினும், வைசியனென்னும் பெயரை வைத்துக் கொண்டிருப்பவனாயினும் செய்வானாயின் அவனையும் வேளாளனென்றே கூறத்தகும்.

சகலசீவர்களையும் ஆதரிக்கக்கூடிய வேளாளத்தொழில் குன்றவும், திரவியவிருத்திக் குறையவும், நாளுக்குநாள் பஞ்சமதிகரிக்கவும் நேரிட்டக் காரணங்கள் யாதெனில், தொழிற் பெயர்கள் யாவையும் சாதிப்பெயர்களாக மாற்றி, கீழ்ச்சாதி மேற்சாதியென்னும் பொய்க் கட்டுக்கதைகளை ஏற்படுத்தி, பிராமணனென்பவன் உயர்ந்தசாதி, அவன் ஏறுபிடித்து உழலாகாது, தாழ்ந்தசாதியோனென்பவனே அவன் பூமியை உழுது சீர்படுத்த வேண்டும், அவனுக்கு அரை வயிற்றுக் கஞ்சிவார்த்து ஒருநாள் முழுவதும் வேலை வாங்க வேண்டும், அவன் வயிற்றிற்கு சரியான ஆகாரமின்றி எலும்புந் தோலுமாய்மடிந்தாலும் சந்தோஷமடைந்து அறுத்த தானியத்தை வீட்டில் சேர்த்து வைத்துக் கொண்டு தங்கள் சுகத்தைப் பார்ப்பதினால் வேளாளம் சுகம்பெருமோ, தானியவிருத்தி யடையுமோ, பஞ்சம்போமோ, சீவராசிகள் செழிப்புறுமோ, ஒருக்காலுமில்லை.

தன் மெய்ப் போலொத்த மனிதன் தனது பூமியை உழுது பயிரிட்டு தானியங்களை அளித்து தனக்கு சுகந்தருவோனை தாழ்ந்தசாதியோனென வகுத்து அவன் கஷ்டத்திற்குத் தக்கக் கூலி கொடாமல் கொல்லுவோர்களது பூமி சிறக்குமோ, தானியம் பெருக்குமோ, அவர்களின் கன்மபல விருத்தியை அவர்களே தெரிந்துக்கொள்ள வேண்டியதுதான். ஐரோப்பிய துரைமக்களின் சிறப்பையும், அவர்கள் உழைப்பையும் சற்று கண்ணோக்குங்கள். ஐரோப்பியருள் பி.ஏ. எம்.ஏ. பட்டம்பெற்று உபாத்தியாயராக விருப்பவர்கள் தங்கள் கலாசாலைப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதுடன் பூமியை உழுது பயிரிடும் வித்தைகளையும் அவர்களுக்குக் கற்பித்து கலப்பை முதலிய ஆயுதங்களையும் தங்கள் தோளின்பேரில் ஏந்தி வீடுசேருவது வழக்கமாம்.

விவேக மிகுத்தோரின் இத்தகைய கற்பனையால் மற்ற வாசிக்கும் பிள்ளைகள் தங்கள் டம்பத்தையும், கர்வத்தையும் ஒழித்து தாங்களுங் கலப்பைகொண்டு பூமி உழுது பயிரிட ஆரம்பிக்கின்றார்கள். கல்வி பெருக்குற்றும், டம்பம் கர்வ முதலியவைகளில்லாத தேசம் சீர்பெறுமா, கல்விபெருக்கற்று நாங்கள் பிராமணசாதியோர் உயர்ந்தவர்கள் ஏறுபிடித்து உழலாகாதென்னும் தேசம் சீர்பெறுமா.

இவர்கள் செய்யும் இடுக்கங்கள் சகிக்க முடியா ஏழை ஜனங்கள் வெளிதேசங்களுக்குப்போய் பிழைக்க ஆரம்பித்தபோதினும் அவர்களை வெளியேறவிடாது தடுக்க ஆரம்பிக்கின்றார்கள். காரணம் அவர்கள் போய்விட்டால் இவர்கள் பூமியை உழுது பயிரிடுவதற்கு ஆளில்லாமற் போய்விடுமாம்.

அந்தோ! பூமிகளை ஏராளமாக அனுபவிக்க ஆசைகொண்டவர்கள் ஏனப்பூமிகளை உழுது பயிரிடலாகாது. அத்தகைய பூமியைத் திருத்தி உண்பதற்கு சக்தியற்றவர்கள் பூமியின் பலனைத் தேடுவானேன். பிணங்களை அறுக்கவும், சாராயக் கடை பார்க்கவும், தோல் பதனிடவும் உத்திரவு கொடுத்துள்ள வேதமும், மநுதர்ம்ம சாஸ்திரமும், ஏறுபிடித்து வுழு துண்பதற்கு உத்திரவுகொடாதோ, தாழ்ந்தசாதி என்று தங்களிஷ்டம் போல் வகுத்துவிட்ட ஏழை தான் பூமியிற் கஷ்டப்படவேண்டுமோ, அவர்கள் வெளிதேசஞ்சென்று சுகமாகப் பிழைக்கலாகாதோ. உயர்ந்தசாதி என்போர் பணம் சம்பாதிக்க வேண்டிய இடங்களிலெல்லாம் சாதி சாஸ்திரங் கிடை யாது. தாழ்ந்தசாதியென்று அழைக்கப்படுவோர் பணம் சம்பாதிக்க வேண்டிய இடங்களில் மட்டும் சாதிசாஸ்திரம் உண்டுபோலும்.

- அக்டோபர் 19, 1909



படிப்பகம்

www.padippakam.com

# வளங்கள் பல கொண்ட தமிழகம்

அவசர யுகத்தில் அன்றாட இயந்திர வாழ்விலிருந்து விடுபட்டு இயற்கையுடன் கை குலுக்கி மகிழ்ந்து இருக்க வழி செய்வதே சுற்றுலா. சுற்றுலா அன்றும் இன்றும் மக்களை, நாகரிகங்களை, உலக நாடுகளை இணைக்கும் பாலமாகவும் விளங்கி வருகிறது.

இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு அனைவரையும் கவரக்கூடிய வண்ணம் பல்வகை சுற்றுலாத் தளங்களையும் ஒருங்கே கொண்டிருக்கும் மாநிலம் தமிழகம்தான். கல்விச் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, சுற்றுச் சூழல் சுற்றுலா, கேளிக்கை சுற்றுலா – இப்படி பலதரப்பட்ட பிரிவினரும் கண்டு களிக்கக் கூடிய வகையில் விதம்விதமான சுற்றுலாத் தளங்கள் இங்குள்ளன.

காலம் மாறினாலும் பண்பாட்டுச் சின்னங்களும் இயற்கையின் உறைவிடங்களும் அப்படியே தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்டு வருவது பெருமைக்குரிய விஷயமாகும். சுற்றுச்சூழல் பாதிப்புகளால் உலகின் பல இடங்கள் மாறுபட்டு இருந்தாலும் தமிழ்நாட்டில் இயற்கையன்னை இன்னும் இளையகன்னியாக மாறாத அழகோடு விளங்கி வருகிறாள். கால மாறுதல்களுக்கு ஏற்ப அவ்வப்போது உருவாகும் பண்பாட்டுச் சின்னங்களோடு மேலும் புதிய பொலிவுடன் திகழ்கிறது தமிழகம்.

சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவில் வங்கக் கடலின் ஓரத்தில் அமைந்துள்ளது மாமல்லபுரம். கோவில்– கட்டுமானத்தில் ஆரம்பகால திராவிட பாங்கிற்கு சான்று பகரும் வகையில் அமைந்துள்ள மாமல்லபுரத்தில் 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர்கள் கற்களில் கவிதை பாடியிருக்கிறார்கள். உலகிலேயே மிகப்பெரிய bas relief என்று கருதப்படும் அர்ஜூனனின் தவக்காட்சிச் சிற்பங்கள், ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் ரதங்கள், கொஞ்சி விளையாடும் அலைகளின் காலடியில் அமைந்துள்ள கடற்கரைக் கோவில், பாறையைக் குடைந்து உருவாக்கிய மகிசாசுரமர்த்தினி குகை, புலிக்குகை இவை எல்லாம் ஒன்று சேர்ந்து நம்மை பல நூற்றாண்டுகளுக்குப் பின்னோக்கி இழுத்துச் சென்றுவிடும்.

தமிழகத்தில் கோவில்களின் எண்ணிக்கைக்கு கணக்கே கிடையாது.ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு வகையில் பண்டைய தமிழர்களின் கட்டிடக் கலைப் பாரம்பரியத்தை எடுத்துக் கூறும். தென் தமிழகத்தில் அமைந்துள்ள மதுரை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. 12 கோபுரங்களுடன் 65,000 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த கோவிலின் ஆயிரங்கால் மண்டபம், சிற்ப வேலைகளுடன் கூடிய 124 கற்தூண்களைக் கொண்ட புதுமண்டபம் ஆகியவை காண வேண்டியவை. மதுரையின் மற்றொரு சிறப்பம்சம் வீதிகள் அனைத்தும் கோவிலைச் சுற்றி தாமரை வடிவில் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல் தெருக்களுக்கு தமிழ் மாதங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

பழம்பெரும் இந்துக் கோயில்கள் மட்டுமல்ல; மற்ற மத நம்பிக்கையாளர்களுக்கும் வேண்டிய திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழகம். மற்ற மத நம்பிக்கையாளர்களையும் வரவேற்றது தமிழகம் என்று சொல்வதே பொருத்தமானது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் ஹஸ்ரத் சையத் சாகுல் ஹமீத் அலி என்றொரு முஸ்லிம் மகான் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தார். அவர் நாகூரில் காலமானார். நாகூரில் அன்னாரது திருவுடல் புதைக்கப்பட்டது. அவரது வாரிசுகளுக்கும் அங்கேயே கல்லறைகள் அமைக்கப்பட்டன. இஸ்லாமிய சகோதரர்கள் மட்டுமல்ல, சாதி மத வேறுபாடில்லாமல் அனைவரும் வருகை புரியும் புனிதத்தலம் நாகூர் ஆகும். அதேபோல் அற்புதங்கள் பல நிகழ்த்தி மக்களைக் காப்பாற்றி வரும் அன்னை வேளாங்கன்னியின் ஆலயமும் அருகே உள்ளது. இயேசு பிரானின் தாய் அன்னை மரியாள் வேளாங்கன்னியாக இங்கு அருள்பாலித்து வருகிறார். இங்கும் சாதி மத வேறுபாடின்றி அனைவரும் வந்து அன்னையைத் தரிசித்து செல்கின்றனர். தங்கள் காணிக்கைகளைச் செலுத்துகின்றனர்.

கோவில்கள் மட்டுமில்லை. மலைவாசஸ்தலங்கள், கொட்டும் அருவிகள், அமைதி கொஞ்சும் கடற்கரைகள், இயற்கை எழில் பூத்துக் குலுங்கும் வனங்கள், சரணாலயங்கள் – இப்படி அனைத்து வளங்களையும் ஒருங்கே அடக்கியிருக்கும் மாநிலம் தமிழ்நாடு.

இத்தகைய தமிழ்நாட்டை கண்டுகளிப்பீர் இந்த கோடை விடுமுறையில்.

– தமிழக அரசின் சுற்றுலாத்துறை



படிப்பகம்


www.padippakam.com

முகப்பு ஓவியம் : அதிவீரபாண்டியன் உள் ஓவியங்கள் : மணிவண்ணன்


# தொன்று தொட்டு தொடரும் தமிழர்தம் பண்பாடு, பாரம்பரியம், மத நல்லிணக்கம்...







தமிழ் கூறும் நல்லுலகின் பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம், திருவிழாக்கள், பண்டிகைகள், தொன்மை நினைவுச் சிற்பங்கள், சின்னங்கள், உயர்ந்த மலைகள், அடர்ந்த காடுகள், நீர்வீழ்ச்சிகள், சூழல்சார் சுற்றுலா, வழிபாட்டுத் தலங்கள், பறவைகள்/வன விலங்கு சரணாலயங்கள், கடற்கரைகள் ஆகியவை உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகளை வெகுவாக ஈர்க்கின்றன.

பயணியர் சேவைக்கெனவே சுகமான சுற்றுலாப் பயணத் திட்டங்கள், உயர்தர உணவு, தங்கும் விடுதிகள், பேருந்து வசதிகள் ஆகியவற்றை வழங்குவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக உள்ளது.

***நெஞ்சினிக்க வாருங்கள் தமிழ்நாட்டிற்கு. உங்கள் சுற்றுலாக் கனவுகளை நனவாக்க காத்திருக்கிறோம்.***

*சுகமான பயணத் திட்டம் மற்றும் தங்குமிடங்களுக்கு அணுகவும்:*

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**
தமிழ்நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 044-5380178, 5384117, 5367854
***முன் பதிவு அலுவலகம்:*** 4, ஈ.வெ.ரா. பெரியார் சாலை,
(சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரில்) சென்னை 600 003.
தொலைபேசி: 044-5384356, 5382916, 5360294
ஃபேக்ஸ்: 044-5361385 E-mail: ttdc@md3.vsnl.net.in


**ஆணையாளர், சுற்றுலாத் துறை, தமிழ்நாடு அரசு**
தமிழ்நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா சாலை, சென்னை 600 002.
தொலைபேசி: 044-5388785, 5361640 ஃபேக்ஸ்: 044-5382772
E-mail: dir-tour@tn.nic.in Web site:www.tamilnadutourism.org

*Visit us at :* www.tn.gov.in


Published, Printed and Owned by Audrey Jannet Joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41. Printed at Sri Lakshmi Printers, New No. 20, (Old No.7) Big Street, Anakaputhur-600 070. Editor : Audrey Jannet Joseph

படிப்பகம்

www.padippakam.com



Postal Regn. No. TN/Chief PMG 884/2002
RNI Regn. No. TNTAM/2001/4926
படிப்பகம்